சிவமயம்.

இராமநாதபுரம் சிவகங்கை

என்னும்

உபயசமஸ்த்தான வித்துவான்களான

# கவிகுஞ்சரபாரதி

# மதுரகவிபாரதி

ஆகிய வித்வசிரோன்மணிகளும்

சென்னைமாநகரில் பிரசித்தகவியாயிருந்த

ஸ்ரீராமகவிராயர் அவர்களும்

பாடிய

# பதங்கள்.

இவை

சென்னை இராஜதானி பாடசாலைகளின் உதவி

விசாரணைத்தலைவராகிய

ம-ள-ள-ஸ்ரீ,

... விஜயரங்க முதலியார்

...கள் அருமையாய் தருவித்துத்

...திக்கொடுத்த, பிரதிக்கிணங்க

மனோரஞ்சனி பிரஸ்வில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1927 [ரூ 1—0—0

Copy Right.

Rani of Palayampatti
Palace
Palayampatti

THE MADURA TAMIL SANGAM

உ

சிவமயம்.

இராமநாதபுரம் சிவகங்கை

என்னும்

உபயசமஸ்த்தான வித்துவான்களான

# கவிகுஞ்சரபாரதி

# மதுரகவிபாரதி

ஆகிய வித்துவசிரோன்மணிகளும்

சென்னைமாநகரில்பிரசித்தகவியாயிருந்த

ஸ்ரீராமகவிராயர் அவர்களும்

பாடிய

# பதங்கள்.

இவை

சென்னை இராஜதானி பாடசாலைகளின் உதவி

விசாரணைத்தலைவராகிய

ம-ா-ா-ஸ்ரீ,

**பம்மல்-விஜயரங்க முதலியார்**

அவர்கள் அருமையாய் தருவித்துத்

திருத்திக்கொடுத்த, பிரதிக்கிணங்க

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927 [ரூ. 1—0—0

Copy Right.

சிவமயம்.

# கவிகுஞ்சரபாரதிவரலாறு.

இவர் ஜாதியிற் பிராமணர். இவருக்கு ஆனையையர் என்றும் கவிகுஞ்சரம் என்றும் இரண்டு பெயர் வழங்குகின்றன. பூர்வ காலத்தில் இராமநாதபுர ஸமஸ்தானாதிபதியாகிய இரணிய கருப்ப திருமலைச் சேதுபதியால், வேதசாஸ்திர பாரகர்களான ஸத்பிராமணர்களின் ஜீவனார்த்தமாய்ச் சேதுக்கரையில் தானஞ் செய்யப்பட்டு அதுமுதல் பரம்பரை வித்துவான்களால் அனுப விக்கப்பெற்று வருகிற பெருங்கரையென்னு மூரில் முன்தானம் பெற்றவர்களின் சந்ததிகளில் இவர் ஒருவர். இவர் இப்பொழுது அங்குள்ள பல வித்துவான்களுள் தலைமைபூண்டவரா யிருக்கின் றனர். இவருடைய தாய் வம்சத்தவர்களும் வரன்முறை வித்து வான்களே. இவருக்கு மாதாமகரான நந்தனூர் நாகுபாரதிக ளோர் மகாவித்துவான். அவர் சிவகவச நாடகம் முதலிய பல பிரபந்தங்களும், அதிவியப்பான பல கவிகளும் பாடியிருக்கின் றனர். இங்ஙனம் இக்கவிகுஞ்சரம் இருவழியிலும் வித்துவ பரம் பரை யுடையராயும், ஸ்ரீ மீனாட்சியிடத்தும் முருகக்கடவுளிடத் தும் முதிர்ந்த அன்புடையவராயும் இருக்கின்றமையானும், மதுர கவியின் புத்திரர் மித்திரராகப் பயின்றமையானும், முருகக் கடவுளது திருவருள் நிரம்பி அதிபாலியத்திலேயே இவருக்குப் பதகீர்த்தனங்களும் விருத்தமுதலிய பாவினங்களும் பாடும்படி யான திவ்விய வாக்கு உண்டாயிற்று. இவ்வாறு கிடைத்த அருள்வாக்கை இவர் துர்விநியோகஞ் செய்யாமலே, முருகக் கடவுண்மீதும் இதர தெய்வங்கண்மீதும் அநேகஞ் செய்யுட்க ளும் பத கீர்த்தனங்களும் பாடுவதேயன்றி நரஸ்துதியாய் ஒன் றும் பாடுவதில்லை. மதுரை மீனாட்சியம்மை மேல் கயற்கண் ணிமாலையும், அடைக்கல மாலையும், சோலைமலை யழகர்மீது குற வஞ்சியும், திருமுகவிலாசம் முதலிய பல பிரபந்தங்களும் பாடி, அந்தந்தத் தெய்வங்களுக் கடிமைபூண்ட தக்க பிரபுக்களிடம் பிரசங்கித்து, அவர்களால் மிக்க வரிசைகள் பெற்று வருகின் றனர். இப்பொழுதும் ஸ்ரீ ஸ்காந்த புராணத்தைக் கீர்த்தனங் களும் விருத்தங்களுமாகப் பாடிவருகின்றார். அதிலுள்ள விருத் தங்களனைத்தும் இராமாயண கீர்த்தனத்தின் விருத்தங்களையே

யொத்திருக்கின்றன. கீர்த்தனங்களின் வர்ண மெட்டுக்களாலேயே நவரசங்களும் புலப்படுகின்றன. மிகப்பெரிய இந்நூலும் விரைவில் முடிந்து அச்சியற்றப்பெறும். இக்காலத்தில் நிக்கிரக அனுக்கிரக ஆற்றலுடைய வாக்கு இவருடையதாகவே யிருக்கின்றது. இவர் நாற்பது வருஷகாலமாய்க் கிருகத்தில் ஸ்ரீராமர் படம், ஸ்ரீசுப்பிரமணியர் படம் முதலியவைகளை வைத்துக்கொண்டு நாள்தோறும் இரண்டு காலமும் தவருமல் பூஜித்து பஜனை நாமஜபம் உற்சவம் சந்தர்ப்பணை முதலியவைகளை முறையாய் நடத்திவருகின்றனர். இவருக்கு இப்பொழுது வயது எழுபதுக்கு மேலாகும். வேண்டிய அளவில் தன கனக வஸ்து வாசனுதி சகல பாக்கியங்களும் புத்திர பவுத்திர சம்பத்துகளும் ஸ்ரீ மீனும்பிகை முருகக்கடவுள் திருவருட்களால் நிறைந்திருக்கின்றனர்.

:o:

## மதுரகவிபாரதி வரலாறு.

இவர் முதற்குலத்தவர். இவருக்கும் பெற்ரோர்களால் முதலி லிடப்பட்ட நாமம் கணபதிசுப்பையர். இவர் ஆதியில் வைகைத் தென்கரை இராஜவள நாடாகிய பெருங்கரை என்னும் ஊரிலிருந்து, துவாதசாந்த க்ஷேத்திரமாகிய மதுரைமா நகரமடைந்து, ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர்களைத் தினந்தோறும் தரிசனஞ் செய்து சந்நிதி காத்துக்கொண்டிருந்தும், இம்மையிலே நன்மை செய்வோரை அனுகியும் வாழ்ந் திருந்தனர். இப்படி காலங்கழித்து வருநாளில் இவருக்கு ஸ்ரீ மீனுக்ஷியம்மை திருவருளால் இனிமையான பதங்களும் கீர்த்தனங்களும பாடும்படியான வாக்கு உதயமாயிற்று. அதனுல் இவர் கடவுண்மீதும் அநேகம் பிரபுக்கண் மீதும் பதங்கள் பாடத் தொடங்கி நாளுக்குநாள் பிரபலமாகிக்கொண்டு வருகையில், ஒருகால் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர் தரிசனுர்த்தமாய் மதுரைக்குவந்த இராமநாதபுர ஸமஸ்தானத்துப் பிரதானியான முத்திருளப்ப பிள்ளைமீது சிலபதங்கள் பாடினர். அப்பிரபு அவ்வாக்கின் மதுரத்தை வியந்து, மதுரகவி என்ற பெயரும், விசேஷ மரியாதைகளும், ஸர்வமான இவர் பின்பு சிவகங்கை முதலிய அநேகம் ஸமஸ்தானங்கள் பாளயப்பட்டுக்கள் முதலான பலவிடங்களிலுஞ் சென்று அவ்வாறே பாடிப் பரிசுபெற்றும், வித்துவ சிகாமணிகளான சந்ததிகளை யடைந்தும், மிகச் சிறப்புற்று வாழ்ந்திருந்து, எண்பது வருஷத்துக்கு முன் சிவபதஞ் சேர்ந்தனர். இவர் சந்ததியாரும் புரோவித்தியா யிருக்கின்றனர்.

---

இவ்வரலாறுகள் மேற்படி பாரதிகளின் சுதந்திரரால் எழுதியனுப்பப் பட்டு இங்கு சேர்க்கப்பட்டன.

உ

சிவமயம்.

# அட்டவணை.

—:✻:—

## கவிகுஞ்சரபதங்கள்.


| பல்லவி. | இராகம். | தாளம். | பக்கம். |
|---|---|---|---|
| சித்திவிநாயகனே | நாட்டை | ஆதி | 1 |
| இதுவென்னடி தொல்லை | தேவகாந்தாரம் | ,, | 2 |
| இத்தனைபரிசுத்தமேதையா | ஆனந்தபைரவி | ,, | 3 |
| இப்படியல்லோவந்து | அட்டாணா | ,, | 4 |
| இப்போநான்சொல்லப்போனா | பைரவி | ,, | 5 |
| இனிமேலவருக்கும் எனக்கும் | பைரவி | சாப்பு | 6 |
| இன்னமென்மேல் | முகாரி | ரூபகம் | 7 |
| உன்னதிர்ஷ்டம் | தன்யாசி | சாப்பு | 8 |
| எங்கேசுற்றியு | மோகனம் | ஆதி | 8 |
| எல்லாமறிவேன்போமையா | கல்யாணி | சாப்பு | 9 |
| எல்லோரையும்போலவே | சுத்தசாவேரி | ரூபகம் | 10 |
| என்னடிநான்சொல்லச் | பியாகடை | அடதாளம் | 11 |
| என்னதருவானென் | தேவகாந்தாரி | சாப்பு | 13 |
| ஏதுகாணுமிந்தச் | காம்போதி | ஆதி | 13 |
| ஏன்காணும்வரவரக் | கல்யாணி | ஆதி | 14 |
| ஏய்க்கிறீரென்னகாணும் | காம்போதி | ,, | 15 |
| ஒருநாள்மருவிய | எதுகுலகாம்போதி | ,, | 16 |
| ஒருநோக்கலவிக் | மோகனம் | ,, | 17 |
| கணவன்வந்தழைக்கிறான் | அசாவேரி | ,, | 18 |
| காசிருந்தாலிங்கே | மத்தியமாவதி | சாப்பு | 19 |
| கைக்கிசைந்தபெண்ணே | தோடி | ரூபகம் | 20 |
| கொடுத்தமட்டும்போதும். | கேதாரகௌளம் | ,, | 21 |
| சலுவைக்காரியவள் | சுருட்டி | சாப்பு | 22 |
| சொல்லடிபெண்ணே | புன்னாகவராளி | ,, | 22 |
| தனத்தில்நகம்வைத்தால் | சுருட்டி | ஆதி | 23 |
| தூதுவிடுத்த லிந்த | மத்தியமாவதி | ,, | 24 |
| பலபேருடனேநான் | ஸ்ரீராகம் | ,, | 25 |
| பெண்ஜனனமெடுத்தால் | அசாவேரி | சாப்பு | 26 |
| மடியினிற்குழந்தையைப் | சௌராஷ்டகம் | ஆதி | 27 |
| மானே அங்கேபோன | ரூபகம் | ரூபகம் | 28 |
| மேல்மினுக்கதைக்கண்டு | தர்பார் | ,, | 29 |
| மோசமானேனடி | ஆகிரி | சாப்பு | 31 |
| வாட்டும்வாந்தாலவற்கு | சாவேரி | ஆதி | 32 |
| வருவாரானால்வாச் | முகாரி | அடதாளசாப்பு | 33 |
| வெகுசம்பிரதாயமடி | ஆனந்தபைரவி | அதி | 34 |
| வைப்பாரிருப்பதென்ன | புன்னாகவராளி | திரிபுடை | 35 |
| வலுவிலேதேடிவந்தால் | தர்பார் | சாப்பு | 36 |

## மதுரகவிபதங்கள்


| பல்லவி. | இராகம். | தாளம். | பக்கம். |
|---|---|---|---|
| அந்தப்புளிப்பு | அசாவேரி | ரூபகம் | 37 |
| அன்னமேநீகூட்டி | மோகனம் | ஆதி | 38 |
| ஆசைநாயகன்பேசி | சங்கராபரணம் | சாப்பு | 39 |
| ஆருக்காகிலும்பயமா | பியாகிடை | ,, | 40 |
| இங்கேன்வந்தீரும் | காம்போதி | ஆதி | 41 |
| இதுக்கோவுனைநான் | பியாகிடை | ரூபகம் | 42 |
| இந்தவித்தையெங்கே | மோகனம் | ஆதி | 43 |
| இருவருறவையும் | சங்கராபரணம் | ,, | 44 |
| இளமயிலேயெனை | கண்டா | ,, | 45 |
| இனி இங்கேகடவாதையா | காம்போதி | சாப்பு | 46 |
| இன்னமுந்தோணவில்லையோ | தோடி | ரூபகம் | 47 |
| எவளுக்காகிலும்பயமா | பியாகடை | சாப்பு | 49 |
| எவள்தான்சொன்னளென்னடி | பந்துவராளி | திரிபுடை | 50 |
| எவள்வேணுமோ அவள் | பியாகடை | சாப்பு | 51 |
| என்மகள்மேலிந்தவர்ம | பியாகடை | ரூபகம் | 51 |
| என்னதான்சொன்னாடி | அசாவேரி | சாப்பு | 53 |
| என்னநேமகஞ்செய்கிறீர் | மோகனம் | ஆதி | 54 |
| என்னவார்த்தைசொல்கிருய் | மோகனம் | ,, | 55 |
| என்னைமருவிய | பந்துவராளி | சார்பு | 56 |
| கண்டவுடனேஎன்மூரணும் | பூரி | .. | 57 |
| கலந்தணைந்ததையென்ன | துசாவந்தி | ஆதி | 58 |
| கல்லிக்காரிபேச்சை | காம்போதி | .. | 59 |
| காதல்கொண்டேயிந்த | சௌராஷ்டகம் | சாப்பு | 60 |
| கூடியிருந்ததெல்லாமறந் | சௌராஷ்டிரம் | ரூபகம் | 62 |
| கோபமேதையா | பியாகடை | அடதாளசாப்பு | 63 |
| சல்லாபமாயிருக்கப் | காம்போதி | ஆதி | 64 |
| சற்றேசொல்லடாசாமி | கோனிபந்து | சாப்பு | 65 |
| சாதனைசெய்யாதே | மோகனம் | ஆதி | 66 |
| சுகமேசம்போகமாய் | புன்னுகவராளி | .. | 67 |
| சும்மாவருமோபூர்வ | அசாவேரி | ரூபகம் | 68 |
| சொல்லவேண்டுமானல் | மத்தியமாவதி | ஆதி | 69 |
| தமக்குத்தாமேவருவார் | அசாவேரி | சாப்பு | 70 |
| தன்னலேவருவார் | பியாகடை | ரூபகம் | 71 |
| தினமுமிவரைக்கூட்டி | முகாரி | .. | 72 |
| தெரிந்துக்கொண்டால் | சாவேரி | ஆதி | 72 |
| தைத்தாலென்னடி | அடாணு | .. | 74 |
| நடந்தசேதியெல்லாம் | மத்தியமாவதி | .. | 74 |
| நாளைவலியவருவாரவர்க்கு | சாவேரி | ரூபகம் | 76 |
| நானுஞ்சகிக்குமட்டுஞ் | ஆனந்தபைரவி | ஆதி | 77 |
| நீயாயவனுடன்மோடி | பியாகடை | ரூபகம் | 78 |

| பல்லவி. | இராகம். | தாளம் | பக்கம். |
|---|---|---|---|
| நீயாகிலுந்தூதுபோடி | சங்கராபரணம் | சாப்பு | 79 |
| பிழைத்துப்போமதனு | சுருட்டி | ,, | 80 |
| பேசியிருந்ததுண்டு | ஸ்ரீராகம் | ஆதி | 81 |
| மோகமானபெண்ணே | சங்கராபரணம் | சாப்பு | 81 |
| வந்ததுகண்டே | மத்தியமாவதி | ஆதி | 83 |
| வந்ததைவர | தோடி | சாப்பு | 84 |
| வந்தபிரமையினாலே | பூரிகலியாணி | ,, | 85 |
| வாரும்வாருமையா | ஆகிரி | சாப்பு | 86 |
| வருவார்பெண்ணே | சுருட்டி | ,, | 87 |

## ஸ்ரீராமகவி பதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சகியேயிந்த | காம்போதி | ரூபகம் | 89 |
| இந்தச்சளுக்கு | சுருட்டி | ஆதி | 89 |
| வருந்தவருந்த | அட்டாணு | ரூபகம் | 90 |
| மறியாதைக்கு | கல்யாணி | ,, | 92 |
| சிறுக்கிமயக்கம் | அட்டாணு | ஆதி | 92 |
| அவளிடத்தினிற் | கேதாரகௌளம் | சாப்பு | 93 |
| என்னடிமெத்த | தோடி | ஆதி | 94 |
| வருவாரடி | இந்துஸ்தான் | காப்ரூபகம் | 95 |
| ஆரைமிட்ட | பியாகடை | சாப்பு | 96 |


அட்டவணை—முற்றிற்று.

---

## பதங்களின் இராகதாள அட்டவணை.


| | | |
|---|---|---|
| நாட்டை | ஆதி | 1 |
| தேவகாந்தாரம் | ,, | 2 |
| ,, | சப்பு | 13 |
| ஆனந்தபைரவி | ஆதி | 3, 34, 77 |
| அடாணு | ஆதி | 4, 74, 92 |
| ,, | ரூபகம் | 28, 90 |
| பைரவி | ஆதி | 5 |
| ,, | சாப்பு | 6 |
| முகாரி | ரூபகம் | 7, 72 |
| ,, | அடதாளசாப்பு | 33 |
| தன்யாசி | சாப்பு | 8 |
| மோகனம் | ஆதி | 8, 17, 38, 43, 54, 55, 66 |
| கல்யாணி | சாப்பு | 9 |
| ,, | ஆதி | 14 |
| ,, | ரூபகம் | 12 |
| சுத்தசாவேரி | ரூபகம் | 10 |
| பியாகடை | அடதாளம் | 11, 63 |
| ,, | சாப்பு | 40, 49, 51, 96 |

# பதங்களின் இராகதாள அட்டவணை.


| இராகம் | தாளம். | பக்கம். |
|---|---|---|
| பியாகடை | ரூபகம் | 42. 5I, 71, 78. |
| காம்போதி | ஆதி | I3, I5, 4I. 59, 64. |
| ,, | சாப்பு | 46 |
| ,, | ரூபகம் | 89 |
| எதுகுலகாம்போதி | ஆதி | I6 |
| அசாவேரி | ஆதி | I8 |
| ,, | சாப்பு | 26. 53. 70. |
| ,, | ரூபகம் | 37. 68. |
| மத்தியமாவதி | சாப்பு | I9 |
| ,, | ஆதி | 24. 69. 74. 83 |
| ,, | ரூபகம் | 69 |
| தோடி | ரூபகம் | 20. 47 |
| ,, | சாப்பு | 84 |
| ,, | ஆதி | 94 |
| கேதாரகௌளம் | ரூபகம் | 2I |
| ,, | சாப்பு | 93 |
| சுருட்டி | சாப்பு | 22. 80. 87 |
| ,, | ஆதி | 23; 89 |
| புன்னுகவராளி | சாப்பு | 22. 56 |
| ,, | திரிபுடை | 35 |
| ,, | ஆதி | 67 |
| ஸ்ரீராகம் | ஆதி | 25. 8I |
| சௌராஷ்டரம் | ஆதி | 27 |
| ,, | சாப்பு | 60 |
| ,, | ரூபகம் | I2 |
| தர்பார் | ரூபகம் | 29 |
| ,, | சாப்பு | 36 |
| ஆகிரி | சாப்பு | 3I. 89 |
| சாவேரி | ஆதி | 32. 72 |
| ,, | ரூபகம் | 76 |
| சங்கராபரணம் | சாப்பு | 39. 79. 8I |
| ,, | ஆதி | 44 |
| கண்டா | ஆதி | 45 |
| பந்துவராளி | திரிபுடை | 50 |
| ,, | சாப்பு | 56 |
| பூரி | சாப்பு | 57 |
| துசாவந்தி | ஆதி | 58 |
| கௌளிபந்து | சாப்பு | 45 |
| பூரிகலியாணி | சாப்பு | 85 |
| இந்துஸ்தான்காப்பி | ரூபகம் | 95 |

சிவமயம்.

# கவிகுஞ்சரப்பதங்கள்.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

சித்திவிநாயகனே உன்
செஞ்சரணமலரைத் தஞ்சமென்று நம்பினேன்.

அநுபல்லவி.

சத்தியங் கயற்கண்ணி சந்நிதிக்கெழில்சூழும்
வர்த்தனை மிகும்பொற்ரு மரைக்கரை தனில் வாழும் (சித்தி)

சரணங்கள்.

கோலப் பணிலந்திகழ் நீலத் திரைகடல்சூழ்
ஞாலத் தந்தணர்மறை யாலெப் பொழுதுமலர்
கோலிப்பூசைபுரியும் மூலப் பொருளே அநு
கூலப் பலன்றந்தெனைப் பாலித்தருள்புரிவாய் (சித்தி)

நஞ்சிற் கொடியகுண முஞ்சிற் றறிவுங்கொண்ட
வஞ்சப் பகைவர்செய்யி டஞ்சற் பொருதென்மனம்
கஞ்சப் புனல்போற்றளர்ந் தஞ்சித்தவிக்குமென்றன்
நெஞ்சிற்கவலைகள்தீர்த் தஞ்சலென் றருள்செய்வாய் (சித்தி)

செக்கர் வானிறச்சடைச் சொக்கலிங் கேசாரு
மைக்குக் ராபன்னிரு கைக்கும ரன்றுணைவா
இக்கனைய மதூர சொற்கவி குஞ்சரந்து
திக்கவ ரமருள்தூ திக்கையங் கரனுன (சித்தி)

இராகம்-தேவகாந்தாரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவென்னடி தொல்லையாய்வந்திருக்குது
இணங்காதடி போடி

அநுபல்லவி.

மதுவளர் பொழிற்றிருப் பரங்கிரிமேவிய
மால்மருகனும்வடி வேல்முருகனால் நமக் (கிது)

சரணங்கள்.

இரவும் பகலும் அடிக்கடிதூ துனையவர்
விடுப்பதும் - அதற்
கிசைந்து கல்வி செய்யப் பசந்தெனவேசென்று
படுப்பதும் - அந்தக்ஷணமே
துறவு தெரிந்து சொந்தக் காரியன்றனைக்கண்டு
பிடிப்பதும் - அவள்
தோணின படிக் கென்னை வீணிலே திருப்பாட்டு
கொடுப்பதும் - இதில்
சுகமெவ்வளவும் பயிலே மயிலே குயிலே இன்று
தொடுத்துநமதுவீட்டை அடுத்திருக்கவொட்டாமல்
(இதுவென்னடி)

தலை முறை யையிழுத்துப் பலவிதமாயவள்
பழிப்பதும் - நேரே
தகுந் தொரு வார்த்தைகள் பகர்ந்திடாமலவர்
சுளிப்பதும் - அவருங்கூடத்
தலை குனியும் படிக்குச் சிலவசனங்கள்சொல்லிக்
கிழிப்பதும் - நான்
தகைப்புடன் இடுக்கினில் அகப்பட்ட எலிபோல
விழிப்பதும் - இது]
சகஜமலவே யனமே தினமே சொனமே தந்
தாலுமென்னாலொருக் காலுமாகாதம்மா
(இதுவென்னடி)

தினமு முனக்குமறு வேலேகள் யாதொன்று
மிலேயா - பக்தர்
சிந்தைதனி லுதிக்கும் கந்தன் றனக்குநான்
விலேயா - வேண்டுமென்றின்னும்
மனதிருந்தா லென்றன் வளவு மவருக்கென்ன
தொலேயா - கவிகுஞ்சரம்
வழுத்துங் கவியெழுதி வரவழைக்க வெனக்கு
மலேயா - நினேக்கும்போது
மனதுபயஞ்செனிக்குதே மாதே சூதே செய்து
மறுத்துமென்றனேமெள்ளப் பொருத்தவந்தழைக்கிருய்
(இதுவென்னடி)

---

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இத்தனேபரி சுத்தமே ஷைதயா
என்றன் முரு கையா.

அநுபல்லவி.

பக்தரக்ஷக கர்த்தனேயுமை
பாலனேவடி வேலனேசாமி (இத்தனே)

சரணங்கள்.

தோகையைத்தூது விடுத்துக்கொணர்ந்தும்
துலங்குபஞ்சணே மீதிலிருந்தும்
நாகபந்தசை யோகம்புரிந்தும்
நடந்தவகைகள் தெரிந்துமிருந்தும்(இத்தனே)

குறிகள்குங்கும களபவாசம்
குமுகுமென்கு தெவருலாசம்
சுரதலீலேசெய் யாதவிசேஷம்
சொல்லுதேஉன்றன் முகவிலாசம்(இத்தனே)

கனிமிகுகுன்றக் குடியில்வாசனே
கவிகுஞ்சரத்தைக் காக்கும்நேசனே
மனமகிழ்ந்தெனே மேவுமுலாசனே
வர்ணமயிலின்வ ளர்குமரேசனே (இத்தனே)

---

இராகம்-அட்டாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்படியல்லோவந்து சிக்கிக்கொள்ளவேண்டும்
இனிவிடுவேனோவுன்னை.

அநுபல்லவி.

முப்பணயங்கொடுத்த முருகனெனதிடத்தில்
மோடிசெய்திருந்தவன் நாடியென்கண்ணிக்குள்ளே (இப்படி)

சரணங்கள்.

ஓங்கியமலையடி வாரத்திலே - நமக்
குகந்ததிருவிருப்பி னோரத்திலே
தீங்கில்லாதசுக்கிர வாரத்திலே - நல்ல
திவ்வியசந்திரிகையுள்ள நேரத்திலே
சிறக்கப் பணிகளிட்டுக் கருக்குச் சரிகைக் கச்சை
யிறுக்கிப் பிலுக்கிநடந் தொருக்கட வினுக் குள்ளே (இப்படி)

விருப்பமுற்றிருந்தவென் மதிபோலே - என்றன்
விரகமிடிதவிர்க்கும் நிதிபோலே
கருப்புமதனுக்கொத்த ரதிபோலே- என்னைக்
கலந்தணைந்துரக்ஷிக்கும் பதிபோலே
கரைந்து புவன மெங்குந் திரிந்தலைந்து தேடின
மருந்துதன் காலடியி லிருந்துகண் டதுபோல (இப்படி)

நயமல்லிகைகுழலிற் சூடிக்கொண்டு - அபி
நயங்களும்செய்துவிளை யாடிக்கொண்டு
குவிமுலையைத்திறந்து மூடிக்கொண்டு - கவி
குஞ்சரம்பதத்தையும் பாடிக்கொண்டு
குமரனென் றென்னிடத்தில் சுமுகம தாய் மகிழ்ந்து
விமரிசை யாகவிப்போ சமரதி லீலைசெய்ய (இப்படி)

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்போநான் சொல்லப்போறு லாயாசங்காணும்
இனிமேலல்லவோ தோணும்

அநுபல்லவி.

விற்பன ஞனகுன்றைச் சுப்பிரம ணியக்கடவுள்
விருப்பமா கவேசெல்வஞ் செருக்கிறு ரடிமானே. (இப்போ)

சரணங்கள்.

முட்டுண்டா லல்லாமல் குனிய மனம் வராது
மொய்குழலேயேழை சொல்லம்பலமேறுது
பொட்டியா ளாசைகொஞ்ச மட்டினிலே மாறுது
புளியேறிப்பல்கூசத் தின்றாலல்லால் தீராது
இஷ்டமாகவேயெண்ணிப் பொருளெல்லாங் கொடுக்கட்டும்
இனக்காரிதெந்தனக் கலவிகள் தொடுக்கட்டும்
ஒட்டினிலகப்பட்ட சிட்டுப்போல் படுக்கட்டும்
உருவினகோலமாக்கிப் பிறகிங்கே முடுக்கட்டும்
(இப்போ)

முற்சொல்லிப்பகையாளி யாகுமுலகில் ஞாயம்
மும்மரங்கொள்ளாதிப்போ செம்மையா யவனேயம்
மைச்சிமிழும்பொடியும் வைத்திருக்கு முபாயம்
வரவரத்தெரியட்டும் நமக்கென்னடி யதாயம்
சொச்சஞ்சோர்வுள்ளதெல்லாஞ் சரிவரப்பறிக்கட்டும்
தொடுசுண்டென்றுமடியில் கைபோட்டுமறிக்கட்டும்
சச்சைநடந்திந்தத் வதருவெல்லாஞ்சிரிக்கட்டும்
தையலேயென்சொல்லப்போ தல்லவோசரிக்கட்டும்

(இப்போ)

கவனமில்லாமற்சும்மா திரிவோர்க்கென்ன பிரியம்
கிட்டப்படுத்தாலல்லோ உட்காச்சல் தெரியும்
கவிகுஞ்சரந்தமிழ்க்கு மகிழ்ந்துநிதி சொரியும்
கந்தனுக்கின்னுங்க சந்தாலப்பால் முறியும்
அவளைத்தானேமிகவுங் கொண்டாடிக்கொள்ளுகிறார்
அந்தரங்கமாகவே மொழிந்தாலுந்தள்ளுகிறார்
எவளவுங்கவலேக ளெண்ணமல்விள்ளுகிறார்
இளங்கன்றுபயமறியா தென்றுப்போல்துள்ளுகிறார்

(இப்போ)

இராகம்-பைரவி-தாளம்—சாப்பு.

பல்லவி.

இனிமேலவருக்கும் எனக்குபொருபோதும்
இணங்காதடி போடி.

அநுபல்லவி.

கனிமிகு தண்டலை சூழும்சி கண்டிமலைக்
கந்தசாமிவலிய வந்து நலஞ்சொன்னாலும் (இனிமேல்)

சரணங்கள்.

வீணிலென்வாய்மொழி போக்கிறாய்-பெண்ணே
மிகவுமென்மனதைப்புண் ணாக்கிறாய்-என்றுந்
காணார்போலெனைத்தானே தாக்கிறாய்-சாண்
காட்டில்முழக்கொம்பு பார்க்கிறாய்-ஆரும்
கோணிக்கொடுத்துக்கோடி கிடைப்பதிற்கோணாமல்
காணிகிடைத்தாற்போதுங் கைக்காயிரந்தந்தாலும்.
(இனிமேல்)

ஏதடியொருபோதும் மறக்குமோ - பாரில்
இனிமேலெபபடிக்குப்பெண் பிறக்குமோ - கொண்ட
காதல்மனதைமிஞ்சிப் பறக்குமோ - சொல்லாய்
கறந்தபால்திரும்பப்போய்ச் சுரக்குமோ - பொல்லாச்
சூதுக்காரிகள்மித்திர பேதத்தைநிஜமென்று
காதிற்கொண்டென்மனதைச் சோதித்தறிந்தபட்டும்
(இனிமேல்)

கொட்டஞ்செய்சூரசங் காரன் - கவி
குஞ்சரந்தமிழ்க்கா தாரன்
சிட்டபாலன்மயில் வீரன் - வள்ளி
தெய்வானைமருவுஞ்சிங் காரன்
இஷ்டமுடன்புனுகு சட்டந்திமிர்ந்தென்கையைத்
தொட்டநல்வேளையின்னம் விட்டிடாமற்சேர்த்தாலும்.
(இனிமேல்)

இராகம்-முகாரி - தாளம்-ரூபகம்.

பல்லவி.

இன்னமென்மேல் வர்மமோ
இதுவுநல்ல தர்மமோ

அநுபல்லவி.

பன்னகபூ ஷணனருள்வர
பாலா வடி வேலா சாமி (இன்ன)

சரணங்கள்.

கன்னிவயதி லன்னையறியக்
கைப்பிடித்தென்னைக் கலந்து புணர்ந்து
உன்னைப்பிரியே னென்றுதலைதொட்டு
உறுதிமொழிகள் பகர்ந்து
பின்னொருத்தியை யென்படுக்கையில்
பிரியமுடன்வைத்து மகிழ்ந்து மிகுந்த
சொர்னவருஷம் பொழிந்தனுதினம்
சுகித்திருப்பதைச் சகித்திருக்கையில் (இன்ன)

பெண்கள்தமது வாழ்க்கையைமறு
பெண்கள்ரமிக்கமனது கொண்டு
கண்குளிரவே பார்ப்பவர்உல
கந்தனிலெவ ருண்டு
மண்சொல்கரும்புகசக்குவ தெல்லாம்
வாய்க்குற்றமென்று நோக்கம் கொண்டு
தன்மையாகவே விதியை நொந்துநின்
தஞ்சமென்றுநா னஞ்சியிருந்தும் (இன்ன)

குதிரைதூக்கிப் போட்டுத்திரும்பக்
குழியும்பறித்தது போலே
ததியி லிதவஞ்சகம் செய்துமிந்தச்
சலிப்பென்னவொருக் காலே
மதுரமாகியகவி குஞ்சரத்தை
வர்த்தனைசெய்துமென் மேலே
நிதிதந்துதவி யெனைத்தழுவிய
நேசனே குமரேசனேசாமி (இன்ன)

இராகம் - தன்னியாசி—தாளம் - சாப்பு.

பல்லவி.

உன்னதிர்ஷ்டம் சாமி இஷ்டங்கிடைத்தது
உபசார மெனக் கென்னடி.

அநுபல்லவி.

கன்னியே முருகன்பாற் சென்றுயிவ்வேளைக்
காகமேறக் கனி விழுந்த நல்வேளை (உன்னதிர்)

சரணங்கள்.

உண்டி மன்னவி சேஷத்தினாலும்
உள்ளங்கனிவுற யான்சொன்னதாலும்
பண்டுநீசெய்தபூ ஜாபலத்தாலும்
பழநழுவிப்பாலில்வி ழுந்தாப்போலும் (உன்னதிர்)

கருத்திற்கேற்கந டப்ப தென்சோலி
கரும்புதின்பதற் குண்டோகைக்கூலி
பொருத்தஞ்சேர்ந்த தடிஅநுகூலி
பூவையர்க்குள்ளேநீ பாக்கியசாலி (உன்னதிர்)

நம்பினபேர்கள்கலி பறந்தோட
நவிலுங்கவிகுஞ்ச ரந்தமிழ்பாடத்
திண்புயன்குன்றை முருகனைக்கூடச்
செல்வர்பதினாறும் பெற்றுக்கொண்டாட (உன்னதிர்)

---

இராகம் - மோகனம்- தாளம் - ஆதி.

பல்லவி.

எங்கேசுற்றியுமவ ரிங்கேதானேவருவார்
இருக்கட்டும் பார்த்துக்கொள்வோம்

அநுபல்லவி.

கங்கைதிங்களணிந்த சங்கரனருள்குன்றைக்
கடம்பனின்னமுமெத்த இடும்புபேசித்திரிந்து (எங்கே)

சரணங்கள்.

எடுப்பார்கைப்பிள்ளையைப்போல் நடத்தைகொண்டலைகிறார்
இதிலென்னபலன் கிட்டுமோ - கையில்

முடிப்புமுடிப்பாய்ப்பணங் கொடுக்காமல்வேறொருத்தி
முகம்பார்க்கச்சரிக் கட்டுமோ-அடி
மடக்கொடியேமனப்பால் குடிக்கிறாரதைக்கண்டு
மலைக்காதேஓடவிட்டுப் பிடிக்கவேண்டுமல்லாது
எடுத்தளடுப்பிற்றானே தடிக்கில்போட்டிடநமக்
கென்னஅகத்தியமடி மின்னேயென்றனைவிட்டு
(எங்கே)

பொறுபொறுபதறாதே ஒருகனவினிலென்ன
பொழுதுவிடிந்து போமோ - அந்தக்
கிரியையறியாமலே வெருவியினிநமது
கவுரவம்விட லாமோ - எங்கும்
பரப்பரப்பாகச்சென்று தரையைவிட்டுச்சிலம்பம்
படிக்கவெண்ணுகிறது நடக்குமோ உனக்கிந்தக்
குறிகுணமெல்லாஞ்சற்றும் தெரியாமல்வலியப்போய்க்
கொஞ்சத்தனமாயென்னைக் கெஞ்சிப்பேசவெண்ணுகிறாய்
(எங்கே)

செஞ்சொற்கவிகுஞ்சரம் நெஞ்சிலுதித்துக்கிருபை
செய்தருளனு கூலன் - அடி
வஞ்சியேநிதம்வள்ளி குஞ்சரியையணைந்து
மகிழ்ந்தவைவடி. வேலன் - என்மேல்
கொஞ்சவயதில்மயல் மிஞ்சிமருவிமுத்தம்
கொடுத்தசண்முகநாதன் நடத்தைநானறியேனோ
அஞ்சினாலவர்மெத்த மிஞ்சுவரென்னுடைய
அதிர்ஷ்டம்வலியச்சேர்க்கும் பதட்டமென்னடிபோடி
(எங்கே)

---

இராகம் - கல்யாணி - தாளம் - சாப்பு.

பல்லவி.

எல்லாமறிவேன் போமையா - தேவரீர்சேதி
இனிமேலும்நட வாதையா

அநுபல்லவி.

வல்லாளனேபரங் குன்றினில்வாசனே
மாமாயஞ்செய்தென்னை நீமருவும்நடத்தை (எல்லாம்)

சரணங்கள்.

வெல்லவட்டுப்போல்வார்த்தை சொல்லியென்றனையெத்தி
மின்வெட்டிற்பணம்பார்த்து மிரட்டவும்மாலேசத்தி
அல்லகாணுமிந்தப் பிலுக்கிற்காரியம்வெற்றி
யாகுமோபோமுமக் கார்சொன்னாரிந்தப்புத்தி
ஆதரத்தொடு நீர்படித்திடு
சூதுவித்தையெ லாமறைத்தெழு
நீதமுற்றவர் போலமெய்ப்புட
னோதுமித்திர பேதமைத்தொழில் (எல்லாம்)

நாக்குள்ளீரம்பேசிக் கொக்குப்பிடிக்கும்வித்தை
நமக்குத்தெரியுமிங்கே பலியாதந்தநடத்தை
ஏற்குமிடத்தினிலே செய்தாலல்லவோசத்தை
ஈக்கலையாமற்றே னெடுக்குந்தந்திரத்தை
யென்னிடந்தனி லேநயந்துரை
பண்ணுநீர்துரை யேசெயும்வகை
இன்னமுந்தெரி யாததோவுயர்
மன்னனேகுண நன்னயங்களே (எல்லாம்)

கங்கையணியுஞ்சங் கரன்ருள்பாலனே
கவிகுஞ்சரத்தை ரக்ஷிக்குங்குணாளனே
மங்கைவள்ளிகுஞ்சர மருவும்லோலனே
வன்னமயிலின்மிசை வரும்வடிவேலனே
மாகனம்பெறு யோகனேதன
தாகவந்துவி வேகயோசனே
யாகவேசொல்லி யேகபோகசை
யோகமேசெய்யு மோகவிந்தைகள் (எல்லாம்)

---

இராகம்-சுத்தசாவேரி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

எல்லோரையும் போலவேநீ
எண்ணலாகு மோடிபோடி

அநுபல்லவி.

வல்லமைசேர்ந்தருள் செல்வனெனுஞ்சுப்பிர
மண்ணியனிடத்தினில் கெண்ணியமில்லாமலே (எல்லோ)

சரணங்கள்.

6932

சாடைதெரிந்து கொள்ளவேண்டும்
தந்திரமாகவே விள்ளவேண்டும்
சேடியர்போ தனையைநிக்கிரகஞ்
செய்துதள்ள வேண்டும்
மோடியென்னடி பாலும்பதக்கு
மோரும்பதக்கென் றுரைக்கத்தகுமோ
முக்கியமதா யையன் சக்கியம் சிந்தாமணிப்
பொக்கிஷ மென்றுநி னைக்கவேண்டு மல்லால் (எல்லோ)

பானைச்சோற்றுக்கொன்று தானடிபதம்
பழகியுந்தெரியா தென்னடிவிதம்
ஞானபண்டிதன் கருத்தின்படியே
நடப்பதே விதம்
சீனிச்சர்க்கரைமாவுஞ் சரியாய்ச்
செப்பினுலார்க்கு மொப்புமோ இதே
தெம்படி யென்சொல் நம்படி முழு
வம்புக ளாகஇடும்புகள் பேசியே (எல்லோ)

அரகரவென்பார்கள் கோடி
ஆண்டிக்கன்னமிடார்கள் தேடி
பொருதில்வேடிக்கை பார்ப்பவர்க்கென்ன
பொருள்செலவுமுண் டோடி
குருதிவேற்கொண்ட முருகனைக்கவி
குஞ்சரம்பணி செஞ்சரணனைக்
கொஞ்சி மருவியே ரஞ்சிதமாகிய
வஞ்சியே சாமிக்குள் ளஞ்சி நடவாமல் (எல்லோ)

---

இராகம் - பியாகடை - அடதாளம்.

பல்லவி.

என்னடிநான் சொல்லச்சொல்ல விபரீதம்பண்ணுகிறுய்

அநுபல்லவி.

மின்னிலவேற்குமரன் தன்னையணைவதற்கு
மெள்ளமெள்ளவேகிளிப் பிள்ளைக்குச்சொல்வதுபோல் (என்)

சரணங்கள்.

பூலோகத்தினிற்பெண்கள் பஞ்சமோ - உங்கள்
பொதுமின்னூர்களுக்குள்ள வஞ்சமோ
மேலுமுனக்கீந்தது கொசஞ்மோ - அடி
மின்னேயின்னம்வேறேபிர பஞ்சமோ - அநு
கூலமறிந்துசொன்ன லெடுக்கிருய்பெருமூச்சு
குருவுக்குமிஞ்சினசீ ஷன்போலவேயாச்சு
ஆலம்போலிப்போதென் வார்த்தைகசந்துபோச்சு
அடிக்கஅடிக்கப்பந்து விசைகொண்டதுபோலாச்சு
(என்னடி)

முன்பின்வரும்யோசனை பாராயோ - எங்கள்
முருகனுன்வீட்டுக்கிள்ளுக் கிரையோ
பின்னேவலியவந்து சேராயோ-மெத்தப்
பிரியம்பண்ணிக்கொள்வது மேரையோ - ஆரும்
சொன்னதைமதியாமல் துள்ளியே குதிப்பாரோ
துடுக்காகப்புருஷர்முன் னடிக்கடியெதிர்ப்பாரோ
சின்னப்புத்திதெரிந்தா லுன்வாசல் மிதிப்பாரோ
தேசத்திலுனையரைக் காசுக்கு மதிப்பாரோ
(என்னடி)

பாடுஞ்செந்தமிழ்க்கரு ணேசன் - தடம்
பணைசூழ்குன்றக்குடியில் வாசன்
கூடுங்குறவள்ளிப்பிரா ணேசன் - கவி
குஞ்சரந்துதிசுப்பிர காசன்- எங்குந்
தேடிநிதமுங்கோடி கோடிவானவர்பூசித்
திறைஞ்சுங்குமரனுடன் சிறந்துமுன்போற்பேசி
ஊடல்செய்யாமலின்னம் கூடிக்கொள்வதேவாசி
உட்புலன்றனைச்சொன்னே னப்பாலுன்மனராசி
(என்னடி)

இராகம் - தேவகாந்தாரி—தாளம் - சாப்பு.

பல்லவி.

என்னதருவானென் றிணக்கஞ்செய்தாயடி - உனக்கவ
னென்னதருவானென் றிணக்கஞ்செய்தாயடி

அநுபல்லவி.

பின்னுஞ்சொல்லுகிறேன் வேலவனேவிரண்டு
பெண்டுக்குள்ளேசிக்கிக் கொண்டுவிழிக்கிறவன் (என்ன)

சரணங்கள்.

பெட்டிமகன்சொக்குச் செட்டி-வாய்ப்
பேச்சுமட்டும்வெல்லக் கட்டி-வெகு
இஷ்டமதாகப்ப கட்டி-பைய
எத்திக்காரியங்கொள்ளக் கெட்டி-பல
பட்டடையுங்காலடி கட்டித்திருநீறள்ளி
இட்டுப்பொருளையெல்லாம் தட்டிப்பறிக்கிறவன் (என்ன)

சண்டைக்கெழுந்துசூரை யடிப்பான்-கையில்
சத்தியிருந்துங்கோழி பிடிப்பான்-பிறர்
பெண்டைப்பிடிக்கத்துடி துடிப்பான்-வீணே
பிலிக்கிமயில்மேலேறி நடிப்பான்
எண்டிசைதனில்ஞான பண்டிதனென்றுபிணி
கண்டவர்களைக்காத்துக் கொண்டுதிரிகின்றவன் (என்ன)

சித்தன்சிகண்டிமலை வசித்து-நறுந்
தேனுந்தினைமாவும் புசித்து-வாழும்
முத்துக்குமரன்றனை யிசைத்து-அதி
மோகங்கொண்டிருக்கிறாய் ருசித்து
சித்தமுங்கவிகுஞ்ச ரத்தைரக்ஷிக்கும்வேலை
வைத்திருப்பவனுனக் கஸ்தரொக்கமாவே (என்ன)

---

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதுகாணுமிந்தச் சாதுரியவித்தைகள்
இங்கேநடவாது போமையா

அநுபல்லவி.

சாதுபோலவேவந்து ஓதுறீரென்னகாணும்
சமரிற்சூரனைவென்ற குமரையரேசபாசு (ஏது)

சரணங்கள்.

உனைப்பிரியேனென் றெனக்குறுதிகள்சொல்லி
உகந்துலீலைகள் தொடுத்தீர்—அந்த
க்ஷணத்தில்நடந்தசேதி யினக்காரியிடஞ்சொல்லிச்
சண்டைபிடிக்க விடுத்தீர்-தினைப்
புனத்தில்மங்கையைச்சேர்ந்த மனத்திடங்கொண்டுபக்தர்
பூலோகமோவென்றிடுஞ் ஜாலத்தொழில்களெல்லாம்
எனக்குந்தெரியுமென்று நினைக்காமல்நுனிநாவில்
இஷ்டம்பேசுறீர்பளா சட்டமாச்சுதுபோம்போம் (ஏது)

எத்திப்பேசிப்பகட்டி வெற்றிகொள்ளும்நடத்தை
இசைந்தவிடத்திற் செல்லலாம்-இங்கே
இத்தனைவசனங்களேன் வியர்த்தமாய்ச்செய்கிறீர்நனைந்
திருந்தாலல்லவோ கெல்லலாம்-பாரில்
மெத்தப்படித்தவர்க்குப் புத்திகொஞ்சமென்பது
மெய்யாயிருந்ததுகாணையாவுமதளவில்
பக்தரக்ஷகஜெக கர்த்தரேயிதுதன்னைப்
பார்த்தபுத்தியோவெகு நேர்த்தியாச்சுதுசாமி (ஏது)

படியிலுயர்ந்தகுன்றக் குடியில்வளர்ந்திலகு
பன்னிருகை வேலனே-திவ்ய
வடிவுசேர்ந்தருளும்பொற் கொடிமின்வள்ளிதெய்வானை
மருவிமகிழும் லோலனே-நாளும்
கெடிசேர்கவிகுஞ்சரம் குடியைரக்ஷணைசெய்து
கீர்த்திபெறுஞ்சண்முக மூர்த்தியேமகிழ்வாக
நெடுகிலுமெனைச்சேர்ந்த படியன்றிவேறொரு
நீலிவலைக்குட்சிக்கிச் சாலஞ்செய்கிறீராஹா (ஏது)

---

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

பல்லவி.

என்காணும்வரவரக் கணிசங்களில்லாமல்
இப்படிசெய்துகொண்டீர்

அநுபல்லவி.

ஆங்காணும்தென்குன்றை ஆறுமுகவேலரே
ஆசைகொண்டாலுமன ரோசம்வேண்டாமோசாமி (ஏன்)

சரணங்கள்.

நடத்தையொருபோதையி லறிந்துகொள்ளவேண் டாமா
நாள்தோறும்பழகியிப் படிதெரியாமற் போமா
கொடுப்பதுங்கொடுத்துக்கொல் லைவழிபோக லாமா
கொடியவஞ்சகமின்னு ரடியில்மிதிக்க லாமா
கொஞ்சத்தனமாயவள் மிஞ்சிப்பேசிட அதற்
கஞ்சிப்பயந்துமெள்ளக் கெஞ்சிப்பேசுநீரையோ
(ஏன்காணும்)

உள்ளநாளுள்ளமட்டும் உமக்கிதேதொழி லாச்சே
உற்றோர்வசனங்காதில் சற்றுமேறுமற் போச்சே
தெள்ளித்தெளிந்துஞ்சிறு பிள்ளைமதிபோ லாச்சே
சிறுக்கிமருந்தில்தலை கிறுக்கிமயங்க லாச்சே
தெருக்கள்தோறுமுமைச் சிரிக்கஅவள்முன்னே
பறக்கவிழித்துக்கொண் டிருக்கிறீரேசாமி
(ஏன்காணும்)

அந்தமாதுரதிக்கும் மேலான சிறையா
ஆலையில்லாவூருக் கிலுப்பைப்பூச்சர்க் கரையா
என்றனுடனேகூடி யிருப்பதிற் குறையா
இனிமேலும்இதுவெல்லாம் சரியான துறையா
எவரும்புகழ்ந்திடக் கவிகுஞ்சரந்தமிழ்க்
கிருங்கிதியுதவு சரவணபவரே
(ஏன்காணும்)

---

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏய்க்கிறீரென்னகாணும்-என்றனைமெள்ள
ஏய்க்கிறீரென்னகாணும்

அநுபல்லவி.

தாக்கியசூரனைவென்ற சமரனே முத்துக்குமரனே சாமி (ஏய்க்)

சரணங்கள்.

கைக்குள்ளஞ்சனந்தீட்டிற் கண்ணிக்குள் மாட்டி
மிக்கமயலைப்பூட்டி மிகவேசி ராட்டி
தக்கநயம்பாராட்டிப் புலித்தடம் நரித்தடம் காட்டி
(ஏய்க்கிறீர்)

வாய்ப்பகட்டினூற்பகட்டி வாயதட் டதட்டி
மாப்பிள்ளைமாரையும் விரட்டி எனை மருட்டி
காற்பணங்கேளாமல் வாய்கட்டிக் சாண்காட்டில் முழக்கொம்பு
(ஏய்க்கிறீர்) [வெட்டி

கொஞ்சியென்முன்குரம்படித்து குகனைசிறை பிடித்து
மிஞ்சவேசுரந்தொடுத்துக் கொங்கை பிடித்து
கொஞ்சிமடிமீதிற்படுத்துக் கவிகுஞ்சரம்பதம் படித்து
(ஏய்க்கிறீர்)

---

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஒருநாள்மருவிய சரசலீலையைநினைக்
குருகுதையோ நெஞ்சமே

அநுபல்லவி.

மருவார்கடம்பணி முருகனென்றெனைச்சேர்ந்த
மகாராசனுடனே மிகராசியுடன்கூடி (ஒருநாள்)

சரணங்கள்.

மலரணையிலடுத்து மகிழ்ந்துகவிபடித்து
இலகுஞ்சுருள்மடித்து இதமாகவேகொடுத்து
கலவைகளணிந்து கடிமலர்புனைந்து
முலைமிசையழுந்த முகமதுபொருந்த
முத்தமிட்டுநகம் வைத்தழுத்தியசு
கத்தின்மெய்ப்பாத சத்துடனேயதி
மோகமதாய்மத னாகமலீலைய
நேகவிதங்கள்வை போகமதாகவே (ஒருநாள்)

கோதில்குழல்வகிர்ந்து கொஞ்சிக்கொஞ்சிமொழிந்து
சோதித்துயில்கலைந்து தொடையிற்றொடைபிணைந்து

வாதுகள்திருத்தி          மதகரிகாத்தி
லேதமிவருத்தி          யிதவொடுபொருத்தி
எக்குரிதம்பமி டுக்கிமகிழ்ந்தவன்
புட்குரல்கூவிமு ழக்கியெழுந்திடு
போதடடாவெகு வாகநீபோகம்வி
டாதடடாகொடடாசமபோகமென்          (ஒருநாள்)

கொங்கைகள்தாளம் போடக் குழல்வண்டிசைகள் பாடக்
கங்கணங்கணின் னாடக் கந்தனென்றுங்கொண் டாடச்
சங்கொலிமுழங்க          வங்களைமிலங்க
மின்கொடிதுலங்க          அங்கசதலங்கள்
மிஞ்சிவளம்பெறு செஞ்சொல்லுறுங்கவி
குஞ்சரமின்சொலி னுஞ்சுகமாகவே
குமுகுமென்றுவரு சுமுகவாரிதிறை
குமிழிகொண்டுமல ரமளிகள்பெருகவே          (ஒருநாள்)

---

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஒருநேரக்கலவிக் கிப்படியானால்
ஓகோயிதென்ன சுரதம்.

அநுபல்லவி.

இருவரும்பிரியாமல் முருகையனே யெப்போதும்
ஏகபோகங்கள்செய்ய மோகங்கொண்டிருக்கையில்          (ஓ)

சரணங்கள்.

வண்டுண்டகமலம்போல் மதிமுகம்          வாடுதே
மார்பும்நெஞ்சமுமிகத் துடிதுடித்          தாடுதே
கண்டிதழ்காய்ந்துன்யோ சனையேதோ          தேடுதே
கால்கள்பதறித்துவண் டாடுவதென்னபளா          (ஒருநே)

கண்கள்சிவந்துநித் திரைவந்து          சொருகுதே
கந்தரத்தினில்வேர்வை யுந்தியிற்          பெருகுதே
பண்ணுறுமொழியிப்போ தெழுமையாய்          வருகுதே
கருவந்தெரிந்துந்தெரி யாததென்னபளா          (ஒருநே)

கனிநயஞ்சேர்கவிகுஞ் சரந்தமிழ்க்கநு கூலா
கலவிக்கிசைந்தபோது விலகுவதென்ன மாலா
மனதாரவுனையல்லால் கதியுண்டோவடி வேலா
மறுவார்த்தைகள்பேசா திருப்பதென்னபளா (ஒருநே)

---

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

கணவன்வந்தழைக்கிறுன் போய்வாரேன்பக்ஷம்
கருத்திலிருக்க வேண்டும.

அநுபல்லவி.

மணியெழுவனையதிண் புயனேகுன்றையின்வேலா
வாலிபந்தனிலென்னைத் தாலிகட்டினசொந்தக் (கணவ)

சரணங்கள்.

அடிக்கடிபுகல்சொல்லி யனுப்பினு லனு
மானத்துக்கிடந் தோணுமே-எந்தப்
படிக்குநாமிருந்தாலு மூருக்கும் பால்குடித்
திடவல்லோ வேணுமே-இனிக்
கடத்தினு லுமவன் விட்டுப்போறதில்லை
கசக்கிமுகந்ததினுல் ரசக்கியங்களொன்றுமில்லை
அடுத்தவீட்டுக்கார ரறிந்தாலும்வெகுகல்லை
ஐயனேயென்மன தாரவஞ்சகமில்லை(கண)

கொண்டவன்றூற்றினுல் கூரையுந்தூற்றுமென்று
கூறியபழமொழி பொய்யா-பொல்லாத்
துண்டரீகன்சைகை கண்டால்வெகுவில்விடான்
சுவாமிசித்தமென்பாக்கிய மையா-சொல்லுங்
குண்டணிக்காரருக்கு வாயதறுகாது
குலத்துக்கிழுக்கானசொல் வரவுங்கூடாது
பெண்டுகள்கணவனை மீறப்போகாது
பிடித்ததேபிடிவாத மாகஇப்போது(கணவ)

பங்கயபானுவைப்போ லெங்கிருந்தாலுமுன்
பதத்திலென்சிந்தை யிருக்கும்-நிதங்

துங்கன்கவிகுஞ்சரம் பணிவேலா
சாரம்சொல்வதேனிரு வருக்கும்-இதில்
சங்கையிருந்தால்நேரே சொல்லியே ஒறுத்துக்கும்
சாமியென்றன்நடத்தை தெரியுமுன் கருத்துக்கும்
பங்குனித்திருநாட்கு வருகிறேன் பொறுத்துக்கும்
பதருமலென்றன்சொல்லையுறுதியாய் நிறுத்திக்கும் (கண)

---

இராகம்-மத்தியமாவதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

காசிருந்தாலிங்கே வாரும்-சும்மா
கடனென்றால் வந்தவழி பாரும்.

அநுபல்லவி.

வாசக்கடம்பணி தென்குன்றைவேலனே
மந்திரத்தினிலே மாங்காய்தான்விழுமோ (காசிரு)

சரணங்கள்.

அப்பாவென்றதினு லுச்சிகுளிராது காணும்-நன்றாய்
அழுந்தத்தலையுலெண்ணெய்
வைத்துத்தேய்த்திடவல்லோ வேணும்
இப்படியிருந் தாளெங்கட் கெட்டுமோ
ஏட்டினிற்சர்க்கரையில்ருசி தட்டுமோ
செப்படிவித்தையி னுலுற வொட்டுமோ
தேவடியாட்கிதெல் லாம்சரிக் கட்டுமோ (காசிரு)

கரும்புருசியென் றுலும்வேருடன்கல்ல லாகுமோ-கண்
குளிர்ப்பினிலிங்கிதஞ்
சற்றுந்தெரிய வேண்டாமோ-சும்மா
விரும்புநீர்வெறுங் கைமுழம் போடுமோ
வேசைமேற்காசிலார்க் காசையுங் கூடுமோ
திரும்பவும்வந்து சருவவுந் தேடுமோ
தெந்தனப்பாட்டினி லந்தப்பாம் பாடுமோ (காசிரு)

தென்மதுரையங் கயற்கண்ணி யருள் செல்வப் பாலனே-நாளுஞ்
செஞ்சொலுறுங்கவி
குஞ்சரந்துதி செய்யும் வேலனே

என்முகம்பாரிலெ வர்க்குஞ் சலிக்குமோ
இன்னும்பணயங் கொடுக்க வலிக்குமோ
முன்னியலோபர்க் கெதுவுங் கெலிக்குமோ
முணுமுணுமந்திர மிங்கே பலிக்குமோ (கா)

---

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கைக்கிசைந்தபெண்ணை விட்டுப் பக்கமெல்லாந்திரிந்தால் சரிக்
கட்டுமோ பலன்கிட்டுமோ ருசி தட்டுமோ வெகு திட்டமாச்சுது

அநுபல்லவி.

சக்கர பாணிக்கிளைய தங்கைகுமாரா சண்முக
சாமிவலு காமிசேர்ந்த மாமிமக ளாமிவளுன்றன் (கைக்)

சரணங்கள்.

துங்கமுகஞ் சந்திர விம்பம்
தொடைமதன்தோ ரண கம்பம்
கொங்கை ரண்டும் சொர்ண கும்பம்
கோதையா ளதி யின்பம்
எங்குமேன் திரிந் தோடுகிறீர்
எழுபச்சையை நாடுகிறீர்
அங்கமோ அவள் தங்கமோ வெகு
பொங்கமோகமிகுங்கண்ணுளிவள் (கைக்கிசைந்த)

மைக்குழல்மஞ் செனத் தோணும்
மங்கைநடக் கனம் காணும்
மிக்கநன்னூ லிடை காணும்
விடுத்துச்சொல்ல வோ வேணும்
கைக்குள்வெண்ணெய்தா னிருக்க
நெய்க்கலைவார்போ லொருக்கா
லெக்குறீரங்கே சிக்குறீர்சொன்னால்
கைக்குறீர்நல்ல பக்குவமாகிய (கைக்கிசைந்த)

கற்பகநேர்குண சீலா
கவிகுஞ்சரம் பணி லோலா
பொற்புயர்திண் புய சீலா
புகள்குன்றக் குடி வேலா

கைப்பழத்தை விட்டுறட்
டுப்பழத்துக் காசையுற
ஒப்புமோ என்சொல் தப்புமோமிகு
கற்புமோகரதிப் பெண்ணுளிவள் (கைக்கிசைந்த)

---

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொடுத்தமட்டும்போதும் போடி
குடிலஞ்செய்யாதே கூட்டி வாடி

அநுபல்லவி.

நடத்தையெவர்க்கும் ஏர்க்குமோசாமி
நாதன்கிருபைவைத் தேதாகிலும் (கொடுத்)

சரணங்கள்.

சுரக்கச்சுரக்கக் கறக்கலாந்தினந்
தோறுமேவளர்ந் தேறுமே-மடி
வருத்திப்பாலுண்ண நினைத்திட்டாலா
யாசம் நேருமே
திறத்துடன்பூவிற் பரத்தையரெனச்
சனனமெடுத்த போதிலும் பிரபு
கருத்தையறிந்து நடந்தால்வெகு
கனதையுண்டடி மனதுவைத்தவா (கொடுத்த)

ஆசைக்கென்னடி கணக்குண்டோபே
ராசைமிகுந்து பகைக்கிறாய்-என்றன்
ராசிப்படிசெய் யாமலே யெந்த
நாளுங்கசக்கி முகர்கிறாய்
வாசித்தறிந்த பிரபுடமங்கையர்
மார்க்கம்பிரபுக்கள் நோக்கம்போல் விசு
வாசித்திருந்தால் சகலமும்வரும்
மாதேமரியாதை யறிந்து (கொடுத்த)

பணமென்ன பாஷாணமடி
பாவையே என்னை மேவியே-அனு
குணமுடன்கூடி ரமித்தாலது
கோடிப்பொன்னடி பூவையே

துணையெனநம்பும் கவிகுஞ்சரம்
சொல்லுந்தமிழ்க்குச் செல்வமும் நவ
மணியருள்செய்யும் குணநிதிசுப்பிர
மண்ணியதேசிக ணெண்ணப்படிக்கே (கொடு)

---

இராகம்-சுருட்டி-தாளம்-சாப்பு.

சலுகைக்காரியவ ளிதுவோபேசுவாளின்னம்
சரிபோனபடி யேசுவாள்

அநுபல்லவி.

கலையுற்றமதியுங்கங் கையும்புனைந்தருளுமுக்
கண்ணனருளும்சுப்பிர மண்ணியன்கருணைபெற்ற (சலு)

சரணங்கள்.

உப்புப்பார்த்திடவேண்டி யொருநாள்வந்தவள் சொந்த
வைப்பாயிருந்துகொண்டு மருவிக்கலந் தணைந்த
செப்பிளமுலைவிம்மிச் செம்பொற்குட மாச்சுது
சப்பிரமஞ்சமெத்தையும் தனிமேல்வீடும் வாய்ச்சுது (சலு)

சல்லாபத்துடனேபொற் சரிகைச்சேலை யுடையும்
உல்லாசக்கைவீச்சும் ஒயிலான நடையும்
கல்லாற்பதித்தங்கக் கடையணிந்து தந்தப்
பல்லாக்குடன்மிகுந்த பவுஷுமிப்போது வந்த (சலு)

கொங்குயர்தடஞ்சூழுங்குன்றக்குடியில் வாழும்
மங்கைவள்ளிதெய்வானை மருவிமகிழும் நேசன்
துங்கன்கவிகுஞ்சரஞ் சொல்லுந்தமிழ்க்கு மெத்த
மங்களந்தருஞ்சுப்பிர மண்ணியன்தயவு பெற்ற (சலு)

இராகம்—புன்னகவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சொல்லடிபெண்ணே நிஜம்சொல்லடி
அப்பால்வெளியிற் சொல்லடி.

அநுபல்லவி.

கல்விமிகுந்தருளும் செல்வக்குமரனை
கந்தனுக்குமுனக்கும் சொந்தமுண்டாயிருந்தால் (சொல்)

சரணங்கள்.

ஒருத்திகணவன்தனித் திருக்குங்கிருகந்தனில்வே
றொருத்திசென்றிடமனம் நாணுதா-கண்டு
வெறுத்துத்திடுக்கிட்டுக்கை நெறித்துநிற்கிறாய்ஜட
மேவுனக்கிவ்வளவு தோணுதா-உன்றன்
கருத்தையறிவேன்குரு குறுத்துநிறையத்தின்ற
கழுகுபோலிருக்கிறாய் முழுநீலிநடந்த
சரித்திரந்தனையென்பால் உரைத்திடாவிட்டாலிந்த
க்ஷணத்திலுனதுநாக்கில் சுணக்குமுத்திரைவைப்பேன்

(சொல்லடி)

அறிந்திருந்துங்கொழுந் தன்செயல்களையெடுத்
தாளப்புள்ளிபார்த்திட லாச்சுதோ-மதி
மறந்தென்படுக்கைவீடு திறந்துநுழைந்திடவே
மதங்கொண்டறிவிப்படி போச்சுதோ-அவர்
திறஞ்சொன்னதுண்டாகில வரந்தாறுபெண்ணேஉள்ள
செய்கையென்னடியிப்போ கையிற்கண்டகளவு
மறைந்திடுமோமறைக்க முடியாதினிக்கபடம்
வையாமலென்னிடத்திற் பொய்யாகிலும்பொருந்தச்

(சொல்லடி)

சித்தமாய்ப்பலநாளைக் கள்ளன்ஒருநாட்கையில்
சிக்கிக்கொள்வானென்பதைக் கருதடி-உள்ள
தத்துவம்போலவேசோர பர்த்தாவைச்சேர்வது
சகஜமாயுங்கள்குல விருதடி-அது
நித்தம்கவிகுஞ்சரம் நற்றமிழுரைத்துமே
நிலந்தனிற்கந்தனுடன் கலந்தநிஜமாகும்
உற்றதுசொல்லிவிட்டால் அற்றதுபொருந்துமேன்
றுரைக்கும்பழமொழியைத் திறத்துடனெண்ணிக்கொண்டு

(சொல்லடி)

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

தனத்தில் நகம்வைத்தா லதற்கிந்த
சாலமென்னடி போடி.

அநுபல்லவி.

வனத்திலேசென்று புனக்குறத்தியை
மணந்தசண்முக னணைந்தபொழுது (தனத்தில்)

சரணங்கள்.

இழையுருகிப்போச் சென்கிருய் பெண்ணே
எந்தவிதமந் திரத்தில் மாங்காய்
விழுமிதென்ன சம்பிரதாய
விந்தை தானடி
தழுவணையினி லுகந்துகளப
சந்தனந்திமிர்ந் தந்தவேளையில்
கழைமதன்பர வசமிகுந்துன்னைக்
கட்டிவாய்முத்த மிட்டபொழுது (தனத்தில்)

பசப்புந்தெந் தனக் கலவியிலின்பம்
பயக்குமோரம்ப மயக்குருய்பெண்கள்
குசத்துக்கழகு கணவன்கைநகக்
குறிகள் தானடி
இசைந்தமன்மத சாஸ்திரப்படிக்
கிணைமுலைபிடித் தணையவேயிரு
புசத்துடன்புசம் சேர்ந்தெழுசம்
போகத்தோரணை வேகமதனிலே (தனத்தில்)

காதுகுத்தப்பொறுதவள் குன்றைக்
கந்தனிடத்தில் வந்துசிக்கிக்கொண்
டேதடியிதற் கஞ்சினலவன்
இனிவிடு வானே
ஓதுகவிகுஞ் சரம்பதம்படித்
தொருநொடிபிரி யாமலேயின்னம்
சாதகமாகஅணைந்து கொண்டின்ப
சாரந்தெரிந்து பாரடிபெண்ணே (தனத்தில்)

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

தூதுவிடுத்தாலிந்த வாதுசெய்துநல்ல
துரையோசொல்லடி மகளே

அநுபல்லவி.

தாதவிழ்பூந்தடஞ் சூழ்குன்றநகர்வளர்
சரவணபவருனை மருவவேண்டுமென்றிப்போ (தூது)

சரணங்கள்.

மின்னாரநேகம்பேரி லுன்னிடத்தினிற்கப
வீக்ஷணமானக டாட்சம்வைத்திருக்கிறார்
அன்னமொழியைத் தள்ளாதே-யிளங்கன்றுபய
மறியாதென்றாப்போற் றள்ளாதே
தன்னைவிடவேறில்லை யென்னவெண்ணு றாயெங்குந்
தானேசெல்லுமோமோடி மானேமையலாயவர்
(தூது)

நாயகர்மனதினி லாயாசம்வரும்படி
நடந்தாலொருவேளைபோ லிருந்திடுமோசப்பிர
தாயவித்தைகள் செய்கிறாய்-மெத்தவுமென்னைச்
சுடுத்தஞ்சொல்லியே வைகிறாய்
பேயாகிலும்பெற்ற தாய்மொழியொருபோதும்
பிசகாதடிகண்ணே நிஜமாயெண்ணிக்கொள்சொன்னேன்
(தூது)

வஞ்சியேசிதம்வள்ளி குஞ்சரியையணைந்த
வைவேற்குமாருடன் சையோகஞ் செய்துமுன்போல்
கொஞ்சியணைந்து சேரடி-உனக்குநிகர்
குவலயந்தனி லாரடி-அநுதினமும்
செஞ்சொற்கவிகுஞ்சரம் நெஞ்சிலுதிக்குந்தேவ
சேனாதிபரே அபிமானமாகமகிழ்ந்து
(தூது)

---

இராகம் - ஸ்ரீராகம் - தாளம் - ஆதி.

பல்லவி.

பலபேருடனே நான் கூடிப்
பயணந்தேடமாட்டேன் போடி

அநுபல்லவி.

விலைமாதென்றாலுமென்ன மிகவுமென்றனைக்கூடி
நலந்தருளும்சாமி நாதனைச்சேர்வேனல்லால் (பலபேர்)

சரணங்கள்.

புலிபசித்தாற்புல்லை யருந்தாதே-கோடி
பொன்கொடுத்தாலும்வேறே பொருந்தாதே-நீதான்
பலியாதகாரியத்தில் வருந்தாதே-எந்தப்
படிசொன்னாலுமென்சிந்தை திருந்தாதே
வலியமனங்கொண்டது மாளிகையென்பதுபோல்
இலகுமென்மனதினில் இஷ்டப்படிக்கல்லாமல் (பலபேர்)

விருதாவிலொட்டாரம் காட்டாதே-பரு
வெள்ளரிக்கனிக்கிப்பூண் கட்டாதே-வீணே
கிருதானவார்த்தைசொன்ன லெட்டாதே-தாய்க்
கிழவியுன்மரியாதை கிட்டாதே
வெறும்புளிதின்றுநாவில் விரணெரிப்பெண்ணடிகை
நிறைந்தபணத்திலுங்கண் ணிறைந்தமாப்பிள்ளைபோதும் (பல)

கந்தன்கிருபையிருந்தாற் போதாதோ-செஞ்சொற்
கவிகுஞ்சரம்பதங்கள் வாராதோ
இந்திரதருவும்வந்து சேராதோ-என்றன்
எண்ணப்படிக்குநிறை வேறாதோ
பந்தமாயொருவனைப் பற்றியுலகாளென்று
முந்தவேசொன்னபழ மொழியேநல்வழியல்லால் (பல)

இராகம்-அசாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பெண்ஜனனமெடுத்தால் மிகவுங்கொடுத்துவைத்துப்
பிறக்கவல்லவோ வேண்டும்

அநுபல்லவி.

புண்ணியவானென்னும்சுப்பிர மண்ணியனைமருவமுன்
புரிந்துநான்செய்திட்ட அருந்தவத்தாலுலகில் (பெ)

சரணங்கள்.

தினமும்நவநிதிகள் பொருந்தினதா லென்ன
திவ்யசுந்தரமாக இருந்ததினு லென்ன
கனகாபரணம்பூண்டு சிறந்ததினு லென்ன
கலவிகள்தெரிந்து மென்ன

இனமாம்ரசிகமுள்ள புருஷனிசைந்தாலல்லோ
 இன்பமதாய்நமது சம்பிரதாயங்கள்செல்லும்
தனதாய்மலரணையில் மருவ அழைத்தபோது
 ஐனுதியில்வாராவிட்டால் பலிதமென்னடிபோடி
(பெண்ஜனன)

என்னுடன்கூடைதமின்னார்கள் தன்கணவர்கள் கூட
 இசைந்துமொழிபகர்ந்து பசந்தாகவிளையாடச்
சின்னஞ்சிறுவயதில் கண்டுநான்மனம் வாடச்
 செய்ததேதெய்வங் கூட
முன்னமேநான்செய்த பூஜாபலத்தாலெங்கள்
 முத்தையனுறவுநான் பெற்றேன்பரத்தையர்போல்
இன்னமொருவர்மீதி லிச்சைவைக்கக்கூடுமோ
 இதுவெல்லாமென்னுடைய விதியல்லாதுவேறில்லை
(பெண்ஜனன)

கலபமயிலேமன திளகவீணையை மீட்டிக்
 கவிகுஞ்சரம்பதத்தைப் படித்துநயம்பாராட்டி
இலகும்வேளையிலாரோ வெகுவிரோதங்கள்காட்டி
 இவளவுபகை மூட்டி
கலகஞ்செய்தாலுமென்ன தலையிலெழுதிவைத்த
 கற்பனையொருபோதுந் தப்பாதடிமிகவுங்
கலைகள்தெரிந்தகுன்றக் குமரகுருபரன்
 கடாட்சமிருக்குமட்டுந் தாழ்ச்சியென்னஆகிலும்
(பெண்ஜனன)

---

இராகம் - சௌராஷ்டிரம் — தாளம் - ஆதி

பல்லவி.

மடியினிற்குழந்தையைப் பிடியடி-இவர்
 மருவுந்திறத்தை நானறிகிறேன்.

அநுபல்லவி.

படிபுகழுந்தென்குன்றக் குடிவேலரென்னமோ
 பரபரப்பாய்வலியச் சருவிக்கொண்டிருக்கிறார் (மடியினி)

சரணங்கள்.

செல்வனைப்பெற்றதாலென் வல்லமையென்ன போமோ
தீட்டுமரத்திலிவர் கூர்மைபார்த்திட லாமோ
அல்லடிகலவியி லிவர்க்கிளைப்பது நாமோ
ஆனைபடுத்தாலொரு குதிரைக்குந்தணி வாமோ
நல்லவல்லமைக்கா ரெந்திராணிபார்க்கட்டும்
ரதியிலிவர்போகத்தை முந்தாமற்காக்கட்டும்
சல்லென்றுபரவசந் தந்தென்மயல்தீர்க்கட்டும்
சந்துவலித்துப்பட்டி யாருக்குவேர்க்கட்டும்

(மடியினில்)

நடத்தைகளென்னிடத்தில் படித்துக்கொண்டதும் போச்சு
நலியாமல்மண்பூனை யெலிபிடித்தாப்போ லாச்சு
சடுத்தம்பேசியென்கையைப் பிடித்தாலினியேன் பேச்சு
தருணமிதுவென்றுகாத் திருந்ததும்நிஜ மாச்சு
கிடக்கட்டுமினியொரு தந்திரமெடுக்கிறேன்
கேரளமுறையாகச் சுரதமுந்தொடுக்கிறேன்
விடுத்தரவப்படத்தை அலவன்போலிடுக்கிறேன்
விரகந்தலைக்கொண்டோய்ந்து விட்டபின்முடுக்கிறேன்

(மடியினில்)

மிஞ்சுமன்மதகலை களுக்குநானுரை யாணி
வேலவர்செய்யுமிந்திர சாலங்களுக்கு நாணி
எஞ்சினலனமேயப் புறமென்னஎன்தி ராணி
இதுவெல்லாமாயிரம்கா லரைக்கால்மா காணி
செஞ்சொற்கவி குஞ்சரம் பதத்தையும்படிக்கிறேன்
திருவணையிற்பம்பரம்போல் சுற்றிநடிக்கிறேன்
தொஞ்சதுகண்டடா சபாசென்றுபிடிக்கிறேன்
தொடுத்தபடிசம்போகம் நடத்தியேமுடிக்கிறேன்

(மடியினில்)

---

இராகம் - அடாணா - தாளம் - ரூபகம்.

பல்லவி.

மானே அங்கேபோன வகையென்னடி-பொல்லா
வம்பனிருக்கிற செம்பொன்மலைக்குள்ளே

அநுபல்லவி.

வானோர்கள்சே னாதிபனும்சுப்பிர
மண்ணியன்பலவந்தம் பண்ணுதிருப்பானோ (மானே)

சரணங்கள்.

அம்புவிழிமடமாதே உனக்கிது
ஆர்செய்த சூதடி-மூழு
வம்புகளும்மனத் தெம்புமிப்போவந்த
மார்க்க மேதடி-உன்றன்
கும்பமுலையி லிளம்பிறைபோல்நகக்
கூறுகள்தோணுதே ஊரிலனைவரும்
கும்புகள்கூடியிடும்புசொல இந்தக்
கோலங்கொண்டாயடி நீலியேநான்பெற்ற (மானே)

சாதிபுனுகு பன்னீருந்திமிர்ந்த
ஐவ்வாது வீசுதே-உனக்
கேதிப்படிக்குத் தூர்ப்புத்திவந்ததென்
றியம்பவாய் கூசுதே-தெரு
வீதியிற்பெண்டு பிடிப்பதவனுக்கு
விர்த்தியென்றெங்கும் பிரசித்தந்தெரியாதோ
ஜாதிக்கில்லாத்தொழி லேதுக்குவீணிலே
தானடங்கத்தன் குலமடங்கும்அடி (மானே)

வண்டடர்சோலை திகழ்ந்தகுன்றக்குடி
வாழுங்குண சீலன்-நாளும்
தெண்டிரைசூழ்புவித் தொண்டர்பிணிகளைத்
தீர்க்கும்வடி வேலன்-நிதம்
தண்டமிழ்சொல்கவி குஞ்சரத்துக்கன்பு
தந்துரக்ஷித்தருள் கந்தனிசைந்தவுன்
செண்டுமுலையைக்கைக் கொண்டுருசிகண்டு
தேனேயினியுனை யேன்விடுவானடி (மானே)

---

இராகம் - தர்பார் — தாளம் - ரூபகம்.

பல்லவி.

மேல்மினுக்கதைக் கண்டுவீணில்
என்மலைக்கிறீர் சாமி

அநுபல்லவி.

ஓமெனும்பொருளாங் குமரரே
உச்சிதமாகவே கொச்சிமஞ்சள்பூசும் (மேல்மினுக்)

சரணங்கள்.

குணமெனுஞ்செய்கை யவளிடத்தினிற்
பணவெடை யில்லையே—பொய்யும்
குடிலம்வஞ்சகம் இடைவிடாமனங்
குடிகொண்ட எல்லையே
இணைபிரியாமற்பிணைகிறீரினி
இருக்குது தொல்லையே
இழுபறிதலைச்சுமையாய் வரு
மிருந்தறிந்தின்னம் பாருமென்சொல்லையே
(மேல்மினுக்)

தழுவுமிரதித் தொழில்களுந்தந்
திரமும் வாராதே-அந்தச்
சாமிதகைமை பெருமைக்கேயரை
க்ஷணமும் சேராதே
குழயப்பேசிப் பழகிறாரென்று
குறித்துப் பாராதே
கோமுகவியாக்கிர மாகுமிதுகிசங்
கூறினேனென் சொல்லைப் பாருமிப்போதே
(மேல்மினுக்)

கவிகுஞ்சரத்தில் பதங்களும்பல
கலையுங் கற்றவளா-குன்றைக்
கந்தரேயென்றன்போ லுன்றனிடத்தினிற்
காத லுற்றவளா
யௌவனமாகிய பிரவுடமங்கையென்
றிசைகள் பெற்றவளா-உமக்
கிசைந்தவளன்றோ கசிந்தனுதினம்
இஷ்டங்கொண்டீர்ஓகோ கெட்டிகெட்டிபளா
(மேல்மினு)

இராகம்-ஆகிரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மோசமானேனடி-பெண்ணே மதி
மோசமானேனடி.

அநுபல்லவி.

காசினிபுகழ்மயூ ராசலந்தனில்மேவும்
கந்தன்செய்யுந்தொழிலை முந்தவேதெரியாமல் (மோ)

சரணங்கள்.

மாலைப்பொழுதினிற்பூஞ் சோலைக்கருகில்மலர்
வாவிக்கரைதனிலு லாவையிலே
ஆலைக்கரும்புமதன்போலே யென்னெதிரேவந்
தந்தரவெள்ளைகள்வீசி தந்தாமொழிகள்பேசி
ஆரவாரங்கள்செய்து வாரிமலர்கள்பெய்து
ஆசைவலையைப்பூட்டித் தேசிகங்கள்பாராட்டி
ஆரென்றான் பெண்ணே யென்னவுன்
போரென்றான் இந்திர
சாலக்காரனோவென்று ஆலோசித்தேனப்போது
தப்பிவிட்டானவனைக் கைப்பிடிபிடியாமல்
(மோச)

பந்துபயிலும்வர்ணத் தந்தச்சவுக்கையிலு
கந்துநானிருக்குமே காந்தத்திலே
சந்தனகளபகுங்கு மங்கலந்தெனதிரு
தனங்குளிரவேகொட்டி மனங்குளிரவேகட்டித்
தழுவியென்விழிபொத்திக் குழலில்மலர்கள்சுற்றித்
தையலேயினிமேலே மையலேசகியாது
தஞ்சமே மன்மதரச
புஞ்சமே யென்று
விந்தைமாயஞ்செய்து மறைந்தானவனையொரு
விசைப்படியெனதுகை வசப்படுத்திக்கொள்ளாமல்
(மோச)

பூமலரமளியிற் பொருந்திவிழிதுயிலும்
சாமத்தில்வந்துகலை தனைநெகிழ்த்து

காமன்மனையிற்கரி கரங்கொடுவருவியென்
கருத்தையுந்திருடியே சிரித்துந்திருவடியே
கனிவாயிதழுண்டு தனியேயிசைகொண்டு
கவிகுஞ்சரம்பதங்க ளவையும்படித்திதங்கள்
காட்டினன் காமச்சண்டையை
மூட்டினன் ஒரு
சாமமட்டுங்கலவி நேமித்தெழுந்தகுன்றச்
சரவணபவன்கையில் பரவசம்வாங்காமல் (மோச)

---

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வரட்டும் வந்தாலவற்கு வகைசொல்கிறேனடி

அநுபல்லவி.

திரட்டுப்பால்குமட்டிப் புரட்டுத்தனமாயென்னைத்
தோலியங்கேமோன பாலகுமாரனிங்கே (வரட்டும்)

சரணங்கள்.

இச்சகஞ்சொன்னதெல்லாம் மறந்ததோ-என்றன்
இன்பமப்போது ருசித் திருந்ததோ-இந்த
பச்சைப்பாம்பாட்டும்வித்தை தெரிந்ததோ-மெத்தப்
படிக்கப்படிக்கப்புத்தி திரிந்ததோ—சொன்ன
நிச்சயந்தப்பிமன தச்சமில்லாமலங்கே
இச்சைகொண்டுபோனவன் பச்சைமயிலேறி (வரட்டும்)

கொடுத்தமருந்துதலை கொண்டதோ-நண்டு
கொழுத்துவளையைவிட்டு விண்டதோ-இப்போ
தடுத்தகடைமலிவு கண்டதோ-செய்த
ஆணைசத்தியமெல்லாம்பு ரண்டதோ—ஒரு
குடத்தில்விளக்குப்போலே நடத்தைகொண்டுதோளினில்
அடுத்திருந்துசெவி கடித்தமுழுவஞ்சகன் (வரட்டும்)

கலிக்குண்மைவிளங்கிய சீலன்-நாளுங்
கவிகுஞ்சரத்துக் கநுகூலன்-இமய
மலைக்குமரிபெற்றருள் பாலன்-என்னை
மருவிமகிழும்வடி வேலன்-மனங்
கலைக்குமங்கையராசை வலைக்குள்சிக்கும்சிகண்டி
மலைக்குமரனினியென் றலைக்கடைவாசல்தேடி
(வரட்டும்)

---

இராகம்-முகாரி-அடதாள-சாப்பு.

பல்லவி.

வருவாரானால் வரச்சொல்லு நானங்கே
வரக்கூடாதடி மானே

அநுபல்லவி.

குருதிவைவேல்பிடித் துறுதிவிளங்கியதென்
குன்றக்குடிக்குமர ரின்றைக்கென்வளவுக்கு (வருவா)

சரணங்கள்.

கொண்டகணவன்செய்யுந் தண்டனைகள் பொல்லாது
குடிப்பெண்களதர்க்கஞ்சிநடக்கவேண்டு மல்லாது
துண்டரீகமாயகங் கொண்டாலது செல்லாது
சொல்வோர் வசை நில்லாது
ஒண்டியாய்வருகிறோ மென்றுமனங் கோணாமல்
ஓங்குந்தனிஜவ்வாது புனுகுவாடை தோணாமல்
வண்டடர்தேமலர் மாலேமுகப் பூணாமல்
மையிருளினிற்பாரிக் காரர்கண்ணிற் காணாமல்
(வருவாரானால்)

ஆசையோகணக்கள வில்லாமற் பெருக்கிது
ஆனதாகட்டுமென்று வரவும்நெஞ் சுருக்கிது
ராஜவீதியில்பத்திர காளியொன் றிருக்கிது
நடுவேவந்து தடுக்கிது
மாசிலாநடுநிசி நேரத்திற் பனிரண்டு
மணிவேளைதனிலூ ருறங்கினதுவுங் கண்டு
வீசுங்கச்சையிறுக்கிப் படையுமிடையிற் பூண்டு
விஞ்சைமந்திரம்தரித்து வேஷமுமாற்றிக் கொண்டு
(வருவாரானால்)

தொண்டர்சிந்தையிற்சூடி கொண்டருளுங்கிரு பாலன்
தோகையெனும்வள்ளி தெய்வானைக்கநு கூலன்
அண்டர்பணியும்நீல கண்டர்க்குவர பாலன்
ஆறுமுக வடி வேலன்
பண்டுபழகிநறு மலர்சூடி விளையாடி
பகருங்கவிகுஞ்சரம் பைந்தமிழ் தனைப்பாடி
கண்டிதழ்தனையுண்டு செண்டுமு லைகையாடி
கலந்தசம்பிரமந்தன்னை நினைந்துஇன் னமுந்தேடி
(வருவாரானால்)

---

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

வெகுசம்பிரதாயமடி-பெண்ணேயிது
வெகுசம்பிரதாயமடி

அநுபல்லவி.

சுகிதவிசேஷத்தினால் முருகன்விரகங்கொண்ட
துரிதமறிந்துமெத்தப் பிரியஞ்செய்கிறாயிது (வெகு)

சரணங்கள்.

அமர்த்துதலில்வளவு வேணுமடி-இவ்வுலகத்தில்
ஆர்க்குங்கணிசமாகக் காணுமடி
சமர்த்தியென்றெவருக்குந் தோணுமடி-உன்மேலின்னம்
சங்கையில்லாதமையல் பூணுமடி
சமத்தாயிருந்துகொண்டு வுள்ளங்கையில் வைகுந்தம்
காட்டிமிகவுமாசை பூட்டுகிறாயிது
(வெகுசம்பிர)

கைக்குருவியொன்றுவைத் திருக்கிறாய்-ஆழமும்நீச்சுங்
காட்டியெந்தவிதமொத் திருக்கிறாய்
சக்கியம்செய்யும்பெண்களை நெருக்கிறாய்-இந்தவிதமாய்ச்
சட்டங்கள்செலுத்திக்கொண்டிருக்கிறாய்
சிக்குங்குளிகையல்லால் சொக்குப்பொடியோ யெந்த
தேசப்பழக்கமோசபாசுபெண்ணேயிது
(வெகுசம்பிர)

6932

இணக்கம் அங்குசத்தினல் திறத்துருய்-உன்றன்
இதயம்விட்டகலாம விறுத்துருய்-கொஞ்சம்
பிணக்கங்கண்டாலுடனே பொருத்துருய்-குமரனிணை
பிரியாமற்சேர்ந்துமனந் திருத்துருய்
மணக்குங்கவிகுஞ்சரம் இணைக்கும்பதங்கள் முற்றும்
வழக்கம்போலவேமெத்த முழக்கஞ்செய்கிருயிது
(வெகுசம்பிர)

---

இராகம்-புன்னுகவராளி-தாளம்-திரிபுடை

பல்லவி.

வைப்பாயிருப்பதென்ன நியாயம்-அடி
மகளேஉனக்கார்செய்த மாயம்

அநுபல்லவி.

செப்பமாகியதென்குன் றப்பதிதனில்வாசன்
சித்திரமயிலேறு முத்துக்குமரனி
டத்திலநுதினங் குத்தகையாகவே (வைப்பா)

சரணங்கள்.

சரக்குமேனிதப்பினல் விலைக்காரு மெடுப்பாரோ
தனம்சரிந்தபிறகு பணந்தந்து படுப்பாரோ
சிரிக்கச்சிரிக்கச்சொல்வோர் அரைக்காசுங் கொடுப்பாரோ
செட்டிகளுக்கொரு தட்டெனவேபணம்
தேடும்வயதினிற் கூடியவருடன் (வைப்பா)

வேசியர்க்கொருவர்மேல் ஆசைகொண்டா லெட்டுமோ
மிகவும்பணப்பார்வையில் முகப்பார்வை கட்டுமோ
கூசிநடந்தாற்சாதி ஆசாரந்தான் கிட்டுமோ
கொடுக்குமட்டும்வாங்கிக் கொடுக்காவிட்டால்விட்டு
முடுக்கநமக்குள்ள முறைமையன்றியங்கே (வைப்பா)

வாலிபத்தில்மனது வைத்தால்பணயங் கோடி
வருமென்றெண்ணுமல்சர வணபவனுடன் கூடி
கோலமாகவேகவி குஞ்சரம்பதம் பாடிக்
கொஞ்சிமருவிக்கொண் டென்சொல்லெவளவுங்
குறியாமலுமிணை பிரியாமலுஞ்சொந்த (வைப்பா)

இராகம்-தர்பார்-தாளம்-சாப்பு

பல்லவி.

வலுவிலேதேடி வந்தால்மருவ
வரமாட்டோமென்பது நியாயமோ

அநுபல்லவி.

கலைமதியுலகத்தி லுலவிவளருகின்ற
கழுகாசலக்கந்தனே யுன்றனை (வலுவிலே)

சரணங்கள்.

ராசராசர்கள்தலை வாசலில்வந்துநின்று
நதிர்வைப்பதையுங்கண்ணுற் பாராமல்-குல
வேசைமுறைமைலவ லேசமாகிலுமெண்ணி
வேறொருவரைநெஞ்சிற் கோராமல்-ஆசா
பாசமிஞ்சிமதனு வேசந்தலைக்கொண்டுசொப்
பனத்திலடிக்கடி நினைத்துருகியௌ
வனத்திலநுதினம் உனைக்கலவிசெய்ய (வலுவிலே)

இணக்கமாயடுக்களை கிணத்துக்குள்ளேயமுதம்
எழுந்துவந்தது போலே-கமிழ்
மணக்குந்தனிஜவ்வாது மார்பில்திமிர்ந்துநறு
மலரணிந் தொருக் காலே-தழு
வணைக்குள்வந்தவன்றனை இணக்கங்கொள்ளாததென்ன
மார்க்கமெழுபுவி யோர்க்குமிதுசரி
ஏற்குமோகணிசம் ஆர்க்கென்றிருக்கிறீர் (வலுவிலே)

சோலைவண்டினமலர்த் தேனன்றிவேறொரு
சுவைகளை யருந்தாதே-சிறு
வாலைமன்மதன்பதி நாலுலக்ஷம்பொன்கொண்டு
வந்தாலும் பொருந்தாதே-செழு
மால்திருமகனே வேல்பொருமுருகனே
வஞ்சியெழுமயல் மிஞ்சிவனமிகு
குஞ்சரகவிபதஞ் சொல்லியேயுனை (வலுவிலே)

கவிகுஞ்சரபதங்கள்-முற்றிற்று-

---

சிவமயம்.

# மதுரகவிபதங்கள்.

இராகம்-அசாவேரி-தாளம்—ரூபகம்.

பல்லவி.

அந்தப்புளிப்பை அறிந்தபின்புதன் னூலேவருவாரடி

அநுபல்லவி.

சந்ததத்தையறி யோமோபெரிய
சாமிநிகரில் லாமணியீசர் (அந்தப்)

சரணங்கள்.

எத்தனையோகொஞ்சி முத்தமிடப்போனேன்
என்னமோயோசனை முடிக்கிறூர் - பெண்ணே
மெத்தவும்நான்சுர தத்தொழில்செய்தாலும்
வெவ்வேறேமனப்பால் குடிக்கிறூர் - அந்தத்
தந்தைமொழியாளை யடுக்கட்டும் — அவள்
சல்லாபவுபரி தொடுக்கட்டும் — இவர்
ஒற்றைமாட்டையுங் கொடுக்கட்டும் - கையில்
ஓட்டைக்கொடுத்து முடுக்கட்டும் - அடி
(அந்தப்)

இணைமுலைக்குடமயிலேசொல்லடி
என்னிலுமவள் சொந்தமோ - திவ்விய
மணவரையில்வர் தணைவதற்கவர்
மாட்டோமென்றூல்பல வந்தமோ - என்னைக்
குணமில்லையென்றூல் பழிக்கட்டும் — அங்கே
கூடிக்கொண்டாகிலுஞ் செழிக்கட்டும் - அவள்
பணயந்தரச்சொல்லிக் கிழிக்கட்டும் — ஐயர்
பரக்கப்பரக்க விழிக்கட்டும் - அடி
(அந்தப்)

ராயரகுநாதக் குழந்தைக்குமா
ராவேல்கையணி வாசா - நன்
னேயன்மதுர கவிக்கருளாகிய
நிகரில்லாமணி யீசா - சம்பிர
தாயத்தையங்கேபா ராட்டட்டும் - அந்தத்
தாரணிகண்ணிக்குள் மாட்டட்டும் - நிதம்
போயவர்தொழிலைக் காட்டட்டும் - அவள்
பட்டியரைவிட் டோட்டட்டும் - அடி

(அந்தப்பு)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னமே நீகூட்டிவாடி - என்சாமியை
அன்னமே நீகூட்டிவாடி.

அநுபல்லவி.

என்னைமருவியேவெகு நன்னயக்கலவிசெய்த
இங்கிதத்துரைசங்கர லிங்கமகாராஜனை (அன்னமே)

சரணங்கள்.

ஆசையாகியகாமப் பசாசுவந்ததடிமுழுப்
பூசைபோடச் சொல்லுதடி - மாவிலிருந்து
பூங்குயிலும் வெல்லுதடி - சகிப்பதுப்ர
யாசமாகுது மாதரசேயென்ன
மோசமோ அறியேனிதுசாதகம்
நீசெய்யாது பின்னார்செய்குவார்சொல்லி
சேஷமாகவே சொல்லவேண்டுமோ (அன்னமே)

செம்பவழஇதழுண்டு இன்பமுடனேசுகித்த
சம்பிரமத்தை நாடுதடி - சுகங்கொடுத்த
சாமிதனைத் தேடுதடி - திவ்யாமிர்த
கும்பமாமுலைமீதிலே மதன்
அம்பையேவுதலாலனமே யென்னு
டம்பெலாமிக நோகி துபார்வெகு
சம்பிரதாயம தாகஇந்நோமே (அன்னமே)

பாமணங்கமழ்குவளைத் தாமனலங்கிருதமிகு
சோமவதன வசீரன்-சவுந்தரபாண்டிய
துங்கனுதவு குமாரன்-மதுரகவி
பாமணம்புண ரிங்கிதவானபி
ராமனெண்டிசையும் புகழ்சார்வ
பூமனென்றனை யன்பொடுமேவிய
சாமிசங்கர லிங்கமகீபனை (அன்னமே)

---

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு

பல்லவி.

ஆசைநாயகன் பேசியிருக்கையில்
அகலப்போவது மகிமையா.

அநுபல்லவி.

காசினியில்மக ராஜயோகசங்
கரலிங்கேந்திரன் சரசஞ்செய்த (ஆசை)

சரணங்கள்.

ஆதிமுதலுன்றன் மீதிற்கருணைவைத்
ததிகவாழ்விரு நிதியுந்தருபிரான்
நாதன்மனதில்வி ரோதம்வரும்படி
நடக்கலாகுமோ துரைப்பெண்ணே
மாதர்க்கிதுவிசு வாசமா-அந்த
மாப்பிள்ளைமெத்த விசேஷமா
சாதித்தொழிற்குள்ள மோசமா-உன்றன்
தாய்க்கிழவியுப தேசமா
ஏதடிலகுவா யெண்ணுறாய் சகி
யாதவேலையல்லோ அடடா மரி
யாதையோவிது காரியநீயறி
யாததோ பதினுயிரமாகிலும் (ஆசைநாயகன்)

வாலசீவகன் போலுன்னிடத்தில்
வந்திருக்கையி லிந்தப்படிமெள்ள
தேலிப்போவதுக ணிசமோ அடி
தேனேஆணுக்குப் பெண்ணருமையா

ஆலோசனைப்பண்ணிப் பாராயா-அடி
அவனுன்வீட்டுக் கிள்ளுக்-கீரையா
மேலுமுனக்கிது மேரையா-நாளை
விருப்பமுடனேகொஞ்சிச் சேரையா
சாலவித்தைசெய்தா லனமே யிது
மேலிமைக்கழகோ சொலடி யநு
கூலமுற்றசுபாஷித மான்மத
லீலைமுற்றிலுமே செய்தவன் (ஆசைநாயகன்)

ஆனைமுன்வரு மால்மனோன்மணி
அநுக்கிரகம்பெறு கனப்பிரபலன்காம
தேனுவெனத்தரும் ராமநாதகுரு
தேசிகன்மகிழ் மனோகரன்
மானபரன்மிருது வாக்கியவான் திவ்விய
மதுரகவிபுகழ் யோக்கியவான்
தானகர்ணசவு பாக்கியவான் சவுந்
தரபாண்டியனருள் சிலாக்கியவான்
நானிலம்புக ழிங்கிதவானபி
மானியுன்றனை யன்புடனேயணை
வோனலங்கிருத ரஞ்சிதமோகன
ஞானசங்கர லிங்கமகீபதி (ஆசைநாயகன்)

---

இராகம்-பியாகடை-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆருக்காகிலும் பயமா - சும்மாசொல்லட்டும்
அதுவென்ன ரகசியமா

அநுபல்லவி.

போருக்குள்விஜயனிம் முடிலிங்கத்துரையது
போகங்கிடைத்ததென்றன் யோகமல்லவோபெண்ணே (ஆ)

சரணங்கள்.

நான்பிடித்ததுமுருங் கைக்கொம்பு பிடியா
நடத்தைதெரிந்தவளுக் கொருத்தர்சொன்ன படியா
மான்போல்விழியார்க்கெல்லாம் இதுதானே நொடியா
வஞ்சியேயதற்குநான் அஞ்சின குடியா

மருவியெனைவெகு சரசவகைசெய்தான்
மெய்தானடி யந்தப்
பெருமையுள்ளதுரை யருமையெனக்கல்லோ
தெரியுமதிலொரு திரைமறவென்னடி (ஆருக்)

நானேசம்மதித்தால்மற் றவுளுக்கென்ன நஷ்டி
ராஜாங்கமாயிருந்தா லார்சொல்வ தட்டி
மானேமதயானையி லேறியும் திட்டி
வாசல்நுழையவேண்டு மோபளா கெட்டி
வசீகரமுள்ளபுருஷரை நான்சார்ந்தேன்
சேர்ந்தே னதிலென்ன
பிசகுபெண்ணே நடு நிசியில்வரவரக்
கசுகுசென்னவே சொல்லசிகையென்னடி (ஆருக்)

---

இராகம்-காம்போதி-தாளம்—ஆதி

பல்லவி.

இங்கேன்வந்தீரும தாசைக்கண்ணுட்டிகண்டால்
என்சொல்லுவாள் சாமி

அநுபல்லவி.

சங்கமுலவும்வீரை வளரும்விற்பன்ன
தாஷ்டிகனைமுத் திருளப்பமன்ன (இங்கே)

சரணங்கள்.

இங்கிதமாகவே நீரென்னைத் தொடவும்
இனக்காரிவந் தும்மைப்பூச விடவும்
சங்கையென்மீதி லெண்ணிவைத் திடவும்
தலைவிதியோபோம்போம் தறுகாமல் நடவும்
தருமதுரையெனவே தெரியமொழியவெகு
பெருமையுடனேநிதி சொரியும்மனசரியும்போம்
(இங்கேன்)

உறவாகஅவரவர் சிநேகங்க ளாச்சு
துமக்கும்நமக்குமினி மேலென்ன பேச்சு
அறிவேனறிவேனிந்திர சாலமேல் பூச்சு
அநுதினங்கை யாச்சு கட்டுச்சோ றுச்சு

அவளுடனினியத ழுவணையிலொயிலொடு
பவளவிதழ்பருகி நவரசமறியும்போம்
(இங்கேன்)

சதுர்வேதவீரையில் வளருநன் னேயா
சவுந்தரபாண்டியன் தந்தருள் சேயா
மதுரசெந்தமிழ்க் குதவுச காயா
மாதவனுனமுத் திருளப்ப ராயா
வளமையுடனே யென திளமைமுதன்மருவு
களபமணிபுயனே வளவுதெரியாமல்நீர்
(இங்கேன்)

---

இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இதுக்கோவுனைநான் பெற்றுவளர்த்தெடுத்ததுமகளே

அநுபல்லவி.

மதுக்கோகனக வதனன்பெரு
மாளையபாரதி கைவசமானுயே (இதுக்கோ)

சரணங்கள்.

ஆசைநாயகனென் றவனைக்கொண் டாடுருய்-அவ
னைக்ஷணம்பிரிந்தாலெங் கேயென்று தேடுருய்
ராசராசர்க்கும் நீயட்டிசொல்லிப் போடுருய்-அது
நடத்தையல்லவென்ருலென் னேடெதி ராடுருய்
தேசத்திலாரு மறியாத நேசமோ
சின்னக்குழந்தையோ கன்னிப் பிராயமோ
தாசிமகளுக்கிது சம்பிர தாயமோ
தாய்சொல்லைமீறி நடப்பது ஞாயமோ (இதுக்)

காதம்வீச சவ்வாதுபரிமளம் பூசுருய்-வகைக்
காரனைமெள்ளவரச் சொல்லியேவெள்ளை வீசுருய்
மாதுரியமாய்ச் சுளியச்சுளியப் பேசுருய்-மற்ற
மாப்பிள்ளைமாரைக் கண்டவுடன்சினந் தேசுருய்
தாசித்தொழிலாய்ப் பிழைப்பதும் போச்சுது
தம்பிக்குஆட நன்ருயிட மாச்சுது

தாதுநடக்கப் பொடிசுகள் வாச்சுது
சொல்லச்சொல்ல விபரீத மாச்சுது (இதுக்)

சொரூபமன்மதனுக வளர்வ சீகரன்-குளத்
தூரையமகராச னுதவுசு தாகரன்
உரிமையாய்மதுரகவி மகிழ்ம ஞேகரன்-புக
ழோங்கியபெருமாளைய மால்பிரபு டீகரன்
மருவிக் கொடுத்த மையல் மிகுந்தது
வாஞ்சையினுல்பணத் தாசை தவிர்ந்தது
இருவரெழுத்து மொன்று யிருந்தது
என்மகளேமெத்த நன்று யிருந்தது (இதுக்)

---

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவித்தை யெங்கேபடித்தீர்-நூதனமாக
இந்தவித்தை யெங்கேபடித்தீர்

அநுபல்லவி.

செந்திருவளர்வீரைச்ச வுந்தரபாண்டியனருள்
சுந்தரமுத்திருள்ப்ப மந்திரியேவகைவகையாய் (இந்த)

சரணங்கள்.

தாஷ்டிகராயுதித்தோமென் றுட்டிவைக்கிறீரெங்கள்
பாட்டியையும்வாய் கட்டினீர்-ஆண்பூடில்லாமல்
காட்டிலேவிட்டுவி ரட்டினீர்-எனக்குமையல்
பூட்டியேசுகந்தந்துசீ ராட்டியேபின்புமோடிபா
ராட்டியேகையில்வைகுண்டம் காட்டுறீரோகோகோநீர்தாம்
(இந்தவித்தை)

யோக்கியமாகவேநுனி நாக்குளிரப்பேசியென்னை
யேய்க்கலாமென் றெண்ணியே-கொக்குபிடிக்கப்
பார்க்கிறீரறிவேனிந்தச் சாக்குகளெல்லாமிங்கே
வாய்க்குமோமெத்தப்பிரியமுண் டாக்கிறீருமதுமனம்
நோக்கியமங்கையரையுள் ளாக்கவோவிதம்விதமாய்
(இந்தவித்தை)

நித்தியமதுரகவி சித்தமகிழவேநிதி
மெத்தவுமருள்பிர தாபா-நமசிவாய
உத்தமன்துணைம கீபா-தினமுமலர்
மெத்தையிலென்னைக்கூடிமோ கத்துயர்தீரச்செய்தருள்
கர்த்தனேமகாராஜஸ்ரீ முத்திருளப்பபூபாலா
(இந்தவித்தை)

---

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இருவருறவையு முறிவுகண்டவர்
என்றைக்கும் வாழ்ந்திருக்கட்டும்

அநுபல்லவி.

அரிவையேஐயம் பெருமாள்சாமிந
ராதிபதிக்கேதோ போதனைகள்செய்து (இருவருற)

சரணங்கள்.

பூவும்வாசமும்போலவேயநு போகமோகவைபோகமாயென்னை
மேவியிருந்தகன்னளனிப்படி வெறுத்திருக்கவுமாச்சுதே
பாவியெவள் சம்பிர தாயமோ-ஆவி
பதைக்குதே என்ன மாயமோ
பூவையே கொஞ்ச நேயமோ-இந்தப்
பொதுமின்னார்க்கிது ஞாயமோ
ஆவலாய்மணிமேடையின்மீதுகு லாவிவாழ்கிறநாளையிலேவளர்
சீவநாயகனைதயாளுட னேவிரோதிகளாயெனமோசெய்து
(இருவருறவை)

நாகரீகமதாகவேமதனுகமங்கள் தெரிந்துமின்பம் [குதே
நேகமானசையோகவிதமெல்லாம் நினைக்கையிலேசிந்தைதயங்
ஓகோஇனி யொன்று தோணுமோ-நா
னுயிரை வைத்திருக்கவும் வேணுமோ
தேகத்திலுமாசை பூணுமோ-முன்போல்
சேர்ந்துமெனது சண் காணுமோ
தோகையேயினியென்செய்குவெனதி மோகலாகிரிமிஞ்சுதுசாமிசி
நேகமானதுகண்டுபொறுமைய தாகவே முழுவஞ்சனையாகவும்
(இருவருறவை)

செய்யனதிகுல துய்யனுயர்வச்சிர தேகன்மகாராஜயோகனவனியில்
மெய்யனெனுமுத்துவீரப்பேந்திர வேந்தனுதவுசக்கிரேஸ்வரன்
வையகம்புகழ்கரு                                ணாகரன் - திவ்ய
மதுரகவிசொல்ம                                னோகரன்
தையலார்கள்வ                                  ஜீகரன் - செல்வம்
தரும்விஜயலட்சு                                மீகரன்
மெய்யன்புடனேயெனைமேவிய எய்யும்சிலைராகவனுமெனும்
ஐயம்பெருமாள்துரைபால்வெகுபொய்யும்பொருளாயெனமோசொ
(இருவருறவை)                                                  (லி

---

இராகம் - கண்டா - தாளம் - ஆதி.

பல்லவி.

இளமயிலேயெனை யிளமையிலேபிரிந்த
என்றன்கண்ணாளனிங்கே வந்தானோ.

அநுபல்லவி.

வளமாய்மங்களேஸ்வரியைப் பணியுமுத்திருளப்ப
மாலைத்தேடிவந்தேனே செந்தேனே                    (இளமயிலே)

சரணங்கள்.

வனமேயென்றனிடயவ் வனமேவீண்போகுதே
மானேநேசன்மேல்மோக மானேன்
கனமேயெனக்கவர்மோ கனமேமதுகரஞ்சேர்
கமலவாவியேயென்னைக் காவாவியே
அனமேயெவ்வளவேனும் அனமேருசிக்குதில்லை
அம்பரமேமன தம்பரமே
தனமேமிகவிம்மிவி தனமேமிஞ்சுதே
தாகந்தணிப்பவரும் நீரிளநீரே                       (இளமயிலே)

நிதியேஉன்றனிடச்சந் நிதியேவந்தேனருள்செய்
நாவற்கனியே நாவற்கனியே
கெதியேதுமில்லையெனக் கெதிரேநிற்குமாவே
தேக்கேதகையானேன் கேதகையே
உதியேயிருவிழிமுத் துதிருதென்மானத்துக்
குடையவரைக்கண்டீரே உடையவரே

மதியோமயங்குதுசம் மதியோபுன்னையேவரு
வாரோசொல்தயவாலே வடவாலே (இளமயிலே)

வீரைமேவியரகு வீரன்சவுந்தரபாண்டிய
விதூரனருளில்வரு விஜயவதனன்
வாரணிதனமடவாரை வெற்றிகொள்ளுமன்
மதராஜனுக்கும தனராஜன்
பாரஞ்சேர்மதுர பாரதிக்கநுதினம்
படியளந்தோன்முன்னம் படியளந்தோன்
ஏராகவேயென்னையே ரம்பியமாய்ச்சேர்ந்தமுத்
திருளப்பராஜேந்திரன் தேவேந்திரன் (இளமயிலே)

---

இராகம் - காம்போதி - தாளம் - சாப்பு.

பல்லவி.

இனியிங்கே நடவாதையா - தேவரீர்போம்போம்
இனியிங்கே நடவாதையா.

அநுபல்லவி.

அனவரதகல்யாண உடையணேந்திராவித்தை
அறிவேனறிவேன் ஓகோகோ வகையெல்லாம் (இனி)

சரணங்கள்.

ஆதியில்ஒருதரம் பாதிராத்திரியில்வந்
தடியாளிடத்திற் படுத்தீர் - அந்தச்
சேதியுடனேயவள் காதில்சொல்லியேசதி
செய்தூக்காட்டிக் கொடுத்தீர் - இந்தச்
சாதுரிகவித்தையும் சூதுவினையுமுழுச்
சாதனைகளுமிந்திர பேதமும் நீரெங்கே
தான்படித் தீரோ - இதுவெல்லாம்
என்படித் தீரோ - தேவரீருடைய
செய்தியும்என்மீதில் பிரீதியும் நன்றாகத்
தெரியவந்ததுமெத்தப் பெரியசாமிதான்காணும்
போதும்போதுமிப்போ தேதுக்குவீணிலே
பொருத்திப்பேசுகிறீர் ஓகோகோவெகுநேர்த்தி
(இனியிங்கேநட)

திரும்பத்திரும்பவந்து சருவுநீரெந்தனைத்
 தெருவிலிழுத்து விடவோ-மேலைத்

தெருவாளுடனேயென்னைப் பொருதவிட்டயல்வீட்டுத்
 திண்ணையிலிருந்து நாடவோ-மெத்த

உரிமைபோலவந்து நரிகுளுப்பாட்டு; நீர்
 உமக்குத்தெரிந்தவித்தை நமக்குத்தெரியுமிங்கே

ஓடாது காணும்-அந்தப்பாம்
பாடாது காணும்-தேவரீருடைய

திருவிளையாட்டெல்லாம் செல்லுமிடத்திற்செய்தால்
 நடக்குமிங்கேசெய்தால் நடக்குமோபோம்போம்
ஒருதரம்சொன்னால்பின்னும் மறுதரம்தெரியாதோ

உருதிசொல்லுகிறீர் ஓகோகோவகைவெல்லாம்
(இனியிங்கேநட)

பன்னுதமிழ்க்குதவு கன்னன் சூரைமருது
 பாண்டியராச குமாரா—நாளும்

அந்ததாருவெனவே இந்நிலத்தினில்வந்
 தவதரித்த குபேரா-புர
மன்னர்திறையளக்கும் தென்னவரமணிக
 மதுரகவிக்குதவு சதுரவிதாரணிக

மதனுவ தாரா — ஜெகம்புகழுற்
புதஜெய சூரா - அநுதினமும்
சொன்னமொழிதப்பாத நன்னயனேமுல்லைத்
 தொடைமார்பணியுமெங்கள் உடையணமகிபாலா
என்னைமிகமருவிப்பின்னும் வேடிக்கைசெய்த
 இன்பத்துரையேபோம் ஓகோகோவெகுநேர்த்தி
(இனியிங்கேநட.)

---

இராகம் - தோடி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

இன்னமுந்தோணவில்லையோ — நடந்
 திருக்குமடி பெண்ணே.

அநுபல்லவி.

மன்னவமமன்ரு தேந்திரபூபதி
மனமகிழ்சோ பனக்கல்யாணன்
கன்னன்மொழிமட வார்கள்மோகக்
கரும்பையனந்தக் கரணமுனக்கு (இன்னமுந்)

சரணங்கள்.

தையலேசும்மா சொல்வாரடிமெத்தத்
தானேபரிசுத்தம் போலே - அதை
மெய்வசனமென் றெண்ணுகிருயென்ன
வெளுத்ததெல்லாம் பாலே - உன
தையனிடத்தின் மையார்குழலி
யடிக்கடிபதம் படிக்கவந்ததும்
சையோகவிதஞ் செய்யவந்ததும்
சாடைதெரியாதோ பேடைமயிலே
கலவையுந்தழுவணைகளும்கமழ் தருகதம்பமுமிருகமதஞ்செறி
கலவையும்பரிமளம்கிரம்பவே கமகமென்குதேயவர்செய்வஞ்சகம்
(இன்னமுந்)

பொன்னரசேயது வென்னநம்பிக்கையுன்
புத்தியுமிப்படிப் போமா - நான்
சொன்னதுதான்மெய்பொய் யென்றுதெரியவே
சோதிக்கவேண் டாமா - அவள்
சன்னைசைக்கினைசெய் தெந்நேரமும்பேசும்
தனதைப்பாரில்லா மனதைப்பார்பெண்ணே
என்னினவைப்போலென் றெண்ணுகிருய்கைப்
புண்ணுக்குங்கண்ணுடி யோசக்கியமாகவே
உயர்சிலம்பொலிகலகலென்றிட உபயகொங்கைளசையவங்கண
மயலறிந்திடநிதமுமுன்துரை யருகில்வந்தவள்சயனமுஞ்செய்தும்
(இன்னமுந்)

மதுரபாரதிக் குதவிசெய் செல்லூர்
வாசுதேவையன்சுதா கரன் - தரு
நிதிபதிஅனந் தையன்சின்னைய
னிருவருக்கும்சகோ தரன் - மலர்ப்

பதுமலட்சுமிகிருபைக்கிசைந்தசௌ
பாக்கியவான்கனயோக்கியவான்வெகு
விதரணகரன் ஜெகமெங்கும்புகழ்
வீசுசுந்தரராசன்கரும்பையன்
மிகவுமுன்றனையலதுபெண்களை விதமுடன்தொடுவதிலையென்பது
சகலமும்பொய்வசனமிசைந்தொருதருணிவந்ததும்இவரணைந்ததும்
(இன்னமுந்)

---

இராகம்-பியாகடை-தாளம்-சாப்பு.

பல்லவி.

எவளுக்காகிலும் பயமா-சும்மாசொல்லட்டும்
இதுவென்னாக சியமா

அநுபல்லவி.

விவரத்துரைதென்காரை வேலாயுதேந்திரன்சொல்
வீமராமசாமிமேவிய காமிநானதிலொம்மலென்னடி (எவளு)

சரணங்கள்.

இன்பத்துரையிடத்தி லெனக்கதி மோகம்
என்னிடத்திலுமவர்க் கிஷ்டம நேகம்
வம்புக்காரிகள்கூடி என்னசிர் வாகம்
மாதேவகையாய்வந்து வாய்த்துதென் யோகம்
வளமையுள்ள துரைவளவில் நிதஞ்செல்வேன்
புல்வேன் அடிசெஞ்சொற்
கிளியேயவள் வன்சொல்விது
களவலவே அதில் ஒளிமறவென்னடி (எவளு)

மன்னவனுக்கென்னை ரக்ஷிப்பது மலையா
மலரைச்சேர்ந்துநார் மணம்பெற்ற திலையா
சன்னைக்காரிகட் கிதுதான்க வலையா
தடுத்துச்சொல்வதற்குநா னொருத்திக்குள் விலையா
சமர்த்தியென்உப ரதித்தொழில் மிஞ்சுவேன்
கொஞ்சுவேன் அடிபெண்ணே
நமக்குமனதினில் ரமித்தபடியநு
பவிக்கும்விதத்திலோர் கமுக்கமென்னடி. (எவளு)

சேதுபதிராம சாமித — யாளன்
சித்தமகிழ்தரு புத்திவி — சாலன்
மேதினியில் மதுர கவிக்கநு — கூலன்
வீமராமசாமி புருஷபாஞ் — சாலன்
வீக்ஷண்யமிகு கடாக்ஷண்யமிகுந்தேனே
மானே எனக்கென்ன
சாக்ஷிகித்தமுங்கண் காட்சிருசுவுள்ள
சாக்ஷிகளுமொரு சூக்ஷமமென்னடி (எவளு)

---

இராகம்-பந்துவராளி-தாளம்—திரிபுடை.

பல்லவி.

எவள் தான்சொன்னுலென்னடி-எனக்கவர்மோகம்
எவள் தான்சொன்னுலென்னடி

அநுபல்லவி.

சவுமியமால் முத்திருளப்ப
சாமிமீதில் ஆசையென்று (எவள்)

சரணங்கள்.

தத்தைமீதில்வருமன் மதன்பொன்னெரு — கோடி
தந்தாலுமனதுவைத் துத்தழுவேனு — டிச்
சித்தவிர்த்தியறிந்தும் லீலைசெய்துற — வாடி
தேகமிரண்டுமொன்ருனல் சிநேகிதம்போ — மோடி
(எவள்தான்)

கரும்புதின்றவட்குவேப்பங் கனியில்ருசி — யேது
கால்நாழிகைப்பிரிந் தாக்கால்மனம்பொ — ருது
அருந்தவமுனநான் செய்ததாலென் — மீது
அன்பாகவிருப்பது பொருமையாயிப் — போது
(எவள்தான்)

தங்கமேருச வுந்திரபாண்டியன்கு — மாரன்
தயவுடனேமதுர கவிதமிழ்க்குப — காரன்
அங்கசன்முத்திருளப்ப அதுலன்ரெகு — வீரன்
அநுதினமும்மேவுவதென் னதிர்ஷ்டாநு — சாரம்
(எவள்தான்)

THE MADURA TAMIL SANGAM

இராகம்-பியாகடை-தாளம்-சாப்பு.

பல்லவி.

எவள்வேணுமோ அவள் சுகிக்கட்டும்-நீயதை
இங்கேயேண்டி சொல்லுகிறாய்

அநுபல்லவி.

கவனப்பரியில்வரு மால்மருதேந்திர
கர்த்தனிடத்திற்கொடுத்து வைத்தசீமாட்டி (எவள்)

சரணங்கள்.

இவ்வளவும்நடந்தபின் னென்னவி சாரம்
இன்றுவாய்த்ததோ அவள்நினைவின்பிர காரம்
அவரைத்தான்சொல்லவுண்டோவிவ காரம்
அதுவெல்லாம்சகியேயென் னதிர்ஷ்டதாரு சாரம்
ஆதியிற்சொன்னசேதி அத்தனையும்வெறும்பொய்யானதென்னிட
ஜாதகப்பலன் மாதேமித்திர
பேதமுற்றிடு பாதகத்திகள் (எவள்)

இனிமேல்நமக்கென்னடி அந்தப்பிரஸ்த் தாபம்
எள்ளத்தனையாகிலும் அதிலுண்டோ லாபம்
அனமேமுன்னாளிலே நான்செய்த பாவம்
ஆர்செய்தாரடிவளரு தேமனஸ்த் தாபம்
அக்கரைக்கவள்மிக்ககற்பனையும் பொய்யும்சொல்லியென்னை
பக்குவத்தில் மலைக்கவைத்துமி
கக்கலைத்திடு சக்களத்திகள் (எவள்)

ராஜலட்சுமிஅக லாதபொன் மார்பன்
நாளுமதுரகவிக் குதவும நீபன்
வீசும்புகழெனும்சற கீர்த்திப்பிர லாபன்
விசுவைத்துரைஉடையா ருதவுசல் லாபன்
வேந்தன்சற்குண சாந்தனற்புதவான் கனவான் நிதம் என்னைச்
சேர்ந்ததனபதி வாய்ந்தமதரதி
காந்தனெனுமரு தேந்திரனிடத்தில் (எவள்)

இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்மகள்மெலிந்த வர்மமே தையா-சாமிக்கேற்காடைக்கும்
என்மகள்மெலிந்த வர்மமே தையா

### அநுபல்லவி.

என்மகட் கிசைந்த பூமா-மங்க
ளேஸ்வரியைப் பணி நேமா
தன்மதுரையே சங்கி ராமா-பிர
தானிமுத்திருளப்ப சோமா (என்)

### சரணங்கள்.

இனித்தபாலன்னம் பொசிக்கவாவென்ருல்
என்னையடிக் கிருள்-உம்மை
நினைத்துநினைத்து மனத்துயரால்கண்
ணீரை வடிக் கிருள்-முகில்
இனத்தைநேர்குழல் திருத்திமாமலர்
எடுத்துமுடித்தா லவிழ்த்தெறிந்துஎன்
றனைச்சினந்துவைத் தாட்டிருள்-பெற்ற
தாய்க்கடங்காத நீலி-தேறு
தலைகள்சொல்வதென் சோலி
ஊர்க்குளறிந்தால் கேலி-சாமிக்
குகந்தவள்புத்தி சாலி (என்)

சித்தத்திற்கேக்க நடந்தவள்மேல்மோடி
செய்யவு மாகுமா-தவ
மெத்தனையோசெய்து பெற்றவள்மன
திப்படி நோகுமா-உமை
நித்திரையில்வரக்கண்டு விழித்தபின்
நினவோஈதென்னகனவோ வென்று
சித்தப்பிரமைகொண்டவள் போலேயெங்குந்
தேடுருள்காணு நேரம்-ஈ
தென்னகாமவி காரம்-மோடி
செய்குவதன் சாரம்-அவள்
மோகத்தைத்தீருமிந் நேரம் (என்)

சுந்தரவீரசவுந்தர பாண்டிய
னருள்கு மாரனே-நாளும்
செந்தமிழ்மதுரகவியைவைத்து
ரக்ஷிக்குமு தாரனே-பால

சுந்தரசீவகனேமுத்திருளப்ப
துரையேயிவளுக்குப்பரவசமிக
வந்துடனேகூடிப்பிரிந்தநாள்முதல்
மாமலராள்மூலே மேலே - மதன்
மலர்தொடுப்பத ஞாலே
தாமரையிலேநீர் போலே - மகள்
தயங்கிறாளொருக் காலே (என்மகள்)

---

இராகம் - அசாவேரி - தாளம் - சாப்பு.

பல்லவி.

என்னதான் சொனாரடி - அன்னமேயவர்
எப்போது வருவாரடி.

அநுபல்லவி.

பன்னுதமிழ்க்குதவு கன்னன்புதுவைவளர்
பங்கயத்திருமார்பன் வெங்கடேஸ்வரசாமி (என்ன)

சரணங்கள்.

மன்மதன்பகை தீருமா - இருவருக்கும்
மருவும்வேளையும் நேருமா
ரம்யமாய்ப்பகர்ந்தாயோ நல்வார்த்தைகொணர்ந்தாயோ
சும்மாவந்து நின்றாயோ சொல்லுபழமோ காயோ
(என்னதான்)

உருக்கும்விரக மாறுமா - மனதின்படி
உண்மையாய்நிறை வேறுமா
கருத்தினில்விசு வாசம் கண்டதோ என்ன மோசம்
இருக்குதோமன நேசம் இரண்டிலொருவி சேஷம்
(என்னதான்)

பூசுரகுல தீபன் - ஆபத்தாரண
பூபனருள்பிர தாபன்
வாசமகிழ்வ சீரன் மதுரகவிக்கு தாரன்
வீசும்புகழ்விஸ் தாரன் வேங்கிடேஸ்வர தீரன்
(என்னதான்)

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

பல்லவி.

என்னமோகஞ் செய்கிறீர் - நன்றாய்
இருந்துபோமையா.

அநுபல்லவி.

பன்னுதமிழ்வாணர்க்குக் கர்ணனைப்போலுதவிப்
பாங்குபெற்றசு பாஷிதமால் திரு
வேங்கடப்பிரபு வேவரவாநீர் (என்ன)

சரணங்கள்.

அம்புவிழியாரெல்லாம் சம்போகத்தில்மிகவும்
அக்கரையாயுமக்குக் கைகாணிக்கைகொடுத்த
கும்பத்தனத்தைப் பாரும் - சந்திரன்போலிருக்
கிறவதனத்தைப் பாரும் - வேண்டிய
சம்பத்தும்யவ்வனமு ரம்பத் தெய்வங்கொடுத்தால்
சவுக்கியமாயனுபவிக்க வல்லவோவேணும்
வம்புக்காகிலுமதன் தென்புசெய்துகொள்ளுநீர்
மான்வடிவானமின் னார்வனுவேஉற
வரவதுபர்வத போபலனல்லவே (என்ன)

அந்தணர்முதலாய்மிகுந்த பெரியோரெல்லாம்
ஆகமப்படிபுண்ய யாகங்கள்செய்வது
இந்திரபோகத்துக் கல்லவோ - உமக்குநான்
யவ்வனவய தல்லவோ - கொலுமுகப்பில்
பைந்தொடியார்களெல்லாம் வந்துமையலாயென்னைப்
பாருன்னைப்பா ரென்றும்மைக் கோரிக்கொண்டிருக்கையில்
சந்ததம்நீரிப்படி தெந்தனம்செய்யலாமோ
கங்கதியோ அடடாமயில்போல்வெகு
பெண்களெலாம்சினை வாய்மெலிவார்களோ (என்ன)

உற்பன்னன்தென்னருகைச் சுப்பிரமண்ணியபூபாலன்
உதவுசுமுகாசெஞ்சொல் மதுரகவியறியும்
பற்பனசுகு ணளா - ராஜ ஸ்ரீ திரு
வேங்கடமகி பாலா - செழுங்கைநகர்

ஒப்புமுலையார்களும் செப்புமுலையார்களும்
மீன்போல்விழியார்களும் தேன்போல்மொழியார்களும்
அற்புதங்களாய்வந் திருப்பதறிந்துமையா
ஆதரவாய்மரு வாமலிந்நாள்வெகு
பேதகமாயெண்ணு நீர் மரியாதையோ (என்ன)

---

இராகம் - மோகனம் — தாளம் - ஆதி.

பல்லவி.

என்னவார்த்தைசொல்லுகிறாய் முன்னெப்படிநடந்
திருக்குமோ அடிபோடி.

அநுபல்லவி.

மன்னவனுன்னிடத்தில் தன்மைக்காரனல்லோ
மற்புயனென்னுமானை யப்பபூபாலனை

சரணங்கள்.

பாவையேஉனைச்சேர்ந்த சீவநாயகன்மற்றப்
பர்த்தையர்க்குத் தூதுவிடு வானோ - அந்தத்
தேவரம்பைவந்தென்னை மேவவேண்டுமென்றாலும்
செங்கையினாலே தொடு வானோ
நீவிருதாவிலேயேன் மயங்குகிறாய்
நெருப்பிற்புழுப்பற்றுமோ கருத்தறியவேண்டாமோ
நிசமுள்ள பூமனடி - பெண்ணே அவன்
தசரத ராமனடி - உன்னுடனே
சொன்னதார்சும்மா வீசுகிறாய்பரி
யாசமோடிச பாசுநன்றாச்சுது (என்ன)

மாதரசேநிமிஷப் போதுனைப்பிரிந்தால்
மகிபனுக்குமனது தள்ளாதே - மெள்ளக்
காதில்வந்துமித்திர பேதஞ்சொல்லுமின்னார்கள்
கற்பனைவார்த்தையைக் கொள்ளாதே பெண்ணே
ஏதாகிலுஞ்சாடைகள் நீதான்கண்டதுமுண்டோ
இருப்புத்தூணைக்கரையா னரிக்குமோஉனக்குத்தான்
என்னசந்தேக மடி - பெண்ணே ஆர்
சொன்னவிவேக மடி - அவருக்
குணையறியாதொரு தனதுள்ளதார்சொல்லு
வனிதையேநீதுரை மனதறியாமலே (என்ன)

ஆராய்தமிழ்மதுர பாரதிக்குதவிசெய்
அப்பனயினுராருள்வர பாலன் - கன
தாராளன்பொன்னப்ப வசீரன்திரவியம்ராம
சாமிக்குந்துணையான மகி பாலன் - வெகு
கீராளன்வாணருக்குத் தாருவைப்போலும்காம
தேனுவைப்போலுந்தரு மானையப்பராஜேந்திரன்
திவ்வியகுணாள னடி - உனக்கவன்
பவ்வியாநுகூல னடி - வச்சிர
தேகனுடன் தனதாக அணைந்த அநு
போகவிதங்களநேக மறிந்து நீ (என்னை)

---

இராகம் - பந்துவராளி - தாளம் - சாப்பு.

பல்லவி.

என்னைமருவிய நன்னயத்தைநான்
என்னென்றுசொல்லுவே னன்னமே.

அநுபல்லவி.

அன்னைஞானும் பினகயைத்தினமும்பணி
அற்புதன்கும ரப்பபூபதி (என்னை)

சரணங்கள்.

கும்பமுலைகள்நிரம்பஇலகுக தம்பமுயர்புழுகும்பரிமளந
யம்பெறவேமிகஇன்பமிகுமாண்டி யப்பன்கந்தபொடிபூசியே
சொம்பர்கவேமலர் முடித்ததும் - என்றன்
துரைவெள்ளிலைச்சுருள் மடித்ததும்
செம்பவளவிதழ் கடித்ததும் - இசை
தெரிந்துமேகும்பம் பிடித்ததும்
சம்பிரமத்தொழி லாய்மதநூல்முறை
யின்படிக்கொரு சாமம்விடாமலு
டம்புமெய்யுள காதியில்வேர்வைய
ரும்பஎத்தனை யோசுகமாகவே (என்னை)

சேருமுபரதிகோதிமுறையி லாரமணிகள்கலீரெனமேவரு
காரைநிகர்குழல்சோரவெனதிரு கையில்வளைகளும்நெரியவே
நேரிலிடைதுவண் டாடவே - கொங்கை
நேர்த்தியொடுதாளம் போடவே

மாரன்சிலையைவைத் தோடவே - மலர்
வண்டுகள்கீதங்கள் பாடவே
கோரம்வைத்தெனை துச்சியிலேயவர்
கூர்நகத்தை யழுத்தியபோதுவீர்
வீரெனத்தரு மெய்ச்சில்ராசிகு
பீரெனப்பெரு கத்தயவாகவே (என்னை)

பூமனதிகுலசோமனதிபல வீமன்விஜயசங்கிராமனநுதினம்
மாமருவிவளர்சாமிஅம்பல வாணனுதவுசுதாகரன்
ராமனிகர்கருணா கரன் - மது
ரக்கவிக்குதவு மனோ கரன்
தேமல்முலையார் வசீ கரன்
திசையும்புகழ் பிரபுடி கரன்
தேமருக்குவளை புயமாலதி
காமனற்புத சற்குணவானெனை
நேமகத்தொடு மெத்தையில்மேவிய
மாமுகிற்கும ரப்பதயாநிதி (என்னை)

இராகம்-பூரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்டவுடனே என் முரணுமோடியும்
கண்ணிற்காணேனடி மானே.

அநுபல்லவி.

தண்டாமரையில் வாழ்திருத்
தையல்அன்புறு துய்யனிங்கித
மெய்யனென்கும ரையன்வந்ததை (கண்ட)

சரணங்கள்.

எத்தனைபாஷை வைத்தே னடி - நான்
என்னென்றுடனே பிரமித்தே னடி
தத்தையேமடவார்கள் புத்தியெல்லாம்மெத்தச்
சபலபுத்திகள்தா னடி
சித்தசன்போல்வாவே - உடல்
திமிருடன்கன குமிழிகண்டெழு
தமிகிறைந்தது சுமுகசந்திரன் (கண்ட)

பேதமையாகிப் போனே ணடி - நான்
பித்தசரீர மானே ணடி
மாதேயொருநிமிஷப் போதிலுள்ளாக்கிய
வகைக்காரனிவன் தா ணடி
நீதன்வடிவைக் கண்டதே - காம
நிலைகுலைந்தது சலமைகண்டுமெய்
சிலசிலென்றது நிலவில்வந்ததை (கண்ட)

மிகமதுரகவிக்கு தாரன் - தேவை
வேங்கடாசலமால்கு மாரன்
மகிபதியெனும் ராமநாதன்துணைவன்
மால்குமாரசாமிவ சீகரன்
அகமகிழவே வந்தனன் - அல்குல்
அரவக்கிண்கிணி பரபரென்றது
கலவிசம்பிரம மதுநடந்ததை (கண்ட)

இராகம்-துசாவந்தி—தாளம்—ஆதி.

பல்லவி.

கலந்தணைந்ததையென்ன சொல்வேன் - அவன்
கைகண்டசாமியடி

அநுபல்லவி.

நிலம்புகழ்மூத்தப்பராச துரந்தரன்தந்தருளிய
நேர்த்தியானவிஸ்த் தாரனென்கோன்வெகு
கீர்த்திசாலிகுற் றாலலிங்கேந்திரன் (கலந்தணைந்)

சரணங்கள்.

சோமனைப்போல்வந்தெனது
தொடையிடைநடுவிலே கடிதடமடுவிலே
தாமரைப்பூப்பூத்த தென்றான் - பூசைக்கின்றைக்குக்
காமனுக்குவாய்த்த தென்றான் - மட்டடங்காத
மாமயற்பெருக்கிற்குளித்தான்
சாமமட்டுங் கும்பம்தொட்டு நேமகத்தாருச்செபித்துச்
சங்கொலிநாத முழங்கியபூசை
யிலங்கிடதேவதை யுங்களிகூரவே (கலந்தணைந்)

பார்த்திபனென்முலே தொட்டுப்
பருகிநெருட விறு விறெனநிதம்பக்
கீற்றிலேதமி பெருகுமாம் - ஆறைலிரண்டுக்கும்
சூத்திரமொன்று யிருக்குமாம் - இதெல்லாங்காம
சாஸ்த்திரத்தின் வழிதானோ - அல்லாதவன்
சாதுரியத் தொழில்தானோ
பூத்தமலர்மெத்தைபில்மல் லாத்திமேற்கொண்டிருதொடை
பூட்டினைது தானறிவேனென்ன
பீஷ்டமானதெல் லாம்நிறைவேறவே (கலந்தனை)

தானகர்ணனைப் போலவே
தருநவமணியென இருநிதியுதவிய
ஆனையப்பமகி பாலன் - மருகனெனும்
மானிலத்திற்புகழ் சீலன் - மதுரகவிக்
கானவித்தைக்கருள் போசன் - ஆறுமுகக்
கர்ணனுக்குத்துணை நேசன்
மீனையொப்பெனும்விழியார் மோகனன்குற்றாலலிங்க
வேந்தன்லீலைசெய்போரினிலேயெதிர்
நேர்ந்தபேய்களெல்லாம்மலையேறவே (கலந்தனை)

---

இராகம்-காம்போதி—தாளம்-ஆதி.

பல்லவி-

கல்விக்காரிபேச்சைக் கேட்டுக் கொண்டுநீர்சொந்தக்
காரியைமறக்கப் போமோ.

அநுபல்லவி.

வள்ளாளனேவீரைமுத் திருளப்பபூபா
வனிதையர்க்குளமித்திர பேதஞ்செய்தவளந்த (கல்விக்காரி)

சரணங்கள்.

சின்னவயதிலும்மைச் சிநேகித்தநாள்முதல்
இன்னமொருவருடன் பேசியறியாள்காண்
பின்னபேதகமாக வேயுமதிடத்தினில்
சொன்னவள்பாலுக்குங்காவல் சொன்னேன்பூனைக்குத்தோழன்
(கல்விக்காரி)

கட்டியசெம்பொன்முடிப்புக் காசையாயொருவர்போல
வட்டிவைத்தவிடமெல்லாம் வாய்வைக்கிறவளல்ல
கெட்டிகெட்டிநன்றுச்சுதுமக் கேதுதெரியாதுமெள்ள
தொட்டில்தனையுமாட்டித் தொடையுங்கிள்ளுவாளந்த
(கல்விக்காரி)

அன்னதாருவாம்வீரைச் சவுந்தரபாண்டியன்
தன்னருளினால்வந்த சற்புருஷமேருவே
பன்னுதமிழ்மதுர பாரதிதுதிசெய்யும்
மன்னுமுத்திருளப்ப மயிலியுடனணைநீ
(கல்விக்காரி)

—()—

இராகம்-சௌராஷ்டகம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

காதல்கொண்டேயிந்த மாதுவந்தாள்வனுக்
காமிகாணென் முத்துச்சாமி.

அநுபல்லவி.

மாதுவளர்புய னேவீரைமேவிய மால்முத்திருளப்ப ராயா
வையகமெங்கும்விளங்கமழைபெய்ய மானிடர்கள்துலங்க - கன
வரிசைபெறுதமிழ் அருமையறியவும்
மகிழநிதிதரு மகிமையொடுபுகழ
வந்துதித்தரு ளிந்திரன்மெய்ப்பொடு
உன்றனைத்தழுவும் திறத்தினள் (காதல்)

சரணங்கள்.

வண்டுகுடிகொண்டி லங்குங்குழல்தன்னில்
வைத்தசெழுமருச் சொருக்கும் - மலர்ச்
செண்டுமுலைவடி வுங்கண்டஞானிகள்
சித்தர்மனத்தையு முருக்கும் — இந்த
மண்டலமெல்லாஞ் சிறந்திடவேமலர்
வாசமென்னஇரு வருக்கும் - மோகங்
கண்டிதழ்தன்னை யருந்தவும்வேணுமோ
கண்டவுடன்ருசித் திருக்கும்
கஞ்சமலர்த்திரு நங்கையாள்
மிஞ்சுமாதிப்பெண்ணுன் தங்கைசெய்

கலவிபலபல விதமுமுபாதி
இனியதொழின்முறை பகலிரவுமென
கந்தரத்தி லிருந்துபுட்குரல்
தந்திடத்தகு மந்திரத்தினள்
(காதல்கொண்)

அன்னமிவள்நடை கண்டுமிகமன
தஞ்சிவணங்கியே நாணும் - வானில்
மின்னெனவேஇடை உண்டில்லையென்றிந்த
விதங்களாகவே தோணும் - வளர்
பொன்னுலகத்தின்ம டந்தையரையிந்தப்
பூவைக்கிணைசொல்ல வேணும் - வடி
வென்னசொல்வேன்வகைக் காரிதான்வெகு
இங்கிதப்பெண்மயில் காணும்
இன்பமேமடைமே லிருந்து
நல்லவிதம்பெறு வேள்நூல்தெரிந்து
இசைகள்பயிலொடு நவரசம்அபி
நயமுமினிதொடு பகர்வளியல்முறை
இன்பமுற்றிடு செண்பகங்கமழ்
அன்புமொய்த்திடு சம்பிரமத்தினள்
(காதல்கொண்)

தென்னவனுமெங்கள் முத்துராமலிங்க
சேதுபதிமகிழ் சீலா — வாணர்
பன்னுதமிழுக் குதவுசவுந்தர
பாண்டியனுதவிய பாலா - நாளும்
அன்னதருவென வேயுலகத்தில்
அவதரித்த அநு கூலா - உயர்
மன்னவனென நமச்சிவாயேந்திர
மகிபன்துணைசேர்கு ணாளா
மாற்றலர்கள்பணி துங்க கன
கீர்த்திபெற்றபிரசங்க செஞ்சொல்
மதுரகவியெனும் எனதுதமிழ்தனை
மனமகிழவரு விதரணீகனுயர்
மற்புயத்தனே இப்புவிக்குள்ளே
செப்புமுத்திரு ளப்பகர்த்தனே
(காதல்கொண்)

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கூடியிருந்ததெல் லாமறந்திப்படி
குடிலஞ்செய்கிறாய் பெண்ணே

அநுபல்லவி.

தோடிபைரவி பாடிக்கொண்டேசெய
துங்கனுமிம்முடி லிங்கவசீரனைக் (கூடியிருந்த)

சரணங்கள்.

கன்னிப்பருவத்தி லுன்னைமருவிய
காயக்கங்கொஞ்சமோ மாதே - உன்றன்
வன்னக்குவிமுலை தன்னில்நகக்குறி
மாத்திர நூறுபொன்சவ் வாதே - அடி
மின்னரசே அந்த மன்னவன்சையோக
மென்றைக்குங்கிடை யாதே - சந்திர
பிம்பானன சுகுணாளனை அன்பாகவு முறவாய் வெகு
சொம்பாகிய முறைகோள சம்போகமு மிகவேசெய்து
(கூடியிருந்த)

மங்கையேயுன்னைத் தழுவினசாமிகை
மற்றவளைத்தொடுங் கையா - சற்றும்
சங்கையில்லாமலே ஆதியில்நீசொன்ன
சத்தியமெல்லாம்வெறும் பொய்யா - மலர்ச்
செங்கமலமுகப் பைங்கிளியேயுன்றன்
சின்னபுத்திக்கென்ன செய்யா - உயர்
சேலார்விழிமயிலேஇது ஆலோசனையலடிதுரை
கோலாகலமுடனேமத நூலாகமநெடியாகவும்
(கூடியிருந்த)

அத்திக்குமுன்வந் துதித்துக்கிருபையருள்
ஆண்டவனைப்பணி தீரன் - கண
வர்த்தனைசேரும்செல் வத்துரையானகு
மாரலிங்கையன்கு மாரன் - புக
ழெத்திசையுஞ்சொல்ம துரகவிக்கரு
ளிம்முடிலிங்கவ சீரன் - பக

லிரவாகவும்மணிமேடையில் அரைநாழிகைபிரியாமலே
சுரதாதிகள்சமபோகவி வரமாகவுமநுகூலமாய்க்
(கூடியிருந்த)

---

இராகம் - பியாகடை - அடதாளம் - சாப்பு.

பல்லவி.

கோபமே ஐயா - சாமியென்மீதில்
கோபமே ஐயா.

அநுபல்லவி.

தாபரப்பொருளான மங்கைமங்களேஸ்வரித்
தாயைப்பணியுமால்முத் திருளப்பமகிபாலா (கோப)

சரணங்கள்.

ஆனாலுமிப்படி சொல்வ தேனையா
அந்தக்காரணந் தெரிந்தின்னஞ் சோதனையா
மானாளுங்களுக்கவள் செய்த போதனையா
மதிமந்திரியே தாங்களறியா யோசனையா
நானப்படிக்கொற்றவளா பளா உள்ளாசையி
லேகித்தியசை யோகத்தினில்
மோகித்தவள் மீதித்தனே (கோபம்)

சாமிக்குநானேதும் குறைகள்செய் தேனா
சற்புருஷனேஇதற்குப் பாத்திரம் நானா
நேமித்தகலவியி லட்டிசொன் னேனா
நேசமறவேனென்ற தெல்லாம்பொய் தானா
பூமெத்தையிலே நித்தியமுமெனை மேவவே
காமத்துயரால் மெத்தவும்
மால்பெற்றவள் மீதித்தனே (கோபம்)

வீரைச்சவுந்தர பாண்டியன்கு மாரா
மிகவுமதுரகவி தமிழ்க்குப காரா
பாரோர்புகழவருங் கீர்த்திவிஸ்த் தாரா
பதுமத்திருவளர் முத்திருளப்ப தீரா
வாரத்துரையேயன்புடனே உனை யெந்நேரமும்
சேரத்தயவே வைத்தருள்
ராசப்பிரபுவே மெத்தவும் (கோபம்)

---

இராகம்—காம்போதி-தாளம்—ஆதி.

பல்லவி.

சல்லாபமாயிருக்கப் பொல்லாததாய்க்கிழவி
சம்மதிக்கிறுளில்லேயே.

அநுபல்லவி.

வல்லார்தனமடவா ரெல்லாருமிச்சைகொள்ளும்
மன்மதனேநிகரான இம்முடிலிங்கையனுடன் (சல்லாப)

சரணங்கள்.

மாதரசேயிவட்குநான் வேணதெல்லாந்துரைகையில்
வாங்கிக்கொடுக்க வில்லேயா-பின்னும்
தோதகஞ்செய்கிறுளிந்தப் பாதகிக்குநீயாகிலும்
தோணுதலாகச் சொல்லேயா - ஆரும்
தூதுவந்தபேரென்னுடன் சேதிசொன்னுலதைமெள்ளக்
காதுகொடுத்துக்கேட்டுக்கொண் டேதடிரகசியமெல்லாம்
போதுமென்றிந்தப்படிவி ரோதமேசெய்தென்மனதைப்
புண்ணக்கிறுளாசைக் கண்ணுளனுடன்கூடி
(சல்லாப)

வேசைமகளொருவர்மே லாசைகொண்டுதிரிவது
மேரையோடியென்று விள்ளுருள் - நாலு
காசிதந்தவனேடெல்லாம் பேசியிருக்கச்சொல்லியென்
கழுத்தைப்பிடித்துத் தள்ளுருள் - பிரபு
நேசமுமென்னுடன்விசு வாசமுங்கண்டிருவரும்
காசியாயிருப்பதால்பிர யோசனமிராதென்றும்வி
சேஷசவுந்தரமுள்ள ராஜனவன்கைமருந்தில்
சிக்கிக்கொள்ளுவேனென்றும் பக்குவக்காலந்தன்னிலே
(சல்லாப)

மாநிலம்புகழெத்திசை மேவியதயாநிதிகு
மாரலிங்கையன் குமாரன் - நல்ல
கானரசமறிந்தருள் மீனவன்தமிழ்மதுர
கவிக்குதவு முதாரன் - முன்னுள்
ஆனைமுன்வந்தருளிய வானவரானவர்திவ்விய
மீனவிழியார்க்கிங்கித மானகலவிசெயநி

தானென்மீதினிலபி மானமாயனுபவித்த
தன்மதுரையாகிய இம்முடிலிங்கையனுடன்
(சல்லாப)

---

இராகம் - கௌளிபந்து - தாளம் - சாப்பு.

பல்லவி.

சற்றேசொல்லடா சாமி - என்துரையேநீ
சற்றேசொல்லடா சாமி.

அநுபல்லவி.

சற்றேசொல்லடாசாமி தாமரைமலர்வத
னத்தில்மைக்கறையேது கண்சொல்லுதுபார்
நித்திரையில்லாது காணுதுமஞ்சள்
மெத்தநின்புயமீது மூத்திருளப்பக்
கர்த்தனேயிப்போது வகையாகவே (சற்றே)

சரணங்கள்.

இனிமேலவளைச்சேரே னென்றதேவரீர்க்கேது
இனியசந்தனப் பூச்சு - அதற்குமேலே
பனிநீர்மிகவுண் டாச்சு - பவளநிறக்
கனியிதழதைப் பாச்சு - பேசும்போது
வருகிதேபெரு மூச்சு - பொய்யுரையாத
கனிவாயிலொரு பேச்சு - நிஜமாகவே
(சற்றே)

இந்தவிதத்திலென்னை யெத்துறீருமதுசு
கந்தகளப வாசம் — வளைநெரிய
அழுந்தினதெவள் நேசம் - தெரிந்ததுன்றன்
அந்தரங்கவிசு வாசம் - சாமிக்கிதெல்லாம்
எந்தப்பெண்ணுப தேசம் - இத்தனைநேரம்
இருந்துமேன்சங் கோசம் - முத்தையனே
(சற்றே)

தரணிபுகழும்வீரை சவுந்தரபாண்டிய
நரபதியருள் பாலா - நமச்சிவாய
பிரபலன்றுணை சீலா - தமிழ்சொல்லும
துரகவிக்கனு கூலா - என்றனைக்கூடி

மருவுமன்மத வேலா - முத்திருளப்ப
சரசசற்குண சீலா - பூபாலா
(சற்றே)

---

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

பல்லவி.

சாதனைசெய்யாதே மகளே - என்னுடனேயிந்தச்
சாதனைசெய்யாதே மகளே

அநுபல்லவி.

மூதறிவிலுயர் திரு மாதுவதன பாஞ்சி
முத்துமகிபாலனைய ணைந்திடவில்லையென்று நீ (சாதனை)

சரணங்கள்.

ஆர்க்கிதுமெய்யாகுமன வாக்கிலறியோமென்று
ஏய்க்கிறுயென்மனது கண்டோ - அடிவஞ்சசி
தாய்க்கொளித்தசூது முண்டோ - உன்றனையந்த
பாக்கியவானணை யாமல்முன்னேகன
யோக்கியமாபர ணுதிகளே துசி
லாக்சியமாகிய சேலைகளேதுதி
மார்க்கமோபிடி வாதமதாகவே (சாதனை)

குத்துமுலைமீதினிலே பத்துநகமும்பதிய
தைத்திருப்பதென்ன மாயம் - துகில்மாறியு
டுத்திருப்பதென்னசம்பிர தாயம் - பவளஅத
ரத்திலேவடு வேதுசவ்வாதுத
ரித்துவாடைகு பீரெனவீசுதே
உற்றசேதியெல் லாம்நிஜமாகவே
பெற்றதாயுட னேயுரையாமலே (சாதனை)

பஞ்சவர்க்கருள்சூரப்ப ரஞ்சிதத்துரையுதவு
மஞ்சகநர்பிர தாபன் - மதுரகவி
செஞ்சொலுக்கருள்ம கீபன் - அநுதினமும்
கஞ்சலட்சுமி வாழ்திருமாலப
ரஞ்சி முத்துத் தயாளுடனேயவர்
பஞ்சுமெத்தையி லேதனதாகவே
சஞ்சரித்தறி யோமென வேமிக (சாதனை)

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

பல்லவி.

சுகமேசம்போகமாய் சுகமேதந்தெனைச்சேர்ந்த
சொந்தநாயகனிங்கே வந்தானோ

அநுபல்லவி.

செகம்புகழுடையணை மகராஜனிடத்திலென்
சேதியைவிண்டாயோ கண்டாயோ (சுகமே)

சரணங்கள்.

மானேஅதிவிரக மானேனுறுதிசொன்னால்
வந்தனைசெய்வே னென்முன்வந்தனையே
தேனேபிரியாதிருந் தேனேயினிமேல்மாரன்
திருவிழாநடக்குமே திருவிழாவே
கானேஉலையின்மெழு கானேனவரைத்தேடி
கானகமுந்தேயுதே கானகமே
வானேமதனன்வரு வானேநானென்னசெய்
வேனேவாசமல்லிகைப் பூவேயெனைக்காவே (சுகமே)

மாவேநானுபகார மாவேனிவ்வேளைமோக
மாங்கனிக்கிரங்காயோ மாங்கனியே
நாவேபுலம்புதேஉன் னாவேநன்மொழிசொல்லி
நந்தவனந்தீர்ப்பாய் நந்தவனமே
நீவேடிக்கையாய்மதி நீவேகஞ்செய்யாதே
நீராவியைரக்ஷியும் நீராவியே
ஆவேகொடியமத னாவேசந்தீருமென்று
அன்றைக்கேசொன்னீரே பன்னீரே (சுகமே)

சூரைமேவினசூரன் மருதுமாண்டிய
துரையருளினில்வரு துரந்தரீகன்
பார்புகழுமதுர பாரதிமீதினில்
பக்ஷம்வைத்தருள்சுக்கில பக்ஷசந்திரன்
காரைமிகருமுப காரன்திறையளக்குங்
கனராசர்பணியுமோ கனராசன்
தாராளன்கமல முல்லைத்தாரொழுகிய
சாமியுடையாணேந்திரன் தேவேந்திரன் (சுகமே)

இராகம் - அசாவேரி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

சும்மாவருமோ பூர்வஜென்ம
சுகிர்தம்வேண்டுமடி.

அநுபல்லவி.

ரம்மியவான்புதுவைப்புரிமேவிய
ராமசாமி ராஜன்சிநேகம் (சும்மா)

சரணங்கள்.

பவனிக்கிசையுல்லாச னென்றும்
பாக்கியலட்சுமிவிலாச னென்றும்
எவ்வனமன்மதராஜ னென்றும்
ஏங்கியேங்கிவாடுமுய்
செவ்வையாய்நீபோயூடாடவே வேண்டும்
தெரியநான்சொல்லிப் போடவே வேண்டும்
அவர் மனதுன்னைத்தேடவே வேண்டும்
அதிஷ்டம்வந்துகை கூடவே வேண்டும் (சும்மா)

அம்புலீவந்து காயுதே யென்றும்
அனங்கனம்புகள் பாயுதே யென்றும்
வெம்பியேகைகா லோயுதே யென்றும்
விதனித்தாலென்னசெய்குவோம்
நம்பினே மென்று தீர்க்கவே வேண்டும்
நடத்தையவருக் கேற்கவே வேண்டும்
தெம்புடன்தினங் காக்கவே வேண்டும்
தெய்வங்கடைக்கண் பார்க்கவே வேண்டும் (சும்மா)

ரஞ்சிதனுபத் தார ணேந்திரன்
நல்கியதுரை சற்குண சாந்தன்
செஞ்சொல்மதுரகவிக் குதவு வேந்தன்
திருவுளத்தினிலிரங்கியே
கொஞ்சுங் கிளிமொழியேக தேசங்
கூடிவருமுன்றன்யோகவி சேஷம்
அஞ்சாதேதீருமுன்மனதா யாசம்
அதிபன்ராமசாமி நேசம் (சும்மா)

இராகம் — மத்தியமாவதி - தாளம் - ஆதி.

பல்லவி.

சொல்லவேண்டுமோனல் மெல்லியரேயொரு
தொகைவகைக் கடங்காதடி.

அநுபல்லவி.

வெல்லவட்டுப்போல்வார்த்தை சொல்லுமாபத்தாரண
வேந்தனைநான்கூடி வாழ்ந்திருந்ததெல்லாம் (சொல்லவே)

சரணங்கள்.

அன்னளிலென்னையவர் பெண்டுவைத் ததுவும்
அவர்மனதறியாம லுடனே பிரமித் ததுவும்
சொன்னவுறுதியெல்லாம் உடனேபொய்த் ததுவும்
துரைக்குநாளுக்குநாளென் மோகம்கைத் ததுவும்
சொந்தமானவள் போலொருபாதகி
வந்துபோதனையால் மெள்ளவேயவர்
சிந்தைவேறுசெல் நாளதுநாள்முதல்
என்றன்வாழவள் பாரிசமானதும்
சுரதமுற்றிருவரும் காணவித்தை செய்வதும்
விரகமுற்றென்மனது பாதவிக்கிறதையும்
(சொல்லவே)

எவ்வனவயதிலிந்த நேசங்காட் டினதும்
என்னைபெற்றெடுத்த தாய் வார்த்தைதட் டினதும்
அவரோர்கம்பத்திலிரண் டானைகட் டினதும்
அந்தமகராசிவர் தென்னைத்திட் டினதும்
அடத்தைவைத்திரா தானெனதாகிய
படுக்கைமெத்தையும் வீடுமுன்னளவள்
கொடுத்துவைத்தவள் போல்வரவேசொல்லி
எடுத்துவிட்டு மனோகரமானதும்
ஆருமறிவாரென்வி சாரமெளிதோ வெகு
நேரஞ்செல்லுமிதொரு பாரதக்கதையடி
(சொல்லவே)

முப்பொழுதிலுஞ்சிவ னைப்பணி தூயன்
முத்துவயிரேந்திர னுதவிய சேயன்

அற்புதமாமதுர கவிக்குச்ச காயன்
ஆபரணத்தாரணமகி பாலகன் னேயன்
ஆர்ந்தகொங்கை மின்னாள்மணிமார்பின
ஞர்ந்தகொங்கையின் மீதுகுசாலொடு
சாய்க்துகொண்டவர் தூஷணமாயெனே
நேர்ந்தசங்கதியாயுரை வாய்மையும்
அரிவையேயெனேமுன்பு மருவினதை மறந்து
பிரிவுபெறநடந்த வரிசைகளை நினைந்து
(சொல்லவே)

---

இராகம் - அசாவேரி - தாளம் - சாப்பு.

பல்லவி.

தமக்குத்தாமே வருவாரவர்க்கு
ஸ்தானபத்திய மென்னடி.

அநுபல்லவி.

தனகுபேரர் பாஞ்சிமுத்தைய
தாஷ்டிகத்துரையென்மேல்
போட்டிசெய்குறாரடி (தமக்கு)

சரணங்கள்.

அன்னமே வீண்பூச்சி காட்டுறார் - மெத்த
ஆழமுகம் நீச்சும்பா ராட்டுறார்
என்னமா சண்டை மூட்டுறார் - சாட்டை
இல்லாமல் பம்பர மாட்டுறார்
சொன்னமுள்ளதெல்லாங் கொடுக்கட்டும் - அந்தத்
தோகைவீட்டினில்தானே படுக்கட்டும் - அவள்
பின்னுடனே விட்டு முடுக்கட்டும் - வலியப்
பேசியிங்கேதாது விடுக்கட்டும் - அடி
(தமக்கு)

மாயவித்தையெல்லாம் படிக்கிறார் - தந்திர
மாகவே கொக்குப் பிடிக்கிறார்
ஓயாமல் யோசனை முடிக்கிறார் - அவ
ளுள்ளந்தெரியாமல் துடிக்கிறார்

ஆயாசமேன் சும்மா யிருக்கட்டும் - நிழ
லருமை யறிந்து வேர்க்கட்டும் - இன்னும்
போயவளிடத்தில் காக்கட்டும் - அந்தப்
புளிப்பை யறிந்து தீர்க்கட்டும் - அடி
(தமக்கு)

சுந்தரஞ் சேர்கரு ணைகரர் - மஞ்சை
சூர்ப்பன ராஜன்சு தாகரர்
சந்திர வதனவ சீகரர் - இந்தத்
தாரணியிற் பிரபு டீகரர்
பந்துமுலோதி காந்தர் - மதுர
பாரதிக்குக் குண சாந்தர் - யார்க்கும்
ஐந்தருப்போலருள் வேந்தர் - எனை
யணையவே பாஞ்சிமுத் தேந்திரர் - அடி
(தமக்கு)

---

இராகம் - பியாகடை - தாளம் - ரூபகம்.

பல்லவி.

தன்னாலேவருவா ளவட்கென்ன
ஸ்தானபத்தியமா

அநுபல்லவி.

நன்னவலர்புகழும் ராஜ ஸ்ரீ
ராமசாமிராஜ வசீகரர் (தன்னாலே)

சரணங்கள்.

வஞ்சமுற்றகல் நெஞ்சியரையும் மனதை இளக்குமே-கன
ரஞ்சிதப்பிரபு நின்சரித்திரம் விரகத்தை வளர்க்குமே
வஞ்சிமோகம் வெகுவாகிய மோகமோ
மன்னவனே யின்றுவந்த சிநேகமோ
கொஞ்சமான சையோகவை போகமோ
கூடிப்பிரிய அவளால் நிர்வாகமோ
(தன்னாலே)

உன்னையணைந்த நன்னயம்நினைந் துள்ளமுருகுமே - நாளும்
கன்னல்வேள் சமர்தன்னில் மங்கைக்குக் காதல்பெருகுமே
நின்னைசையல்லால் வேறுசை பூணுமோ
நிமிஷம்பிரிந் திருக்கவும் தோணுமோ

கன்னிகைக்குப்பாலனும் ருசி காணுமோ
கரும்புதின்னவே கூலியும் வேணுமோ
(தன்னாலே)

தாமமதுரகவிக்கரு ளாபத்தாரணன் பாலா - சார்வ
பூமனாகிய ராமசாமி புருஷபாஞ் சாலா
காமலாகிரிவந்து தன்னா லாடுமே
கலந்திருந்ததிலே நினை வோடுமே
மாமயிலாள் சிந்தை தயங்கி வாடுமே
மருவவேணுமென் றையனைத் தேடுமே
(தன்னாலே)

---

இராகம் - முகாரி - தாளம் — ரூபகம்.

பல்லவி.

தினமுமிவரைக் கூடித்தேடிப் போடமாட்டேன் போடி

அநுபல்லவி.

சனகன்முத்திருளப்ப சாமியைச்
சேருவேனல்லாது (தினமு)

சரணங்கள்.

ஏறுதுசொல்வது முண்டோ
இளைத்ததால்நானென்று பெண்டோ
பேராசையிப்படியு முண்டோ
பிடித்தபேர்க்கெல்லாம் பெண்டோ (தினமு)

தருவார்பாக்கிய நேகம்
தழுவுவதேதேவ போகம்
அருவையே இதுவென்னவி வேகம்
ஆகாதுபொல்லாதசி நேகம் (தினமு)

தமிழ்மதுரகவிக்கு தாரன்
சவுந்தரபாண்டியன்கு மாரன்
சுமூகன்முத்திருளப்ப சீரன்
சுகங்களைப்போலுண்டோ சாரம் (தினமு)

---

இராகம் - சாவேரி - தாளம் - ஆதி.

பல்லவி.

தெரிந்துகொண்டால் சகியாள் வளவுக்குத்
தேவரீரெழுந்தருளும்

அநுபல்லவி.

பெரும்புகழ்த்திரு வேங்கடநாதகு
பேராஅவளுக் கிதாராகிலும் சொல்லித் (தெரிந்து)

சரணங்கள்.

பையவந்துசாடை செய்துகொண்டுவாடி
படுக்கைக்கென்றே மையல் மீறியே - என்னைக்
கையைப்பற்றி யழைக்கிறீருமதுவங்
கணக்காரி கக்கிசக் காரியே
ஐயமுடனே தோணும் அவட்குமனதுகோணும்
நெய்யிற்கையிடவேணும் நினைத்தெண்ணிப்பாருங்காணும்
நேசமுடன்றலை வாசலில்வந்தொரு
ராசியமிங்ஙனம் பேசியசங்கதி
(தெரிந்து)

யவனத்துரையேஉம்மை மேவவென்றபிலாசை
எனக்கில்லையோ உமக்கு மாத்திரமோ - அந்தப்
பவழவிதழாளை நிராகரிக்கவும்மால்
பலியாது நானதற்குப் பாத்திரமோ
அவள்சொந்தமகராசி அடியாள்நானொருதாசி
இவளவுகண்டால்சீசீ என்றனைச்சொல்வாளேசி
என்னயோசனை மன்னவாவெகு
சின்னமேயிது சன்னையாகவே
(தெரிந்து)

காசினியெங்கும்புகழ் ராணிசேதுபதி
கருத்துக் கிசையுமதி காரனே - கவி
ராஜன்மதுரகவி பூசுரனுக்குதவிசெய்
ராமநாதேந்திரன்கு மாரனே
ஆசைக்கிசைந்த மாரா ஆதுலர்க்குபகாரா
தேசம்புகழ் விஸ்தாரா திருவேங்கிடதீரா
ஸ்ரீதரனேயெனை ஆதியிலேயெனை
காதலனே இது சேதியெல்லாமவள்
(தெரிந்து)

—()—

இராகம்-அடாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

தைத்தாலென்னடி ஸ்தனத்தில்நகம்
தைத்தாலென்னடி

அநுபல்லவி.

உத்தரகோசமங்க ளேஸ்வரியிருதாளை
உறுதியுடனேபணிந் தனுதினமும்
கிருபையோங்குமுத் திருளப்பவேள்நகம் (தைத்தா)

சரணங்கள்.

கணவன்செய்தொழில் தானடி கொங்கைக்குறியைக்
கண்டுபிரமிப்ப தேனடி
மணிமேடைதனிலேவங் கணமாய்மேவையில்முத்து
வடத்தையணிதன தடத்தைநீபிடி
கொடுத்தபோதவர் பிடித்ததில்நகம்
(தைத்தா)

இப்படிசொல்லலாகுமோ புருஷமீர்தில்
இன்பம்பெண்களுக்குநோகுமோ
மற்புயன்மார்பிலுன் செப்புமுலையதனை
வைத்தழுத்தியொரு முத்தமிட்டணைசு
கத்தில்மெய்ப்பரவ சத்தில்சற்றுநகம்
(தைத்தா)

மதுரகவிக்குதாரன் சவுந்தர
பாண்டியன்மைந்தன் வில்மாரன்
அதிபன்முத்திருளப்ப அதுலனுடனேமன
தாசையுடனேநன்றாய்ப் பேசிச்சுகித்திருந்த
தாசியுனக்குமக ராசன்மலர்க்கைநகம்
(தைத்தா)

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடந்தசேதியெல்லாம் சொல்லவென்றாலொரு
நாளெல்லாஞ் செல்லுமடி

அநுபல்லவி.

மடந்தையாகிதம்வந்து நடம்புரிசமக்ஷம
மன்னன்தியாகராஜேந்திர னென்னைச்சேர்ந்தநாள்முதல்
(நடந்த)

சரணங்கள்.

வைப்பென்றெனக்கொரு பட்டாபி ஷேகம்
வந்தவள்மேலெல்லா மிவருக்கு மோகம்
உப்புப்பார்த்துவிரட்டும் பெண்களநேகம்
உடந்தையாய்த்திரிவோராய் வெகுபேர் சிநேகம்
ஊரிலுள்ளவர் வீணிலென்மேலவ
தூறுசொல்வதல் லாதுறவாயொரு
நேரவில்லைய டிமிகநானனு
சாரிசெய்திவர் மேவினநாள்முதல்
(நடந்த)

சனுவுக்காயிவர்க்குவர் திருப்பவர்கள் பெண்டு
ஸ்தானபத்தியம்விடுத்து வருவோரு முண்டு
வனிதையேகுடிப்பெண்கள் பேராசை கொண்டு
வலியவந்துசருவும் வரலாறுங் கண்டு
மனஞ்சலித்ததெல் லாமிவர்பாலனு
தினஞ்சொலிப்பலி யாததினால்வரு
சினம்பொறுத்துமின் னார்நடுவேவெகு
கனஞ்சொலிக்கொளு வேனடிவாழ்வினில்
(நடந்த)

சித்தசன்போல்வடிவு பெற்ற சீரன்
சேதுபதிராஜேந்திரன் மகிழுமு மாரன்
முத்தமிழ்மதுரபா ரதிக்குப காரன்
முதல்வன்சொக்கலிங்கேந்திர னுதவுகு மாரன்
மோகநாயக னுதியிலேமுத
லாகலேயெனை யாதாவாயனை
தியாகராஜ கிருபாநிதிபாலசி
நேகமானபு ராதனநாள்முதல்
(நடந்த)

இராகம் - சாவேரி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

நாளைவலியவருவாரவர்க்கு ராசவட்டமென்னடிபோடி

அநுபல்லவி.

வாளைநிகர்விழியாய் அலங்கிருத
மடவார்மோகனன் உடையணந்திரன் (நாளை)

சரணங்கள்.

விந்தைப்பேச்சுப்பேசி வெல்லுகிறார் - கெண்டை
மீன்குஞ்சுக்குநீச்சுச் சொல்லுகிறார்
சந்ததமும்அங்கே செல்லுகிறார் - மெத்தத்
தானேநனைந்திடங் கெல்லுகிறார்
இந்தப்படிஅங்குந் திரியட்டும் - செம்பொன்
எல்லாம்வாரிவாரிச் சொரியட்டும் - அவர்
தெந்தனக்கலவி புரியட்டும் - என்னைச்
சேர்ந்தவுரிமை தெரியட்டும் - அடி (நாளை)

அல்லும்பகலும்சமர் போடுகிறார் - என்முன்
அவளைத்தானேகொண் டாடுகிறார்
சொல்லியடிக்கடி யோடுகிறார் - வெகு
தூரத்துபச்சையை நாடுகிறார்
நல்லவிடத்திற்போய்ச் சேரட்டும் - திவ்விய
நவரசங்களை வாரட்டும் - அந்த
வல்லிக்கும்இவர்க்கும் நேரட்டும் - ஐயர்
மனதுசலித்துத் தீரட்டும் - அடி (நாளை)

ரஞ்சிதஞ்சேர்மிருது வாக்கியவான் - திவ்ய
நவரசந்தெரி யோக்கியவான்
வஞ்சியர்மால்கொள் சிலாக்கியவான் - சூரை
மருதைப்பாண்டியனருள்பாக்கியவான்
பஞ்சவர்க்குச்ச காயன் - மதுர
பாரதிக்குதவு தூயன் - அற்புத
மிஞ்சியவச்சிர தாயன் - என்றனை
மேவுமுடையணராயனன் னேயன் - அடி (நாளை)

இராகம்—ஆனந்த பைரவி-தாளம்—ஆதி.

பல்லவி.

நானுஞ்சகிக்குமட்டுஞ் சகித்தேனினிமேலென்றால்
சகிக்கமுடியாது பெண்ணே.

அநுபல்லவி.

மீனவனெனிகரான மருதைப்பாண்டியன்
வித்தியாசமாகநடத்துங் காரியத்துக்கெல்லாம் (நானுஞ்)

சரணங்கள்.

உன்னைப்பிரியேனென்று கன்னிப்பருவந்தன்னில்
உறுதிசொன்னபிராணேசன் என்றன்
முன்னாகவேயொரு பெண்ணைவரவழைத்து
முத்தங் கொடுத்தாரடி
அன்னமே அதையும்நான் பொறுத்துக்கொண்டிருந்ததை
அறியாமலெவ்வளவுங் குறியாமலேயந்த
மின்னாளுடனேகூடிக் கூடிக்குலாவியென்னை
வெள்ளிக்கிழமையிலுந் தள்ளிவைத்தாரடி
(நானுஞ்சகிக்கு)

நடத்தைதெரிந்துகொண்டு குடத்தில்வைத்தவிளக்காய்
நானிருக்கையிலவ தானமாயிருவரும்
அடக்கமாகஎன்றன் படுக்கைவீட்டிலுயவந்
தனுபவித் திருந்தாரடி
மடக்கொடியேயின்னம் விடுத்துசொல்கிறேன்கேள்
மலரணையிலமுந்தாநாள் கலவிசெய்தணைகையில்
அடுத்துக்கனிவாயிதழ் கொடுத்தேனப்போதவர்
அவளதரமேநல்ல மதுரமென்றாரடி
(நானுஞ்சகிக்கு)

செந்தமிழ்மதுரபாரதிக்கு நிதியருளுந்
தீரன்பழனியப்ப ராஜனருளில்வரு
சுந்தரமடார் வசந்தன்மகாராஜ
ராஜஸ்ரீசூரை மருதைப்பாண்டியன்
எந்தனுடனேகூடி சொந்தமாயனுதினம்
யவ்வனப்பருவமெல்லா மநுபவித்திருந்தவர்

வந்தவளிடத்தினி லந்தரங்கமாக
வார்த்தைபேசியேயென்னை வேற்றுமைசெய்தாரடி
(நானுஞ்சகிக்கு)

இராகம்-பியாகடை-ரூபகம்.

பல்லவி.

நீயாயவனுடன் மோடிசெய்து
நிர்வசிப்பாய் பெண்ணே

அநுபல்லவி.

தாயாகவேவி வாணர்க்கருள்குப்புச்
சாமிகையில்சொக்குப் பொடியுண்டடி (நீயா)

சரணங்கள்.

சொல்லடிபெண்ணே இன்றுநேற்றுவந்தசி நேகமா - கூடி
சுகித்ததுமென்ன கொஞ்சநஞ்சம் போகமா
எல்லாருமோகங்கொள்வதுபோல் நீகொண்ட மோகமா - துரை
இணைபிரிந்தால் சகித்திடவும்நிர் வாகமா
அல்லடிகாமப் பிசாசு பொல்லாதடி
ஆதவன்முன்னே பனியும் நில்லாதடி
கொல்லத்தெருவினில் ஊசி வில்லாதடி
கோதையேஉன்தொழி லங்கே செல்லாதடி
(நீயா)

மானேநீகற்றவித்தையெல்லா மங்கே ஓடுமோ - வேங்கை
வரிப்புலிமுன்னேநரிநின்று ஊஞ்ச லாடுமோ
நீநிருவகித்தபிகுவாகிலுமங்கே நீடுமோ - க்ஷண
நேரமுன்னாலேபிரிந்திருக்கவுங் கூடுமோ
ஆனாலுமேயிந்தத் திண்டுக்கு முண்டடி
அவனுக்குன்போற்பதி னாயிரம் பெண்டடி
ஏனனுக்கித்தனை மனமு றண்டடி
இப்படிச்சொன்னபேர் மெத்தப்பே ருண்டடி
(நீயா)

செஞ்சொல்மதுரகவிக்கிசைந்தருள் யோக்கியவான் - சதா
சிவதுரந்தான்தவத்தினால்வருசி லாக்கியவான்

ரஞ்சிதமுங்குணமும்மிகுந்தமிருது　　வாக்கியவான் - மகா
　ராஜனும்குப்புச்சாமிமால்சௌ　　பாக்கியவான்
　　கொஞ்சிமருவின வாஞ்சையைக்　　கோரடி
　　குணமாய்நடந்தா லுனக்கெதி　　ராரடி
　　பஞ்சவர்ணக்கிளி யேயெண்ணிப்　　பாரடி
　　பழயபடிக்குன் சாமியைச்　　சேரடி
(நீயா)

---

இராகம்-சங்கராபரணம்—தாளம்-சாப்பு.

பல்லவி-

நீயாகிலுந்தூது　　போடி - ஒரு
　நிமிஷத்திலேகூட்டி　　வாடி.

அநுபல்லவி.

வேயூதுகனிவாய னாகிய ஐயரகு
　வீரன்கறுத்தபாண்டிய தீரனிடத்திலே　　(நீயாகிலும்)

சரணங்கள்.

அந்திநேரத்தில் செந்தழல்போலவே
　சந்திரிகைவந்　　திடுமே - வந்தாலென்றன்
சிந்தைநொந்　　திடுமே - பரிமளச்
　சந்தனமுஞ்சகி　　யாதே — சற்
　　றாகிலும்நித்திரைவ　　ராதே
எந்தனுடம்பு　　பொறாதே - நான்
　என்னசெய்வனடி மாதேயிப் போதே -　　(நீயாகிலும்)

ஆலைக்கரும்புவில் லாலெய்தபூங்கணை
　மேலெல்லாந்　　தைக்குமே - தைத்ததென்றால்
பாலனமுந்　　கைக்குமே - க்ஷணப்போதில்
　மாலைக்குயில்　　வருமே - முத்து
　　மாலைபோல்கண்ணீரு　　திருமே
வேலைமுரசும　　திருமே — ரா
　விடியாமல்நொடிநூறு யுகமாய் வளருமே -　　(நீயாகிலும்)

வேண்டியவாளுயர் காண்டீபன்மருதைப்
　பாண்டியனருள்　　பாலன் - கறுத்த

பாண்டியமகி    பாலன் - அநுதினம்
பாண்டவர்க்குப    காரன் - மதுர
பாரதிக்குதவு    தீரன்
ஆண்டவனுனக்கு    பேரன் - என்னை
அனுபவிக்கவே துரையிடத்திலிந்நேரம்    (நீயாகிலும்)

---

இராகம் - சுருட்டி - தாளம் - சாப்பு.

பல்லவி.

பிழைத்துப்போ    மதனா - இப்போதேதப்பிப்
பிழைத்துப்போ    மதனா.

அநுபல்லவி.

தழைத்தபுகழ்சேர்வீர    சவுந்தரபாண்டியன்
தந்தநமச்சிவா    யேந்திரகிருஷ்ணவை
தாரமாலவரு    நேரமாச்சுது    (பிழைத்துப்போம)

சரணங்கள்.

மாருடியிந்த    வீம்பு - செய்வதினாலே
வருமோவெற்றிலைக்    காம்பு
பாரமுலைமேல்லெக்குப் பார்த்துத் தொடுக்கும்புட்ப
பாணமுந்தித்திக்கும் வில்லையும்
பறித்துண்டாக முறித்துக்கொடுக்குமுன்
(பிழைத்துப்போ)

சிவனெற்றிக்கண்முன் மறைந்தாய் – பெண்கள்முன்வீரம்
செலுத்தவென்றோ பிறந்தாய்!
புவனந்தன்னிலே உன்னைப்போலே கிடையாதடா
போதுந்திராணி யிப்போது
நான்சொன்னபுத்திகேள் பின்விழித்திடாமலே
(பிழைத்துப்போ)

நதிகுல    மகாராஜன் - முத்திருளப்ப
ராஜன்துணை    யுல்லாசன்
மதுரபாரதிதுதி மனநமசிவயவேள்
மஞ்சமீதினில் கொஞ்சிமேவவே
வாய்த்தமாப்பிள்ளை பார்த்தையாசொன்னேன்
(பிழைத்துப்போ)

இராகம்-ஸ்ரீராகம்; தாளம்—ஆதி.

பல்லவி.

பேசியிருந்ததுண்டு பெண்மயிலே-நான
பின்னை யொன்று மறியேன்.

அநுபல்லவி.

ராஜஸ்ரீமருதேந்திரனோடு நேற்றி
ராத்திரியிரண்டொரு வார்த்தைதணித்துநான் (பேசி)

சரணங்கள்.

ஆசையிருந் தாலும்-உன்னருளாலே
அதிபன்றயவி னாலும்-மிகவும்
நேசமான விசேஷங்கள்சொல்லி
ராசியமாகப் பூசைவீட்டிலே (பேசி)

தீரனவரைக் கோரி-வந்ததுள்ளது
சேர்ந்ததில்லேவி சாரி-வருத்தமான
பாரமோகவி காரத்தாலொரு
நேரமுனதுசிங் காரத்தோர்ப்பினில் (பேசி)

பதுமமுகவி லாசன்-உடையாரருள்
பாண்டியன்மருதைப் போசன்-இடத்தில்வெகு
பதுமையாகவே மதுரகவிசொன்ன
பதங்கள்பாடியே நிதமும்நான்வந்து (பேசி)

---

இராகம்-சங்கராபரணம்; தாளம்-சாப்பு.

பல்லவி.

மோகமானபெண் பேதைமேலிந்த
மோடிசெய்குவ தேதையா.

அநுபல்லவி.

வாகுபெறுமேற்றிசையினில்வளர்குல
வர்த்தனைசேரெட்ட முத்துமகிபாலா (மோகமான)

சரணங்கள்.

கலிக்குந் திரைகட லொலிக்கும்கனப்பிரபை
சொலிக்குங்கொடிய அம் புலிக்குஞ்சிறுதென்றல்
புலிக்கும்பொருமுரு விலிக்கும் யான்பெற்ற
பூவைபயந்துள்ளம் வாடுறாள்

வலுக்கொண்டிணைமுலை பருக்குதாம்-இரண்டு
மாக்கூடிவிம்மி நெருக்குதாம்
கலத்துச்சோறரு வருக்குதாம்-பெருந்
காமப்பேய்பிடித் திருக்குதாம்

நிலத்திலேகுறி கீறிமின்னாள்கை
சலித்துவாடியெந் நேரமுமாதுக
வலைக்குளாய்மிக வேயெனமோமகள்
மலைக்கிறாள் துரை யேவெகுவாகிய (மோகமான)

தனத்தில்களபசந் தனத்தையணிந்துயவ்
வனத்துறைசெய்தசோ பனத்தையனுதினம்
மனத்தில்பலபல நினைத்துவெண்முத்து
மாலைபோல்கண்ணீர் வடிக்கிறாள்

தனித்திருப்பதும் தொல்லையாம்-மன்
மதன்தொடுப்பது முல்லையாம்
இனத்தாரறிந்தக்கால் கல்லையாம்-மகட்
கிரவும்பகலுநித்திரை யில்லையாம்

இனித்ததேனித ழூறிமின்னாள்சொப்
பனத்திலும்வரு காமவிகாரவி
தனத்தினால்வெகு ஞாபகமாயுமை
நினைத்தவேளை யெல்லாமுறவாகவே (மோகமான)

கொட்டமுடனெதி ரிட்டுவருவாரை
வெட்டிவிருதுகள் கட்டிமிகுதிசை
எட்டுமகிழ்ந்திடச் சித்தமெனவரு
எட்டமேந்திர சுதாகரா

கட்டழகியர்கள் மாரனே-உயர்
கம்பளகுலவொய் யாரனே
வட்டமதிமுக தீரனே-செஞ்சொல்
மதுரகவிக்குப காரனே

அட்டலட்சுமிவாச தயாபரா
விஷ்ணுவுக்கிணையானமகிபதி
எட்டமுத்து வசீகரனேமன
திஷ்டமுற்றனை மேவவுமேயதி (மோகமான)

இராகம்-மத்தியமாவதி; தாளம்—ஆதி.

பல்லவி.

வந்ததுகண்டேனென்றன் சிந்தைதன்னிலிருந்த
வனைமுகங் காணேனடி.

அநுபல்லவி.

சந்திரமுகமிலங்கு சுந்தரமதனுவ
தாரனுகிய ஆதி நாராணேந்திரன் [வந்தது]

சரணங்கள்.

ஒருநாழிகைக்குமுன் னெவ்வளவு து வேஷம்
ஓகோகோஎன்னசொல்வேன் இந்தஆ யாசம்
அரிவையேஇப்படி ஆச்சுதென் ரோஷம்
ஆடவர்மனதைவெல் லுவதும்பிர யாசம்

ஆசைவைப்பது மேதுசபாசினி
ராசவட்டமு மேதெனவேவெகு
பாஷைபிட்டே னடியனமேமக
ராசலக்ஷண னுனதயாநிதி (வந்தது)

இனிமேலவருடனே என்னசி நேகம்
இணங்கவும்வேணுமோவென் றுறுதிய நேகம்
வனிதையேகொஞ்சமோ என்னெஞ்சினில் வேகம்
மனதேசதிசெய்தால் எவ்விதம்நிர் வாகம்

வருத்திவெண்மலர் தூவினதாலும்
தாத்திலேமது வூரியென்மேல்விரு
விருத்தகேபுகல் காதல்கண்மீறியே
கருத்திலேபிரமை யாகியபோதவர் (வந்தது)

நதிகுலத்தினில்வரு ராசகெம் பீரன்
நாகைமுத்திருளப்ப ராசகு மாரன்
மதுரகவிதமிழுக் குதவுமு தாரன்
மாலதிநாராய ணேந்திரவ சீரன்

வங்கணத்துடனே அனுபோகவி
தங்களைத்தரு ஞாபகமேவெகு
பொங்கமுற்றிய வேளையிலேஇரு
கண்களுக்கெதிராக இந்நேரமே [வந்தது]

—:o:—

இராகம்—தோடி; தாளம்—சாப்பு.

பல்லவி.

வந்ததைவரப் பற்றடி-உனக்குப்புண்ணியம்
வந்ததைவரப் பற்றடி.

அநுபல்லவி.

எந்தநாளுமங்கள வல்லியைப்பணியுமுத்
திருளப்பமகாராசன் கிருபைவைத்தணையுமட்டும் [வந்ததை]

சரணங்கள்.

விந்தைத்துரைக்கென்மீதி லின்பம்வாட்டுமென்று
மேற்கொண்டுகோள மார்க்கஞ்செய்வதுகண்டு
இந்தத்தொழில்களெல்லாம் நம்மையறியாமல்நீ
யெங்கேபடித்தாயென்று'ம்ப'ரப்பவுஞ்சாமி
சந்தேகம் சொன்னார்-பின்னையுமிரண்டுத்
தாரங்களுஞ் சொன்னார்-அதுதானே
எந்தன் மீதினில்மோடி வந்ததுபோல்காணுது
சிந்தைமகிழநான் கலந்துமருவுமட்டும்
(வந்ததை)

கன்னல்மதனும்ரதி போலும்நானுமவரும்
கட்டியணைந்துமன திஷ்டப்படிமேவையில்
தன்னையறியாமலே பரவசமாகவே
சம்போகம்வருகின்ற சமயந்தனிலேபிரபு
என்னசொன் னாரோ-அதற்குநான்
ஏதுசொன் னேனோ-அறியேனந்த
மன்னவர்மனோதந் தன்னையறிந்துமுன்போல்
இன்னம்நான்தழுவட்டு மென்னைவேண்டியிப்போது
(வந்ததை)

பதுமமின்வளர்வாணர் துதிசவுந்தரபாண்டிய
பாக்கியனுதவுகன யோக்கியன்னுதினமும்
மதுரகவிசெந்தமிழ் அருமையறிந்துதவு
வரிசையார்தாரணிமுத் திருளப்பமகாராசன்
மதனசல் லாபன்-எந்தனைக்கூடி
மருவிம கிபன்-அநுதினமும்

இதமாய்க்கனிவாய்முத்தம் நிதமும்கொடுத்தென்மேலே
மனதுவைத்தணையுமட்டும் பதராதேயிப்போது

(வந்ததை)

---

இராகம்-பூரிகலியாணி; தாளம்-சாப்பு.

பல்லவி.

வந்தபிரமையினலே என்றன்மோடியெல்லாம்
மறந்தேனடிமானே.

அநுபல்லவி.

சந்திரோதய வதனமால்சம்பிர
தாயன்செங்கனி வாயனிங்கித
நேயன்சங்கிலி ராயனன்பொடு (வந்த)

சரணங்கள்.

இனிமேலவனுடனே நேசஞ்செய்வதில்லை
யென்றிருந்ததென் ரோசம்
அனமேபரிதிகண்ட பனியைப்போலவேயல்லோ
ஆச்சுதெனதா யாசம்
தனதாயருகினில் வந்தேயென்னைச்
சருவவும்மதம் பெருகியங்ஙனம்
விருவிறென்றதே கருவறிந்தவன் (வந்த)

நினை வென்னடியிப்படி போமா-ஒரு
நிமிஷம்பொறுக்கவும்வேண் டாமா
மனதிலிருந்திப்படி முழுமோசம்செயுமாட
வரைவெல்லுவது நாமா
புனிதன்வரவு கண்டதேஐந்து
புலநுகர்ந்தது துகில்நெகிழ்ந்தது
முலைகுழைந்தது நிலைதெரிந்தவன் (வந்த)

மாவளரும்நிறுவை வாசன்-தமிழ்
மதுரகவிக்கருளும் போசன்
காவலன்சங்கிலி ராசன்-அருளில்வரு
கனவான்சங்கிலி ராசன்
ராவில்மதன்போல் வந்தான்-சிந்தை

நழுவிமுன்புசெய் பழமைகண்டுமெய்
குழறினனொருதொழில்நடந்தது. (வங்க)

---

இராகம்-ஆஹிரி; தாயம்-சாப்பு.

பல்லவி.

வாரும்வாரு மையா—மின்னாள் கொண்ட
மையல்தீரு மையா.

அநுபல்லவி.

காருறைதனுக்கோடி வாரிதிசூழ்தேவை
காமதகனராஜ ராமநாதரேசாமி (வாரும்)

சரணங்கள்.

முத்துநகையாள்கும்பமுலையில்தைக்கவேலெக்கு
வைத்துக்கணைதொட்டானும் மன்மதவேள்-அந்த
தத்தைமொழியாட்கிந்த சித்தசன்பகையினால்
சற்றன்னமிரங்காமல் மெத்தைமேலுறங்காமல்
சவ்வாதுபூசாமல் சேவவாகப்பேசாமல்
சகிமாரையும்வைது வெகுயோசனைசெய்து
தயங்கினாள்-மெத்த
மயங்கினாள்
கர்த்தரேதேவரீர் சித்தமிரங்கிமின்னாள்
கவலைதீர்த்தருளகவே
நவமணிஊஞ்சலில் (வாரும்)

கூடியிருந்தநாளில் குளிர்ந்திருந்தசந்திரிகை
மோடிசெய்வதாலனல் மூட்டுதென்றாள்
வாடிமிகவேஉம்மைத் தேடிமெலிந்துமங்கை
வருங்கீதம்படியாமல் கருங்கூந்தல் முடியாமல்
மதனாவேசமிகுந்து அதனால்விதியைநொந்து
மானார்வசைமிஞ்சி ஆனாலுமைவஞ்சி
மலங்கினாள்-சிந்தை
கலங்கினாள்.
கோடிபுண்ணியமிந்தப் பேடைமயிலாள்மனக்
குறைதவிர்க்கவேபள்ளி
யறையிற்றயவுடனே (வாரும்)

ஓதுமதுரகவி யுகந்துபணியும்ராம
நாதராகியலோக நாயகரே
பேதையவனுக்குநீ ரனுக்கிரகஞ்செய்யாமல்
பேதகஞ்செய்யலாமோ பாதகஞ்சும்மாபோமோ
பெண்கட்குராங்கவேணும் தங்கப்பிரதிமைகாணும்
பேராசையாய்மிகுந்தாள் நீராவலாய்வந்தால்
பெருமைகாண-சேரும்
உரிமைகாண்.
சேதுபதியிராம நாதரிஷிபணிபிர
சித்தரேபருவத
வர்த்தனிமணாளரே (வாரும்)

---*---

இராகம்-கருட்டி; தாளம்-சாப்பு.

பல்லவி.

வருவார் பெண்ணே-நினைத்துமெத்த
மலையாதே கண்ணே.

அநுபல்லவி.

கருணமறிந்துசெஞ்சொல் வரிசைக்கவிவாணர்கள்
தமிழருமைதெரிந் திருநிதியைமிகத்
தருமாலனும்ஐயம் பெருமாளசாமி (வருவார்)

சரணங்கள்.

அன்னமேயுன்றனை யனுபவித்தவருக்கும்
இன்னமொருவர்மீதி லிச்சையுண்டாமோ
என்னடியுனக்குத்தா னிவ்வளவுதெரியாதோ
இரவுபகல்நினைந் துருகிறாயுன்
திடக்கண்ணடிக்கடி துடிக்குதுகெவுளி
வாவுசொல்லுதிந்தப் பலன்கைமேலடி
மாதேதிருமேனி நாதர்கிருபையினால் (வருவார்)

மானேஉன்பிராணேசர் வாராதிருந்தாரானால்
நானே அழைத்துவா'றேன் நயகுணமயிலே
தானே கூட்டிவைக்குமுன் றன்னதிட்டவிசேஷம்
தனித்திருந்துவிழிப் பானேன்படுக்கையில்
சட்டநறுமலர் கட்டவுகுழலில்

இனித்தபாலன்னம் புசியுன்ஞேடுகிருஷ்ண
லீலைசெய்யத்துணி மாலைகிருபையிஞல் [வருவார்]

நதிகுலபதிமக ராஜன்முத்துவீரப்ப
மதியூகியுதவிய வச்சிர சரீரன்
விதுரனெனவேசெஞ்சொல் மதுரகவிக்குதவும்

விஜயன்விகசித கமலலோசனன்
விந்தைபெறுமுக சந்திரோதயன்
மிருதுவசனசுப லலிதனனுதினம்

மருவேஜயம் பெருமாள்சாமி [வருவார்]

## மதுரகவிபதங்கள்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீ ராமகவி பதங்கள்.

——:o:——

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சகியேயிந்த வேளையவரைத்
தழுவியணைய வரச்சொல்லிவாடி.

அநுபல்லவி.

திகைத்தேயனு தினமனம்வாடத்
திருத்தணியாறு முகனைநான்தேடச் (சகியே)

சரணங்கள்.

ஒருநிமிஷமும்ஒருயுகமெனவுளத்திலெண்ணியென்
னுடல் பதைக்கிது
பருவகாலம்வந் திதோதழைக்கிது
பக்ஷமுள்ளமுத் தையணையழைக்கிது (சகியே)

சித்தம்பிரமிக்கவே மெத்தையின்மீதினில்
வைத்துத்தனத்தை யழுத்தியிறுக்கியே
சித்தசன்லாகிரி மெத்தவும்போக்கினான்
தினமும்அவன்மேல் நினைவுண்டாக்கினான் (சகியே)

கள்ளமிலாமலே யுள்ளபடியவர்
நல்லபுருஷரென் றல்லோயிணங்கினேன்
எள்ளளவுந்தாமச மில்லாமலோடி
யின்னிசையாம்ஸ்ரீ ராமன்பதத்தைப்பாடி (சகியே)

——*——

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தச்சளுக்கிலாகுங் காரியமேதையா
இனிமோசம்போகேன் மெய்யா

அநுபல்லவி.

கந்தமலர்வாவிசூழ் தணிகைமலேவாசரே
கபட்டுத்தனமேன்ராஜ பகட்டுமுருகேசரே (இந்த)

சரணங்கள்.

மட்டிலகியகுழன் மாதர்உன்னெழில் கண்டு
மதிமயங்கித்திரியும் வகையறிவேனுன் பண்டு
கட்டிவையும்உமது கருத்தென்னிடஞ் செல்லாது
கதிரொளியின்மின்னேவான் மதியொளியும் நில்லாது
(இந்த)

ஒன்றுந்தெரியாதெனக் கோதிவைத்தீரே சூது
உள்ளபடியேன்செய்வீர் மறந்துவிட்டீரிப் போது
இன்றுசெய்யும்ஜெபத்தால் ஆகுங்காரிய மேது
என்மேற்கோபங்கொள்ளா தெழுந்திருக்கலாமிப்போது
(இந்த)

இணங்கினமாதையிவ் விடத்தினிற்றனே விட்டீர்
எவள்மோசம்போவாளோ என்றுநீர் தலைப் பட்டீர்
அணங்கறவேஸ்ரீராமன் சொன்னபதத்தை யோதி
அளக்கிறீரேபிரக்கியாதி அறிவேனுனுன்றன் சேதி
(இந்த)

---

இராகம்-அட்டாணா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வருந்தவருந்த என்னடாசாமி
வலுமோடி செய்கிறாய்.

அநுபல்லவி.

கருந்தடங்கண்ணி யுமையருளியகந்தனென்றேசிந்தை
யுன்றன்மீதிற்கொண்டு
தினந்தினங்கோடி நமஸ்காரஞ்செய்து
தேவாதிதேவ சகாயனென்றேயெண்ணி (வருந்த)

சரணங்கள்.

உன்னைப்போல்புருஷ ராருமெனக்கிங்
கொருவ ரில்லையோ - மன
துண்டோயில்லையோ அதனையெனக்கிங்
குகந்து சொல்லையோ
பொன்னையளித்துக் கடனுக்குள்ளாக்கிநீ
போன தொல்லையோ - கூடிப்

போகஞ்செய்ய உனக்குமெனக்கும்
பொருத்த மில்லையோ
மன்னவனென்றுன்மேல் மையல்கொள்வா ரில்லை
வழிமறித்துன் மடிபிடிப்பா ரில்லை
என்னசொன்னாலும் மனதிரங்க வில்லை
எனக்கிருப்பதிங் காயிரந் தொல்லை
(வருந்த)

முன்னளந்திட்ட நாழியேவந்து
பின்னளக்கு மடா — மா
மோகனக்கல்லென்றாலும் பளுவேறினால்
ரண்டாய்ப்பிளக்கு மடா
நன்னயக்காரனென் றாலுஞ்சொல்மாறினால்
நாணயம்போகு மடா — இனி
நாளுக்குநாள்முழுச் சந்திரனென்றாலும்
நன்றாய்க்குறையு மடா
பன்னப்பழங்கதை படிக்கிறாய்
பக்ஷமவள்மீதிர் கொண்டு துடிக்கிறாய்
இன்னும்வீணாய்மனப் பாலேன் குடிக்கிறாய்
இருக்குமிஷ்டத்தை யேண்டா கெடுக்கிறாய்
(வருந்த)

பூனைகட்டுந்தோ ழந்தன்னில்வந்து
ஆனைகட்டி நீரோ - தாகம்
பொசிக்கவில்லாத வகையறிந்துபொற்
கிணறுவெட்டி நீரோ
பானைக்களவுகொண்டு அமுது
பரிவாய்க்கொட்டி நீரோ - முன்
பாவசஞ்சொன்ன படிநடந்துநீர்
பண்பாய்க் கிட்டி நீரோ
மானைநிகரொத்த வள்ளிம ணாளனே
வானுக்குபதே சித்தகு ணாளனே
தேன்வயல்சூழ்திருத் தணிகை வாசனே
ஸ்ரீராமன்சொல்லுக் கருள்முரு கேசனே
(வருந்த)

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்

பல்லவி.

மரியாதைக்குக் காலமல்லடி
மானே செந்தேனே.

அநுபல்லவி.

திருவாழ்திருத் தணிகைமாமலைச்
செங்கல்வராய துரைசெய்தமோசடி [மரியா]

சரணங்கள்.

வந்தபோதென்னை வருந்தியகுணம் போச்சே-அடி
மயிலேநான் வருந்தி அழைக்கக்காலம் ஆச்சே
இந்தசேதிசரி மாதாறிந்தாலே
என்ன தானெண்ணுவார் எளிதம்பண்ணுவார் [மரியா]

ஒருபோதினு மறவேனென்றந்தப் பாவி-சொன்ன
உண்மையைநினைந் தால்உருகுதென் ஆவி
உருநிலத்தினில் இதுவோபெருமை
உலகத்தில்மாதர்கள் செய்வது அருமை [மரியா]

---

இராகம்-அட்டாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

சிறுக்கிமயக்கங்கொண்டு திரிகிறீர்போம்சுவாமி
தினந்தினமும் அலைந்து வீணாய்ச் [சிறுக்கி]

அநுபல்லவி.

சிறுக்கிமயக்கங்கொண்டு திரிகிறீரடிக்கடி
சிறுக்கிஉம்மினும்வெகு முறிக்கியென்றேநினைந்து
தருக்கள்செழிக்குந்திருத் தணிகைக்குமரேசரே
சாதனைக்கள்ளிகள்சொன்ன போதனைக்குள்ளகப்பட்டுச்

(சிறுக்கி)

சரணங்கள்.

கருவிழிகளிரண்டும் உலகினிற்கிடையாது
காமன்விற்கரு வண்டோ-எழில்
காட்டுமதிமுகத்தில் வாட்டமிலாதஇதழ்
கதித்தபவளத் துண்டோ

மருவுள்ளமலரச்செண்டோ முலையிரண்டும்
வாருலாவும்அவள் வார்த்தைகற்கண்டோ
பருவரதியோ அவள் வயதுபண் ரண்டோ
பருத்தத்தொடையழகும் நடையினைக் கண்டோ
(சிறுக்கி)

கட்டழகிஇடையாளோ கலந்தணையவேஇந்தக்
காசினிதனில் உமக்கு-நல்ல
கனநயமறிந்திட்டவபிரயசுந்தர
காமாதியோ தமக்கு
இஷ்டமென்னமாய்க் கொண்டீரோ அவளுடனே
இஷ்டத்துக்கிஷ்டபடியே சட்டதிட்டமாய்க்
கெட்டிகெட்டிஉம்மைப்போலோர் புருஷரைக்கண்டதில்லை
கெட்டியாய்த்தினமுஞ்சரிச் சட்டிச்சுறண்டிய மட்டிச்
(சிறுக்கி)

நானைத்தெரியுமவள் நலமுங்குலமுமிப்போ
நான்சொன்னால் தெரியாது—எட்டி
நாலுஞ்சிகைபிடித்துக் கொண்டுநடுத்தெருவில்
நன்றாய்வருவள் மாது
சேனும்உமக்குத்தகாது அவளுடனே
கிட்டியேசிநேகஞ்செய்ய எட்டுணையுந்தான்
வேளைப்பழிக்கும்வடி வேலரே என்னபுத்தி
விந்தையாய்ஸ்ரீராமன்சொல்லை மறந்துதெருக்கள் சுற்றிச்
(சிறுக்கி)

---

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அவளிடத்தினிற்றானே சுகமே—வாழ்ந்
தனுபவிக்கட்டுமே அஞ் சுகமே.

அநுபல்லவி.

எவளிடத்தினிற் கூடி யிணங்கிநுலிஞ்-செம்பொன்
நட்டமில்லாதபோதே ஓட்டப்போகிறாள்மாதே (அவளிடத்)

சரணங்கள்.

மூன்றுதினம்பொருந்தி வாழ்ந்தாலே அவளண்டை
முடிப்பேன்உள்ளங்கையினில் சமர்த்தாய்ஒன்பது கொண்டை
தோன்றுதோஉனக்கவள் இவளைப்பார்க்கிலு பண்டைத்
தோகையேநமக்கேண்டி இரவும்பகலுஞ் சண்டை
(அவளிடத்)

வாணுமென்பவர்தங்கள் கழுத்தில்லிங்கத்தைக் கட்டி
வைத்தாலெத்தனைநாளுக் கிருக்கும்அதுவே கெட்டி
ஆணலழகனென்பாய் அனமேஅது கெட்டது
அன்றுபிடித்தசனி இன்றேநம்மை விட்டது
(அவளிடத்)

எல்லாந்தெரிந்தமங்கை யென்றவளை நாடியே
இகத்துக்கும்பரத்துக்கும் இன்பசுகந் தேடியே
வல்லமையாகஸ்ரீராமன்பதம் பாடியே
மண்ணுலகினில்மிக்க மகிழ்பெறவே கூடியே
(அவளிடத்)

---

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னடிமெத்தப் பிலுக்குறாய்சிறுக்கி
என்னினுமதிகமாக நன்னயந்தெரிந்தவள்போல்.

அநுபல்லவி.

நன்னயங்களெல்லாங்குடி கொண்டிருக்குந்தென்பழநி
நாட்டுக்கிசைந்திடுமெங்கள் தாஷ்டீகவேலர்முன்வந்து
[என்னடி]

சரணங்கள்.

எத்துவித்தைகளும்பல சித்துவித்தைகளும்படித்
திருக்கிறாய்ஒரு பங்கடி-உனக்கு
எத்தனையாயிரம்பங்குப் புத்தியில் மிகுத்தவளென்
றெண்ணினீயோசனை பண்ணடி
புத்தியில்நினைந்துபாரடி யியற்றமிழ்நூல்
புலவரிருந்துமணந் தரும் ஊரடி

உத்தமவேலர்முன்னொரு விரலால்தம்புரு மீட்டிக்
கற்றவித்தைகளைக்காட்டிக் காணவந்தவள் கை நீட்டி
(என்னடி)

சொன்னமொழிதனக்கொரு மறுமொழிகனவிலும்
சொல்லவுந்திறமை ஏதடி-சுப்ரமண்ய
துரைமெச்சிடுங்கலித் துறையும்வெண்பாப்பதங்கள்
தெரிந்தாலிப்போதே ஓதடி
முன்னையிருந்ததைப் பாரடி வேலராலிப்
முத்துச்சம்புலும் முருகும்மெத்த சீரடி [போ
தன்னையறியாதகாமச் சன்னதந்தலைமேற்கொண்டு
இந்நிலத்திலுனக்கிணை யில்லையென்றவைமுன்னின்று
(என்னடி)

கற்றவர்களிக்கும்நல்ல கனதனங்களைக்கண்டு
கன்னனுங்கன்னனே ஆகினான்-உருக்
காட்டவெட்டகிமனதும் நாட்டமூன்றுடையவன்
கண்ணால் அனங்கன் ஆகினான்
கொற்றவேல்ர்க்கிணை யில்லையே என்றஞ்சிவானில்
குலவும்பஞ்சதரு கொடுப்ப தில்லை
வெற்றிசேர்முத்துக்குமார விளங்குங்கொலுவில் வஞ்சி
முற்றிலும்ஸ்ரீராமன்றமிழ்க் கொத்தவள்போலவே மிஞ்சி
(என்னடி)

இராகம்-இந்துஸ்தான் காப்பி, தாளம்-ரூபகம்

பல்லவி.

வருவாரடியே மானே
மயில்வாகனதுரை இப்போதே-வருவா

அநுபல்லவி.

மருவார்திருத் தணிகைமாமலை
வாசர் பிராணேசர் (வருவா)

சரணங்கள்.

குழலை முடியடி—ரத்னக் கொப்புப் போட்டி
பிறையற மஞ்சள்பூசியாடை-புனையடி உந்தன் மனையைத்தேடி
(வருவா)

சாசங்கள் பேச — மணச்—சந்தனம் பூச
வரிசையாகக் கலவி — முறைமை—ஆட உறவாட (வருவா)
மனமகிழ் கொண்டு — உனே—மருவவே இன்று
கனமாய்ஸ்ரீராமன்சொன்ன-சொல்லேகாக்க கலிதீர்க்க (வருவா)

இராகம்-பியாகடை, தாளம் சாப்பு.

பல்லவி.

ஆரைமிரட்ட வந்தீர் ஐயா-உம்மை
அறிவேன்நான் போம்போம் மெய்யா

அநுபல்லவி.

சீருலவுந்தணி காசலவாசரே
திருட்டுத்தனமாயிங்கே இருட்டில்முரு கேசரே (ஆரை)

சரணங்கள்.

நேத்துராத்திரிஎந்தன் வீட்டில்சற்றேஉட் கார்ந்து
நெடுநேரமாச்சுதென்று உடனேயெழுந்து சந்து
பார்த்துப்படைமிரட்டி விழியாள்வீட்டிற் புகுந்து
பணந்தந்தவள் அரைப் பணத்துக்காசை மிகுந்து

[ஆரை,]

ஆதிநாளையிற்றுனே தெரியும்உமது சேதி
அரிவையர்சிலர்சொல்ல அறிந்தேன்உந்தன்பிரக் யாதி
மாதேசிநேகம்ஒருத்தி இல்லையென்றென்காதி ஜோதி
வைத்திரோநானேமலிந் தால்வருங்கடை வீதி

[ஆரை.]

சின்னஞ்சிறுபிள்ளேபோல் என்முன்கையை நீட்டி
சிங்காரமயில்மீதில் ஏறிநடனங் காட்டி
பன்னுஞ்ஸ்ரீராமன்தமிழ்ப் பதத்தின்இசையைக் கூட்டி
படிகதுந்செந்தமிழ்நாட்டில் நொடிக்கும் சுப்ரமண்யரே

(ஆரை.)

கவிகுஞ்சர பதம் முற்றிற்று

ஸ்ரீ ராம கவி ப த ங் க ள்

முற்றுப்பெற்றன.

# விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பட்டணத்தார் பாடல் ஞானார்த்ததீபிகை உரை பத்திரிகிரியார் புலம்பல் உரையுடன் | 2 | 0 | 0 |
| பெரிய சுந்த[illegible] சேகரம் | 0 | 12 | 0 |
| ஞானக்கோ[illegible]ன்றுபாகம் சேர்ந்தது | 1 | 8 | 0 |
| ஷை [illegible] | 2 | 0 | 0 |
| ஸ்ரீமஹாபாரதம் பெரிய எழுத்து படத்துடன் | 10 | 0 | 0 |
| சோதிட அசராதி | 0 | 12 | 0 |
| திருப்புகழ் உரை | 1 | 8 | 0 |

6932-D

கே. பெ. சி. [illegible] ராஜுகோபா[illegible]ர்,

[illegible] 2/2, நம்புலை[illegible]

Title Page only Printed at the S. V[illegible]